தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

18 OCT 1965
MADRAS

எழுதிப் பிழைக்கும் இடக்கர்!

பழுதுற நூற்கள் பதித்திடு
    வாரும் பதித்தவெல்லாம்
புழுதியென் றுலும் புகழ்ந்துரைப்
    பாரும் புகழ்ந்தவற்றைத்
தொழுதுவாங்கிப் படித்திடு
    வாரும் தொலைந்துவிட்டால்
எழுதிப் பிழைத்திடு வாரோ
    இடக்கரும் இங்கிலத்தே!

துலாம் (ஐப்பசி)   தி. பி. ௧௯௯௬.

MADRAS

கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 3 | ஐப்பசி தி. பி. 1996 (1965 அக்டோபர்) | ஓலை 9

எழுத்துக் கிறுக்கர்கள்!

இக்காலத்துத் தமிழ் எழுத்தாளர்கள் என்று தம்மை எழுத்துச் சந்தையில் விளம்பரப்படுத்திக் கொள்பவர்களிடையே ஒரு போராட்டம் எழுந்துள்ளது. தமிழை எந்த நடையில் எழுதுவது என்பதே அது. அதன் எதிரொலியாக ஓரிரு முன்னேற்ற (!) எழுத்தாளர்கள் தங்களுக்கு வாய்ப்பளிக்கும் ஓரிரண்டு தாளிகைகளிலும். தம்மைப் போற்றிப் புகழும் திரைப்படக் கைதட்டிகளிடையிலும் தம் வாய்க்கு வந்த கருத்துகளைப் புதுமை என்ற பெயரால் கக்கிக் கொட்டியிருக்கின்றனர். இது கண்டு உண்மைத் தமிழ் அன்பர்களும், அறிஞர்களும் கவலைப்பட வேண்டா. சிறந்தது நிலைத்தல் என்ற தார்வின் கொள்கைப்படி இழிந்து நிற்கும் அவர்தம் கதைப்புகளெல்லாம் காலப்போக்கில் அழிந்து போவது உறுதி. எத்தனைக் கேடுகள் வந்தாலும், புறநிலை நாகரிகப் போலிப் புன்மை நிலைகள் சூழ்ந்தாலும் அவற்றிற்கிடையிலும் தன்னைக் காத்துக் கொண்டு என்றும் அழியாது நிற்கும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உண்டு. இருப்பினும் இத்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-1.

தகைய சூழ்நிலைகளால் குழப்பம் அடைந்து மயங்கும் மாண வர் ஒரு சிலர்க்கும், தமிழன்பர் சிலர்க்கும் தெளிவுபடுத்தவே இதனை எழுதவேண்டி வந்தது.

அவர்கள் கதைப்பதெல்லாம், "தமிழைச் சிலர் புலவர் நடையிலேயே எழுதியும் பேசியும் வருகின்றனர். அவ்வா றின்றிப் 'பாமர மக்கள்' நடையில் 'எளிமை'யாக எழுத வேண்டும்" என்பதே! இதைச் சற்று விளக்கமாகப் பார்ப் போம். அவர்கள் கூறும் 'பாமர மக்கள்' என்பவர் எவர் என்பதையும், 'எளிமை' என்பது என்ன என்பதையும் முதலில் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

'பாமர மக்கள்' என்ற சொல்லுக்குத் தமிழ் அகர முதலி களில் அறிவிலா மக்கள், மடயர், பேதையர் என்று பொருள் கள் கொடுக்கப்பட்டிருப்பதை யாவரும் பார்க்கலாம். அப் படியே எளிமை என்பதற்கும் (எள்-பகுதி) தாழ்வானது எள்ளத் தகுந்தது, இழிவானது, கீழ்மையானது என்றும் பொருள்கள் தரப்பட்டிருப்பதையும் காணலாம். இவற்றின் படி அவர்கள் கூறுகின்ற கூற்றை இப்படி எழுதலாம். அறிவில்லாத பேதை மக்கள் பேசுகின்ற நடையில் இழிவான, கீழ்மையான முறையில் தமிழை எழுத வேண்டும் என்பதே அது! ஓரளவு அறிவு பெற்றவனும், தமிழ்ப் பற்றுள்ளவனும் குமட்டலெடுக்கும் இக்கருத்தைப் படித்த அளவிலேயே வெறுத்து ஒதுக்குவான் என்பது திண்ணம் என்றாலும், இதனை இன்னும் சற்று விரிவாக விளக்குவதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

'நல்ல, உயர்ந்த, ஊட்டச்சாரம் நிறைந்த உணவு தேவையில்லை; எளிய, தாழ்ந்த, ஓரளவு ஊட்டம் நிறைந்த உணவே போதாதா' என்றும்,

'சிறந்த, உயர்ந்த ஆடைகள் எதற்கு? எளிய, 20-ஆம் எண் நூலில் நூற்ற முரட்டுத்தனமான ஆடையில் ஒரு முழமே உடுத்துக் கொண்டால் போதாதா' என்றும்,

'மேலான, ஆற்றல் நிறைந்த மருந்துகள்தாம் எதற்கு? எளிய, சிறிது அளவே ஆற்றல் வாய்ந்த மருந்துகள் போதாவா' என்றும்,

'மேலான, உயர்ந்த, கருத்து நிறைந்த கல்விதான் எதற்கு? மிக மிக எளிய, தாழ்வான, சிறிதளவே கற்ற கல்வியே போதாதா' என்றும்,

'உயர்ந்த, சிறந்த, பண்பட்ட மனைவியர்தாம் எதற்கு? இழிவான, தாழ்ந்த, பண்பாடற்ற பெண்டிர் மனைவியராக வாய்த்தால் போதாதா' என்றும்,

'உயர்ந்த, சிறந்த, பண்பட்ட நாகரிக வாழ்வுதான் எதற்கு? எளிய, தாழ்ந்த, இழிவான வாழ்க்கை போதாதா' என்றும், இப்புதுமை எழுத்தாளர்களிடம் கூறிப்பாருங்கள். அந்நிலையில் அவர்தம் முகங்களில் காணும் அருவருப்பையும், உள்ளம் விரும்பாமையையும் கண்டுகொள்வீர்கள். அவர்களின் சுற்றுச் சார்ந்த, புறச் செயல்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களிலும் அவர்கள் வேண்டுவன விரும்புவன உயர்வானவையாயும், சிறந்தவையாயும், அறிவு நிரம்பியவையாயும் இருக்க, அக வளர்ச்சிக்கும் அறிவு விளக்கத்திற்கும் அடிப்படையாக உள்ள மொழியைப் பொறுத்த மட்டிலும் அவர்கள் விரும்புவது கீழ்மையை, இழிவை, எளியதை என்றால் அவர்களின் உணர்வு நிலைதான் என்னே! அவ்வாறு அவர்கள் விரும்பும் நடைதான் எது?

'என்னப்பா, எப்படி இருக்கிறாய்? வேலை ஏதாவது பார்க்கிறாயா? இல்லை சும்மா கடைத்தெருவைச் சுற்றிக் கொண்டு இருக்கிறாயா? ஆள் இப்படி இளைத்துவிட்டாயே! மனைவி மக்கள் இருக்கிறார்களா?'—என்பதை,

'ஏய், இன்னுபா ப்பிடி கீறே? ஜோலி கீலி ஏதாச்சும் பாக்கிறையா? லே சுமா பஜாரை ரவுண்டு வந்துகினு கீறையா? மன்சென் என்னமா எளச்சு பூட்டெயெ! சம்சாரம் புள்ளிங்கோ கீருங்களா?'—என்று எழுதும் நடையையா? அல்லது,

'என்னுப்பா எப்பிடி ருக்றே? வேலெ கீலெ ஏதாது பாக்கிறெயா? இல்லெ சும்மா ரோடெ சுத்திகிட்டு ருக்றெயா? ஆசாமி இப்பிடி எளெச்சுட்டெயெ! புள்ளே குட்டி ஏதாது ருக்குதா?'—என்று எழுதும் நடையையா? அன்றி,

'ஏன்யா, எங்கிட்டு ருக்கிய? வேலெ கீலே ஏதாச்சியும் பாக்கிறையளா? லே சும்மாத்தான் கடை வீதியெ சுத்தி வளையெ வர்ரையெளா? ஆளு எம்மா எளெச்சுப் போயிட்டெயிளெ! புள்ளே குட்டிய ருக்கா? என்று எழுதும் நடையையா? அல்லது இவற்றினும் வேறு?

இப்புதுமைக் கிறுக்கர்கள் (அறிவுக் கிறுக்கன்று எழுத்துக் கிறுக்கு) கூறுகின்ற பாமரர்களின் மொழியறிவு எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்று முதலில் இவர்களே முடிவுகட்டிக் கொள்வது நல்லது. அல்லாக்கால் இவர்களுள் ஒருவர் எழுதும் நடையே மற்றவர்க்குப் புரியாது போனாலும் போகும. ஏனெனில் மதுரைப் புகைவண்டி நிலையத்தில் திரிகின்ற கிறுக்கர் எழுதுவது, சென்னை எழும்பூர் நிலையத்தில் படுத்து உறங்கும் கிறுக்கர்க்குப்புரியாது! கோவை நடைபாதை எழுத்தாளர் எழுதுவதைத் தஞ்சை நடைபாதை

எழுத்தாளர் விளங்கக் கொள்ள முடியாது! எனவேதான் இவர்களுக்குள் ஒரு 'பாமர' நடையை முதலில் உருவாக்கி வைத்துக்கொண்டு அதற்கென்று ஓர் அகர முதலி (அதாவது இவர்கள் மொழியில் அகராதி)யை எழுதிவைத்துக் கொள்வது நல்லது. இவர்களுடைய கருத்துப்படி இவர்களுக்கு இலக்கியமோ இலக்கணமோ இன்னுந் தோன்றவில்லை. (ஏனெனில் தமிழ் இலக்கண இலக்கியங்கள் மிகவும் பழையன; இவர்களுக்குத் தேவையில்லாதன; இவர்களின் புரட்சி மூளைகளுக்கு எட்டாதன) இன்னுஞ் சொன்னால் இவர்களின் மொழியாகிய 'பாமர' மொழி (அதாவது 'அறிவிலாத' 'மடயர்' மொழி) இப்பொழுதுதான் அண்மையில் சென்னை நடைபாதையிலும் புகைவண்டி நிலையங்களிலும் தோன்றி வளர்ந்து கொண்டுவரும் ஓர் எளிய (அதாவது இழிக்கத்தக்க கீழ்மையான) மொழியாகும். இவர்களின் மொழி ஒருவேளை விரைந்து வளர்ந்து பல்கிப் பெருகி இப் 'பாரத' நாடு முழுவதுமே பரந்து சிறந்தாலும் சிறக்கும். ஏனெனில் இப் புதுமை மூளையுடையவர்தம் கிறுக்கல்களைத் தவிர வேறொன்றும் வந்து சேராத கிழமை, மாதத் தாள்கள் இவர்களின் தலைநகரான சென்னையில் மிகுதி. மேலும் இவர்களின் கைகளில் உள்ள சென்னை கூவம் ஆற்றுநீர் ஊற்றப் பெற்ற கிறுக்குக் கோல்களைக் கொண்டே தமிழைக் கெடுக்கப் பார்ப்பார்தாம் இவர்களுக்கு வாய்க்கரிசி போட்டு வருகின்றனர்.

இனி, இவர்கள் அல்லாமல் தமிழ்ப் பற்றும், அறிவு நாட்டமும், பண்பும் மிகுந்த உண்மை எழுத்தாளர்களுக்கும், மாணவர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் நாம் சில கருத்துகளைக் கூற விரும்புகின்றோம்.

தமிழக வரலாற்றுக் காலத்திற்கு முன்பே, தமிழ் மக்கள் நாட்டின் பற்பல பகுதிகளிலும் குடியேறிப் பரந்து பட்டு வாழ்ந்தனர். அவர்கள் குளிர்மிக்க மலைப்பகுதிகளிலும் வெப்பமிக்க சமவெளிகளிலும், காடுகளிலும் வாழ்ந்துவரத் தலைப்படுங்கால், ஆங்காங்குள்ள குளிராலும், வெப்பத்தாலும் இட நெருக்கத்தாலும், மக்கள் தொடர்புக் குறுக்கத்தாலும், பலப்பல பகுப்புகளாலும் தமிழ் மொழி நாளடைவில் சிதைந்தும், குறுகியும், உரத்தும், மெலிந்தும், நலிந்தும் வழங்கலானது. எனினும் அஃது அடிப்படை நுண்மையும், கருத்தும் பொருளும் சிதையாமலும், சிறப்புக்குன்றாமலுமே இருந்து வந்தது. அவற்றின் அடிப்படையில் தமிழ்மொழி மேலும் மேலும் திரிந்தும் திசைந்தும் போகாமலிருக்கும் பொருட்டே மொழி வழக்கை வலியுறுத்தி மொழியறிவும் உலகியலறிவும் பண்பாடும் மிக்கத் தமிழ்ச் சான்றோர் எக்காலத்துக்கும் பொருத்தமான சில இலக்கண அமைப்புகளை ஆக்கி மொழிச்

சிதைவைத் தடுத்துக் காத்தனர். அந்நிலை தொல்காப்பிய காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஏற்பட்டதா யிருத்தல் வேண்டும். (விளக்கம் வேண்டுவோர் நேரே வருக) இவ்வரிய இலக்கண அமைப்பாலேயே மொழிநலமும், மக்கள் பண்பும் பேணுத பிறமக்கள் ஆட்சியாலும், மொழிபற்றிக் கவலைப்படாது தம்தம் சமயக் கருத்துகளைப் புகுத்தும் நோக்குடன் தமிழகம் புகுந்த சமய வெறியர் சிலரின் அயரா முயற்சியாலும், தம் பிள்ளைசாகப் பிறர் பிள்ளைக்கும் நஞ் சூட்டும் வழக்கினராகிய ஆரியரின் அரசியல், சமய, கல்விக் குறுக்கீட்டாலும், தமிழ்மொழி அவ்வப்பொழுது சிறிது சிதைந்தும், தளர்ந்தும், மெலிந்தும், நடையிட்டா லும் இன்றுகாறும் தன்னேரிலாத தன் திண்மை, நுண்மை, தாய்மை, தூய்மை, வளமை, இளமை, தனிமை, இனிமை முதலிய எண்ணரும் பண்புகளாலும் நின்று நிலைபெற்று விளங்குகின்றது. தொல்காப்பியர் காலத்தும் அதற்கு முன்பும் எழுதப்பெற்ற அரிய, இனிய, உயரிய, மக்களின் மன மொழி, மெய் வாழ்க்கைக்குத் தேவையான சீரிய இலக்கியங் களும் இலக்கணங்களும் இன்றும் மக்களுக்குப் புரிகின்ற அளவில் இருக்கின்றன எனின், தமிழ் மொழியின் நிலையான தன்மைக்கும், சீரிளமைத்திறத்திற்கும், கன்னித் தன்மைக்கும் வேறு சான்று வேண்டா. இத்திறத்தில் தமிழ்மொழியுடன் இணைத்துப் பார்க்கத்தக்க உலக மொழிகள் பிறவற்றுள் ஒன்றுதானும் தகுதியுடைய வேறு மொழியில்லை. இப் பொழுதுள்ள ஆங்கிலம் சேக்சுபிரியர் கால ஆங்கிலர்க்கும், அவர்காலத்து ஆங்கிலம் கிறித்தவர் மறைநூலான பழைய ஏற்பாடு தோன்றிய காலத்தினருக்கும் சரிவரப் புரிந்து கொள்ளல் இயலாதெனின், பிறமொழிகளின் நிலையாத்தன் மையை விளக்க வேண்டுவதில்லை. இவ்வாறின்றித் தமிழின் நிலைக்கும் தன்மைக்கு, அதன் வழக்கைப் பண்டை இலக்கண நூலார் நூல்வழக்கு, பேச்சுவழக்கு என்று இரு வழக்காகப் பிரித்துப் போந்தமையே காரணமாகும்.

இவ்விரு வழக்குகளுள்ளும் நூல்வழக்கு காலம், இடம், பொருள் இவற்றால் என்றும் மாறுபடாத தாகும். பேச்சு வழக்கோ காலத்தாலும், இடத்தாலும் பொருளாலும் மாறுபட்டு வழங்குவதாகும். இருப்பினும் இம்மாறுபாடு மிகவும் வேறுபாட்டாலும் மொழியடிப்படை யில் நிலைத்திருக்கும்படி செய்வது இதற்குப் பற்றுக் கோடாக உள்ள நூல் வழக்கே. இவ்விரு வழக்குகளையும் நீண்டு பரந்து வளர்ந்த ஒரு பெரிய மரத்திற்கு ஒப்பாகச் சொல்ல லாம். அடி மரத்தினின்றும் பிரிந்த கிளைகள் பல திசை களிலும் பலவாறு சென்று அதனுடன் நெருங்கி மிராமற் போனாலும், அவ்வடி மரமே அவற்றைத் தாங்கிக் கொண்டு

நிற்பதைப் போன்று, சிதைந்தும், திரிந்தும், இழிந்தும் வழங்கும் பேச்சுவழக்கு என்னும் நூல்வழக்கு என்ற அடி மரத்தால் இணைக்கப் பெற்றும் காக்கப்பெற்றும் வருகின்றது. இம்மரத்திற்கு உள்ள வேர்களைப் போல் இவ்விரு வழக்குகளும் இவ்வகையில் அமையாது ஒரே வழக்காக அமையின் மொழி காலப் போக்கில் குறுகியும் சிறுத்தும் இறந்தும் போய்விடும். நூல் வழக்கில் உள்ளபடி அவ்வப்பொழுது பேச்சு வழக்கைத் திருத்திக்கொள்வது அம்மொழி வழங்கும் மக்களுடைய கடமையாகும். பாச்சி, கன்னுக்குட்டி, பன்னிக்குட்டி என்று முதலில் பேச்சு வழக்காய்ப் பேசப் பழகிய குழந்தை நாளடைவில் அவற்றை பால், கன்றுக்குட்டி, பன்றிக்குட்டி என்று நூல் வழக்காய்த் திருத்திக்கொள்கின்றது. இதற்குக் கல்வியறிவு உதவுகின்றது. அஃது அவ்வாறு தன் சொற்களைத் திருத்திக் கொள்ளவில்லையானால் அச்சொற்கள் மேன்மேலும் சிதைந்து பாசி, கனுட்டி, பனிட்டி என்று பொருளும் உருவும் இழிந்து மறைந்து போய்விடும். இவ்வாறு பேச்சு வழக்கில் மக்களின் சோம்பலாலும் கல்வியறிவின்மையாலும் தமிழ்க் கேடர்களின் குலைப்பாலும் கீழ்மை நிலையுறும் தமிழ் மொழி அவ்வக்காலத்து நூல் வழக்கு நோக்கித் திருத்தப் பெறவில்லையானால் சில மொழிகள் போல தமிழும் அழிந்து போவது திண்ணம்.

இவ்வுண்மைகளை விளங்கிக்கொள்ளாத அல்லது விளங்கிக்கொள்ள விரும்பாத இக்காலப் பேதையர் சிலர் தமிழ் மொழியைப் பேச்சு நடையிலும் மிகத் தாழ்ந்த குடியர் நிலையில் எழுதுவதும் பேசுவதும் தமிழை இழிக்கவும், பழிக்கவும், ஒழிக்கவும் செய்யும் முயற்சியாகும். இனி, இவர்களின் இழிந்த நடையே சிறந்த நடை என்று இவர்களின் கற்பிழந்த தன்மைக்குக் காவல் நிற்க முன்வந்துள்ள மொழித்துறையில் படித்துப் பட்டம் பெற்ற ஒரு கிறுக்கர் அண்மையில் ஒரு திங்களிதழில் சிலவற்றைத் தன் மனம் போனபடி கிறுக்கியுள்ளார். அவர்க்காகவும், அவ்விதழ்க்காகவும் நாம் இரங்குவதைத் தவிர செய்வது வேறு ஒன்றுமில்லை.

இனி, பேச்சு வழக்கின்படி எழுதுதல் என்றும் பிழையோ எனில், பேச்சு வழக்கை இன்றியமையாமை நோக்கித் தற்கூற்றாகக் குறிக்குமிடத்தில் குறிக்கலாமேயன்றி, ஆசிரியர் கூற்றாக எங்கும் குறித்திடல் கூடாது. இவ்வாறு தற்கூற்றாகப் பேச்சு வழக்கைப் பயன்படுத்துவதைக் கழக இலக்கியங்களிலும் காணலாம். பேச்சுவழக்கைத் தொல்காப்பியர் ‘சேரிமொழி’ என்பர்.

இனி, நூல் வழக்கிலும் கடிய நடையைக் கையாளுதல் நல்லதா எளிய நடையைக் கையாளுதல் நல்லதா என்னின், கடியத்தக்கக் கடிய நடையையும், எள்ளத்தக்க எளிய நடை

யையும் விடுத்து சொல்லும், பொருளும், சுவையும் கருதித் தக்கவாறு எழுதிச் செல்வதே முறையாகும். எந்தச் சொல்லும் தொடக்க நிலையில் தானறியாத நிலையில் கடின சொல்லே! இதுவன்றி அறிந்த நிலையிலும் வாயில் நுழையாத படி கடினமாக இருக்கும் சொற்களைப் பயன்படுத்தாமலேயே இருக்கலாம். ஆனால் வாயில் நுழையா அத்தகைய சொல் ஒன்றுதானும் தமிழில் இல்லை. இருப்பின் அச்சொல் தமிழ்ச் சொல்லாக இருக்க முடியாது. தமிழ் மென்மையும் இனிமையும் உடைய செவ்விய சொற்களைக் கொண்ட சிறந்த அழகிய மொழியாகும். எத்திறத்தானும் மொழி ஒரு வரம்பு படுத்தப் பெற்று ஓர் உயர்ந்த நிலையில் இருத்தல் வேண்டும். நாம் அதன் நிலைக்கு உயர்ந்து போக வேண்டுமேயன்றி நம் நிலைக்கு அதனைத் தாழ்த்துதல் கூடாது. ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படி தாழ்த்தத் தொடங்கினால் மொழி நாளடைவில் மிகவும் தாழ்த்தப் பெற்று, இழிந்து, சிதைந்து வழக்கொழிந்து போகும். ஒவ்வொருகால் கால, அரசு, மக்கள் மனப்போக்கு இவற்றின் தவிர்க்க முடியாத மாறுதல்களால் மக்களின் பேச்சுவழக்காகிய சேரிமொழி (ஈண்டுச் 'சேரி' என்பது தாழ்த்தப்பெற்ற மக்கள் வாழும் இடம் என்ற பொருளில் கூறப்பெற்றதன்று. 'ஊர்' என்ற பொருளில் கூறப்பெற்றது) தாழ்வுற்றால், என்றும் நிலைத்த நூல் வழக்கைக் கொண்டு அவ்வக்கால் திருத்திக்கொள்வதே எழுத்தாளர்தம் கடமையாகும். அதுவன்றித் தாம் ஏறிய குதிரை விழுந்த சேற்றிலேயே தாமும் குதித்துப் புரளுதல் இழிவு மட்டுமன்று விரும்பத் தக்கதுமாகாது. பயிர் விளைந்து வருங்கால் களைகள் வளர்வதும் இயற்கையே. அஃது இயற்கை என்பதால் களைகளை விட்டுவிட்டுப் பயிரையே பிடுங்கி எறிவது போன்ற மடமையை எங்கும் பார்க்க முடியாது. இக்காலப் புதுமை எழுத்தாளர்கள் என்றும், புரட்சி எழுத்தாளர்கள் என்றும் தம்மைக் கூறிக் கொள்பவர்கள் எல்லாரும் இத்தகையோரே!

இக்கால் தமிழ் மொழியில் விழுந்த பலவகையான களைகளுள் பிற மொழிக் கலவையும் ஒன்று. நாம் நட்ட பயிரில், அதுவன்றி வேறு எப்பயிர் விளைந்தாலும் அதற்கு அது களையே! நெற்பயிரில் கம்போ கேழ்வரகோ கோதுமையோ தலைநீட்டினாலும் அவையும் அங்கு முளைத்துள்ள புற்களைப் போல் பிடுங்கி எறியப்பட வேண்டியனவே! கம்பையும் கேழ் வரகையும் கோதுமையையும் உண்ணக்கூடியவை என்ற காரணத்தால் நெற்பயிரோடு விளையவிடுவார் இலர். காரணம் ஒவ்வொரு பயிரும் ஒவ்வொரு காலத்தது: ஒவ் வொரு வகையான ஊட்டத்தைத் தருவது; ஒவ்வொரு வகை யான உடலுக்கு ஏற்றது. அவை எல்லாவற்றையும் ஒன்றாக

விளைத்து ஒன்ருக அறுவடை செய்ய முடியாது. இது போலவே ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு காலத்தது; நிலத்தது; ஊட்டந்தருவது; ஆற்றலுடையது. இவையன்றி ஒவ்வொரு வகையான மக்களுக்கே ஏற்றது. இவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கலவையாகப் பயன்படுத்திஞல் கம்பு, கேழ்வரகு, அரசி, சோளம், கோதுமை, தினை, சாமை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பொங்கி உண்டால் உடலுக்கு என்ன ஊறு விளையுமோ, அத்தகைய ஊறு உள்ளத்திற்கு ஏற்படும். இனி அவனவன் விருப்பத்திற்கு எதையும் தின்னலாம். என்ன கேடு வேண்டுமாஞலும் பெறலாம். ஆஞல் எல்லாவற்றையும் எல்லாரும் ஒன்ருகச் சமைத்துத்தான் சாப்பிட வேண்டும் என்பது போல் கட்டளை யிடுவதும் சட்டம் போடுவதும் எத்தகைய மடமை! கலப்பு உணவு உடலுக்குத் தேவையே! அதனையும் தனித்தனியே தின்னத்தக்கவற்றை உண்ணலே முறை. அதுவும் தேவை என்று விரும்பிக் கேட்பவர்களுக்கே அது சுவையானதாக இருக்கும். அப்படியல்லாமல் அக்கலவையை எல்லார்க்கும் வலுக்கட்டாயமாகத் தருவது விரும்பத் தக்கதும் அறிவுடை மையும் ஆகாதே! எனவேதான் ஆங்கிலத்தில் எழுதுகையில் தனி ஆங்கிலத்திலும், தமிழில் எழுதுகையில் தனித் தமிழி லும் எழுத வேண்டுமென்று கூறப்படுகின்றது. இப்படிச் செய்யாது போஞல் கட்டாயம்உணர்வு கெட்டுப் பண்பாடு. திரிந்து மாந்தன் தன் தனித்தன்மையை இழந்து விலங்கு போலத் தாழ்ந்து போவான் என்பது உறுதி. அதஞல்தான் தமிழில் இதுவரை இத்தகைய தமிழ்க்கேடர்களால் வலிந்து புகுத்தப் பெற்ற பிறமொழிக் களைகளைக் களைந்து தனித் தமிழில் எழுதவும் ஓரளவு பேசவும் முயற்சி செய்யப் பெற்று வருகின்றது. இத்தகைய முயற்சி அந்த எழுத்துக் கிறுக்கர் களுக்குப் பிடிக்கவில்லையாஞல் அவர் விருப்பப்படி எதையும் எழுதிக்கொள்ளலாம். படித்துக்கொள்ளலாம்; சுவைத்துக் கொள்ளலாம். அதற்குத் தடையில்லை. ஆஞல் இவற்றைத் தெளிவாக உணராத அச்சோம்பேறிகள், தாம் தாம் கற்றதே மொழி யென்றும், அறிந்ததே சொல்லென்றும், கண்டதே அளவென்றும், பிறரும் அப்படிச் செய்வதே முறை யென்றும் பிழைபடப் பேசி 'எளிய' முயற்சியில் 'அரிய' பொருள் ஈட்டும் நோக்கங் கொண்டு, செல்லா நல்லிசைத் தமிழ்க்கு எல்லா வகையாலும் இடர் விளைப்பதன்றி மக்களையும் குழப்பத்திற் குள்ளாக்கி வருகின்றனர். அவர்தம் புல்லிய உரைகளை ஒள்ளிய அறிவிஞர் செவிமடுக்கார்.

மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்;
விழியிலார்க் கேது விளக்கு!

—பெருஞ்சித்திரன்

—சாறும் சக்கையும்—

—புலவர் தி. நா. அறிவுஒளி—

தமிழினம் உணர்ச்சிக் கொடுமுடியில் வாழ்ந்த நல்லினம். ஆழ்ந்த உணர்ச்சிகள் உயிரையே பற்றியிருக்குமாறு வெற்றி வாழ்வு நடாத்தியவர் தமிழர். உணர்வுச் சிதைவை அடையாது சிறந்த நிலையில் இருந்த தமிழினம் சிறிது சிறிதாக உணர்வு குன்றிய இனமாக ஆக்கப்பட்டு, இன்று உணர்ச்சி மாய்ந்த உடல்கள் கூட்டமாகத் தள்ளப்பட்டிருக்கிறது. காதல், கற்பு, மானம், சால்பு, ஆண்மை என்பவை ஆழ்ந்த உணர்ச்சியின் நெடுநிலையாற்றலால் அமைவன, இந்நெறி சால் பண்பினைச் சிறிது சிறிதாக இழந்து வறியநிலையடையச் செய்யக் கையாளப்பட்ட எதிர்ப்புச் சூழ்ச்சி முறை தமிழக வரலாற்றில் நனி தெளிவாக விளக்குவதற்குரியதாம். ஆயின், தமிழக வரலாறு இதுபற்றி இன்னும் நன்கு ஆராயவில்லை.

ஒரு பண்பட்ட உயர் சால்புடைய இனம், பிறரிடமிருந்து பண்புகளைக் கைக்கொள்ளும் பொழுது, தம் பண்புகளைவிடச் சீரியவற்றையே கைக்கொள்ளல் வேண்டும். ஆயின், எவ்வாறோ இத்தெளிந்த கொள்கையை உணரவியலாமல் இடைக்காலத் தமிழினம் தலையாய ஒரு தவற்றைச் செய்திருக்கிறது. தமிழினப் பண்புகளைவிடக் குறைந்த பண்புகளைப் பிழையாக ஏற்றொழுக முற்பட்டுவிட்டமை காண்கிறோம். ஒரு மன்பதையின் பொதுவாழ்வுக் கோட்பாடு, அம்மக்களினத்தின் தனிப் பண்புகள், சிறப்பியல்புகளைக் காத்து, அஃது மேன்மேலும் வளர்ந்து சீருறுதற்கேற்பவே அமைதல் வேண்டும். நாட்டு ஒழுகலாறும், குடிச் சான்றாண்மையும் இக்கொள்கைக்கு ஏற்பவே அமைந்திருந்தன பண்டைத் தமிழர் வாழ்வியலில்.

தமிழ் மரபு, 'உள்ளத்தையும் வாழ்வொழுக்கத்தையும்' பற்றியே உயர்வு-தாழ்வை உருவாக்கியது. ஏழை மகனோ-மகளோ ஒழுங்கு பிறழ்ந்தால் உலகம் எவ்வளவு அவர்களை இழித்துப் பழிக்குமோ அவ்வளவுக்கு நாடாளும் மன்னனையும் அரசியையும் தமிழினம் அந்நிலையில் இழித்துப் பழிக்கும், இன்னும் கூறுவோமானால் தனியனைவிட மன்னனைச் சான்றோர் சற்றுக் கடுமையாகவே—கொடுமையாகவே—பழிப்பர். பேகன் தனி வாழ்வில் தவறு செய்தான்! இந்நாளில் இப்படிப்பட்ட தவற்றைப் பேசினாலே, 'என் தனி வாழ்வில்—வாழ்வுரிமையில்—குறுக்கிடாதே!' என 'உரிமைச் சிக்கலை' எழுப்பி வாயடக்கிவிடுவர் 'தவறுவோர்'. ஆனால் அன்று வள்ளல் பேகனைப் பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய புலவர் பெருமக்கள் அவன் தனி வாழ்வுத் தவற்றுக்காக இடித்துரைத்தனர்! மன்னன்

என்பவன்—ஆட்சியிலிருப்பவன்—நேர்மையாக வாழ்ந்தால் தான் பொதுமக்கள் நேர்மை வாழ்வில் நம்பியொழுகுவர் என்பதை உணர்த்தினர்.

பரணர் பேகனை, 'அருளா யாகலோ கொடிதே!' (புறம்: 144) என வன்மையாக இடித்துப் பாடினர். ஓரரசனை எந்த அளவுக்குத் தாக்கி வற்புறுத்திக் கூறமுடியுமோ, அதைக் கடந்தே கடிந்துள்ளார். ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் ஆண் கற்பில் தலைசிறந்த ஒழுக்க வேந்தனாகத் திகழ்ந்தான். ஆண்மை உணர்ச்சியினை ஆழ்ந்த கற்பின் எல்லையிலே வாழவைத்த உரவோனவான். 'தன் பகைவரைப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்யாவிடின், என்னுயிர்க் காதல் மனைவியை விட்டுப் பிரிவேனாக!' என வஞ்சினம் முழங்கினான்! உணர்வின் உச்சியைத் தொடும் அம்மன்னனின் மாசில் மனம் நம்முள்ளத்தைக் கொள்ளை கொள்கிறதன்றோ? ஆன்ற கற்பொழுக்கத்தின் அண்ணலாய், அறச் செம்மலாய், உலக வரலாற்றில் ஒப்பின்றித் திகழும் ஒரு பெரும் புதுப் பிறவியாய் பூதப்பாண்டியன் புதுமைப் புரட்சியாளனைப் பழங்காலத்திலேயே திகழ்ந்தமை அறிவோம். 'அறன் நிலை திரியாமல் அன்போடு பொருந்திய சான்றோர் அற அவையத்தில் அறவோனுக்குரிய திறன் இல்லாத ஒருவனை—நேர்மை குன்றியவனை—அறமன்றத் தலைவனாக்கி, நாட்டு மக்களுக்கு நல்லமுறை கிட்டாமல் ஒரு மன்னன் (அறத்துறையில்) பிழை செய்தால்; அவன் ஆட்சி கொடுங்கோலாட்சி என அறிஞராலும் மக்களாலும் இழித்துப் பழிக்கப்படும்; அம்மன்னன் அரசு நிலைபெறாது. நேர்மையற்ற அறமுறை கேடுதரும்; கீழ்மைதரும். அறம் பிறழ்ந்த நாட்டில் அல்லோர் மகிழ, நல்லோர் துன்புறுவர். ஆதலின், மெலிகோல் செய்யாது செங்கோல் ஓச்சுதலே ஆட்சிக்கு அரண்' என அற்றைத் தமிழர் அறுதியிட்டறிந்திருந்தனர்.

ஆட்சி, அறத்துறையில் தலையிடாமல், அறத்துறையை உரிமையோடும் நேர்மையோடும், உண்மையோடும், நடுநிலையோடும் இயங்குமாறு செய்து வந்த தலைசிறந்த உரிமை நிலையை பூதப் பாண்டியன் கூற்றாலேயே தெளிவாக அறிகின்றோம்.

"மடங்கலிற் சினைஇ மடங்கா உள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னொடு பொருதும் என்ப; அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறம் காணேன் ஆயின், சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக!
அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்

மனவழி வாழ்க்கை (மனவியல்)

—மன்றிலாடி.

மகிழ்ச்சி, துயரம், சினம் போன்ற மனவெழுச்சிகள் மிகைப் படுங் காலத்து, நமது அறிவும், எண்ணத் திறனும், சூழலுக் கேற்றவாறுன செயல் முறைகளும் தாக்கப்படுகின்றன. அள வுக்கு மிஞ்சிய மனவெழுச்சிகள் சற்று நடுத்தர அகவைக்கு மேற்பட்டவர்களுக்குக் குருதிக் கொதிப்பு போன்ற ஏதங்களேயும், எதிர்பாரா விளேவுகளேயும் விளேவிக்கலாம். பிரஞ்சு நாட்டில் நடந்த நாடகம் ஒன்றில், கட்டுக்கு மீறி ஒரு பெண் சிரித்துச் சிரித்து உயிர்துறந்தாளாம். திடீரெனக் கடுஞ்சினமெழுந்து அதனே அடக்க முடியாது உயிரிழந்து விழுந்தனர் சிலர். துயர

(முன் பக்கத் தொடர்ச்சி)

> *திறன் இல் ஒருவனே நாட்டி, முறைதிரிந்து*
> *மெலிகோல் செய்தேன் ஆகுக...*
>
> (புறம் 71—ஒல்லேயூர் தந்த பூதப்பாண்டியன்)

புறத்துறையாயினும் அகத்துறையாயினும் இத்துணைச் சீரிய பயனுர் பண்பு கமழ வாழ்ந்த தென்புலம், பயனில் பண்பினே நாடுதல் நன்ருே? ஆராய வேண்டுகிறேன்.

நேற்றைவிட இன்று வளரவும், இன்றைவிட நாளே இன்னும் வளரவும் வேண்டும். அதற்கு முயலாமல், நேற்றை விட இன்று தளரவும், இன்றைவிட நாளே மேலும் மெலியவும் கூடாதன்ருே? தமிழினம் முன்னேப் பழம் பண்பை—உணர் வழகைத்—தெளிந்து, பின்னேப் புதுமை வாழ்வில் அப்பண்பு நலனும் உணர்வொழுங்கும் மேலும் மிளிர்ந்து பொலியச் சிறக்க வேண்டும். தனி வாழ்வுக் கொள்கை வேருகவும், (அதே மக்களின் கூட்டான) பொதுவாழ்வுக் கொள்கை வேருகவும் இருக்கும் இக்காலம் உணரவேண்டிய ஒண்மைக் கருத்து இது. தனி ஒழுக்கம் சிதையாத பொது ஒழுக்கம் உலகில் நிலேபெற வேண்டும். தனிவாழ்வுச் சீர்மையைத் தகர்க்காத பொதுவாழ்வுச் செம்மை வளர வேண்டும். இயக்குபவர் தெளிவாக இயங்கினுல்தான், இயக்கப்படு வோர் நலமாக இயங்குவர். எந்தப் பண்புகள் தமிழர் உணர்ச்சிகளே உயர்வு நோக்கிச் செலுத்துமோ, அந்தப் பண்புகளே வரவேற்போம்; ஏற்போம்; போற்றுவோம்; கடைப்பிடித் தொழுகி உயர்வோம். எந்தப் பண்புகள் தமிழர் உணர்வைக் கெடுக்குமோ, அவற்றைப் புறக்கணிப் போம்; மறப்போம்; சிறப்போம்!

மேலீட்டால் உடனேயோ, அன்றி நாளடைவிலோ நோயுற்று, நெஞ்சாங்குலை ஊறுபடுத்தப்பெற்று இறந்தவர் உளர். அதனால் தான் ஆறுவது சினம் என்றார் மூதாட்டியார். நெடுநாட்களாக அமைதியும், அடக்கமும், அருளும் மேற்கொள்ளினும், ஏதோ சில தடவைகளில் நம்மையும், நம் தீர்மானங்களையும், இயற்கையையும் மறந்து மனவெழுச்சிக்கு இடந்தருகிறோம். அதனால் நிகழும் செயல்களாலும், நம் உடலில் விளையும் மாறுதல்களாலும் கேடுறுகிறோம்.

நமது உடலில் பல நீர்ச்சுரப்பிகள் உள்ளன. ஒவ்வொரு வகை மனவெழுச்சி பிறக்குங் காலத்தும் ஒவ்வொருவகை நீர் சுரக்கிறது. அந் நீர்மங்கள் இயற்கையளவுக்கு அதிகமுறின் சம இயக்க நிலையைக் கெடுக்கும் நஞ்சாகின்றன. அச்சத்தினால் குருதி உறைந்து குருதி ஓட்டம் குறைபடலாம். மணவினையால் மகிழுவோர் உடல் வளம் பெற்றுப் பருமனுதல் காண்கிறோம். பொதுவில், ஓரளவுக்கு நிறைவும், இன்ப மன நிலையும் வாய்க்கப் பெறுவார்தம் உடலில் ஊறும் நீரினும், செரிமானக் கருவிகளின் ஊக்கத்தாலும் உடல் வளர்ச்சியுறும் எனலாம்.

உடல் ஒரு பொறி போன்றது. அப்பொறியைச் செவ்வனே இயக்கப் பக்குவமுள்ள ஓட்டுநர் தேவை. பகுத்தறிவு அப் பொறுப்பை மேற்கொள்ளலே ஏற்புடைத்து. பழக்கம் பெரிதும் பயன் தரும். நெடு நாட் பழக்கத்தால் செயல், நடை முறைகள் ஒழுங்குபட்டுவிடின் அறிவூக்கத்துக்கு ஓரளவு ஓய்வு ஏற்படும். இயல்புவினை கடந்த அரிய நிலைகளில் மட்டும் அறிவு முன்வந்து கண்காணித்தல் போதுமானது. நற் பழக்கங்கள் மன முயற்சியை மட்டுப் படுத்துவன. தவிரவும் பெருமளவு நன் முயற்சியி லீடுபடுவார், அவற்றிற்குப் புறம்பாக இயங்க நேரும் பொழுது அவர்தம் இயற்கைப் பண்புகளும், மனச்சான்றும் முரண்செய்து அவ்வீடு பாட்டைத் தடுக்கின்றன.

நாம் மட்டுமன்றி, நம் பொறுப்பிலுள்ள பிறரும் நற்பழக்கங்களை மேற் கொள்ளப் பெரிதும் முயலல் வேண்டும். குறிப்பாக இளங்குழந்தைகளை நற்பழக்கங்கள் அமையுமாறு பயிற்றுவித்தல் வேண்டும். இவ்வகையில் மேல் நாட்டின் உயர்குடி மாந்தர் தனிக்கவனம் செலுத்துகின்றனர். செயலுக்கும், பொழுதுக்கும் ஏற்ற உடைகளை அணியும் முறை, அயலார்க்கு வணக்கம் கூறும் முறை, பேசிப் பழகும் முறை, சீரான உணவுப் பழக்கங்களை மேற் கொள்ளச் செய்தல் ஆகியவற்றிலும், 'தெய்வந் தொழல்' போன்ற பண்புகளை மனதில் பதிப்பதிலும் அவர்கள் மேற்கொள்ளும் வழிகள் எல்லாராலும் பின்பற்றத் தக்கன. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டு' மாகையால் இத்துறையில் மேற்கொள்ளப் பெறும் முயற்சிகள் வீணுகா. தொட்டிலை ஆட்டும் கைதான் உலகை ஆளும்' என்று நெப்போலியன் கூறியது போல, தாய் தன் குழவிக்குப் பாலுடன் குழைத்துப் புகட்டும்

ஊக்கமும், திறனுமே வாழ்வைப் பயனுறச் செய்வன. 'விதை யொன்று போடச் சுரையொன்று முளையா' தென்னும் உண்மை யும் இளமைப் பழக்கத்துக்கு ஒவ்வும்.

வாய்ப்புகளும் சூழ்நிலைகளுமே பெரும்பாலும் வாழ்வை உரு வாக்குவன. தெருவில் ஆடிப் புழுதியில் தோயும் குழந்தைக்கும் அழுக்கையும் தூசையும் நஞ்சென விலக்கப் பழகும் குழந்தைக்கு மிடையே பிற்கால வாழ்வில் பேரளவு மாறுதல், வேறுபாடு காணக்கூடும். குடிவெறியால் மனைவி மக்களைப் புடைக்கும் ஒரு வனின் குடும்பத்தில் வளரும் குழந்தைகட்கும், ஒழுக்கமும் உயர் நோக்கமுமுடைய ஒருவனின் வீட்டில் வளரும் குழந்தைகட்கு அங்ஙனமே வேறுபட்ட வாழ்க்கைப் பாதைகள் அமையும். தம் மக்களின் நலன்களை உறுதிப்படுத்த, தம் நடைமுறை வாழ்க் கைப் பழக்கங்களில் அடக்கமும், கட்டுப்பாடும் பெருந்தன்மையும் பூண்டொழுகல் அறிவறிந்தோர் கடமையாகும். அஃதுணரா மாந்தர் தம் மக்கள் நெறிபிறழ்ந்து துன்புறலைக் கண்டிக்கத் தகுதியற்றவராகின்றனர்.'' என்று பழி சுமத்தப் பெறும் தந்தையர் பேரளவில் உள்ளனர். இவை யாவும் குடும்பப் பொறுப்பேற்பார் தம் மனதை ஏற்ற வழியில் பண்படுத்தாமை யால் பெறப்படும் கொடிய விளைவுகளே!

சிலர் இன்ப நுகர்ச்சியே வாழ்க்கையின் இலக்கெனக் கொண்டு தேவையற்ற, உடலுக்குக் கேடு விளைக்கும் பழக்கங்களை மேற் கொண்டு பின் உடல் தளர்ந்த காலத்துத் திருந்த முயலு கின்றனர். பழக்கம் முதிர்ந்தால் களைவது, காழ்ப்பேறிய பெரு மரத்தைக் கைக்கத்தியால் வெட்டுவது போன்றதே. ஆய்வும், மனத்தூய்மையும், உறுதியும் இளையோர்க்கே மிகுதியும் வேண்டும்.

தந்நலங் கருதலும், பொருளீட்டலும் ஓரளவுக்கு வேண்டப் பெறினும் அவற்றிற்கு மிதமிஞ்சி இடமளித்தல், பிறர் உரிமை களைக் கெடுப்பதோடு, எதிர்ப்பும், பகையும், அமைதியின்மையும் ஏற்பட வழிவகுக்கும். பணங் குவிப்பதே நோக்கெனக் கொண்ட சிலர் ஏழையோரிடம் பேசவும் பழகவுங்கூட மறுக்கின்றனர். இத்தகைய சூழல்கள் ஏற்படும் பொழுது, வாழ்க்கையின் குறிக் கோள்தான் என்ன வென்பது மனதி லெழுகிறது. தமக்கும் தம்மைச் சார்ந்தாருக்கும் ஏந்து (வசதி) செய்து கொள்வது ஓரளவு சரியேயாயினும், பல தலைமுறைகட்கு வேண்டிய பொருளை ஒருவரே குவித்தல் சரியன்று. அனைவரும் சமமாய் நுகருமாறு பரப்பப பெறறுள்ள பொருள்களை ஒருவனே குவித் தலும், பிறர் இரத்தலுமான பற்றுக் குறைநிலை தவிர்க்கப் பெற வேண்டுமாயின், ஈட்டலும், பேணலும், நுகர்தலும், வழங்கலும் முறைப் படுத்தப் பெறல் வேண்டும்.

தந்நலங் கருதா நல்லோர் சிலர், உலக மக்களிடம் தமக்குள்ள வெறுப்பைப் பெருக்கிக் கொண்டு மிகுதியாகத் துன்புறுவர். உழைப்பும், பாடும், தொண்டும் தேவையே. ஆனல் பலன் நம் கையில் இல்லை. கடமையைப் பழுதின்றிச் செய்து முடித்துப் பலனை இறைவன் தீர்ப்புக்கு விடுதலே தக்கது. உள்ளந் தோய்ந்த வினையாண்மையின் முடிவில் (எக்காரணத்தாலோ) தோல்வியுறுவதில் இழுக்கொன்று மில்லை. அதற்கு வருந்துவதால் எவர்க்கும் நலமில்லை. எண்ணியதைச் செய்தோம் என்ற நிறைவு மட்டுமே நம்முடையது. வெற்றியால் மிக்க உவப்பும், தோல்வியால் கசப்பும் உறுதல் வேண்டுவதன்று. பன்முறை தடுக்கி விழுவதில் சிலர் அயர்ச்சியுறுவர். அதனைத் தவிர்க்கும் வழி, போற்றத் தக்க மாபெரும் ஈடுபாட்டில் கவனத்தையும் முயற்சியையும் செலுத்துவதாகும். இறக்கும் தறுவாயிலிருந்த பாவலரொருவர், "என்முழுக் கவனத்தையும் கவர்ந்து, என் முயற்சிக்கு ஊக்கந்தரும் ஏடல் (யோசனை) ஒன்றைக் கூறு; நான் சாவினின்றும் தப்பி வாழ்கின்றேன்" என்று சொன்னர். உழைப்பு மனத்தை ஊக்குவித்து, உயிர்ப்பைப் பெருக்குமென்பதை உணர்ந்த மெய்யுணர்வாளர் அவர்.

ஒரு வகை உணர்ச்சிப் பெருக்கை மற்றொரு வகை வினையாற்றலாக மாற்றி வளம்பெறச் செய்ய இயலும்(Sublimation). காதற் பெருக்குள்ளவர் தம் காதல் நிறைவேருத பொழுது, அந்த மனவெழுச்சியை ஆக்கத்துறையில் மாற்றி அரிய நூல்களும், கலைப் பாவியங்களும் இயற்றியுள்ளனர். உணர்ச்சி விரைவற்றவர்கள் கற்பனைக்குத் தகுதியற்றவர்கள் போலும். உணர்ச்சிப் பெருக்குள்ளவர் தாம் புதுமைக்கும், ஆராச்சிக்கும், கற்பனைக்கும் தகுதியுள்ளவார்கள். அவர்தாம், தமது ஏமாற்றம் காரணமாய் ஏக்கமும், மனமுறிவும் வருத்தமும் உருது கலைகளிலும், அரும் பணிகளிலும் ஊக்கமுற்றுத் தொண்டாற்றி அமைதியும் வெற்றியும் பெறுகின்றனர்.

நம் இறைவன் ஒவ்வொருவரையும் அரும் பணியாற்றும் தகுதியுடன் படைத்திருக்கின்ருன். உலகம் நம் ஒவ்வொருவரிடமிருந்தும் வினைகளை எதிர் பார்க்கிறது. அஃது என்னவென ஓர்ந்து அவற்றைச் செவ்வனே நிறைவேற்றிப் பிறவிப் பயனையடைய வேண்டுமெனும் பொறுப்புமிக்க கடமையை உணர்வோமானல் வாழ்க்கைக் கனமும் தோல்வித் துன்பமும் நம்மைத் தாக்க மாட்டா. சிறு குழந்தை கீழே விழுவதால் சோர்வுற்று நடப்பதை நிறுத்தி விடுவதில்லை. மீண்டும் எழுந்து, முயன்று நடக்கிறது. பட்டறிவுகளே நம் தேர்ச்சியை வலுப்படுத்துகின்றன. நம் முனைப்புகள் உலகை உய்ய வைக்கட்டும்.

அறிவுணர்வு

—மெய்ம்மைப்பித்தன்.

தீராத நீர்விடாய்!
தவிக்கின்றேன்.
சுற்றிச் சூழ்ந்த பாலைநிலம்!
வற்றிய நாக்கு! வரண்ட வாய்!
காய்ந்த இதழ்! கருகிய முகம்!
அணவிட்ட மீன்களென விழிகள் துடிக்கின்றன!
மூச்சில் நெருப்பு!
உடல் நெருப்புக் குன்றமாய்க் கனல்கின்றது.
எனக்கு வேண்டியது நீர்!
குடலை உப்பவைக்கும் உணவுக் கவளமன்று. வேண்டியது நீர்!
என் கைகளில் பொன் நெளிகள்!
ஐயகோ?
எனக்கு வேண்டியது நீர்!
நெற்றி நெருப்புத் துண்டாய் பொறிபரக்கச் சுடுகின்றது!
ஐயகோ? எனக்குத் தேவையானது ஒரு மிடறு நீர்!
நீர்! நீர்!
நீர் என்னிடம் வருமா? ஓடுகின்றேன்.
வான், நிலம், காற்று, காட்சி அத்தனையும் ஒரே நெருப்பு! எனக்கு வேண்டியது ஒரு வாய் நீர்!
அலைகின்றேன்... தவிக்கின்றேன்! உயிர் சிறிது சிறிதாகக் கனன்று பாலை வெளியின் சூருவளியொடு கலக்கின்றது.
எனக்கு வேண்டியது ஒரு கை நீர்!
கன்னங்கள் வலிக்க வலிக்க கொப்பளித்துத் துப்பிய நீரை நினைக்கின்றேன்!
கைகள் சிவக்கச் சிவக்கத் தேய்த்துத் தேய்த்துக் கழுவிய நீரை நினைக்கின்றேன்!
நாளொரு பொழுதும் என் மேனியைக் கழுவிய நீரை நினைக்கின்றேன்!
கால்களின் உட்புற அடிகள் வெளிருமாறு தோய்த்துத் தேய்த்துக் கீறிக் கீறிக் கழுவப் பயன்படுத்தப் பெற்ற நீர்ப் பரப்பு எவ்வளவு என்று நினைக்கின்றேன்.
அந்த நீரெல்லாம் சேர்ந்து அருவியெனக் கொட்டுவது என் நினைவில் தெரிகின்றது.
ஐயகோ!
எனக்குக் குளிக்க நீர் வேண்டாம்!
குடிக்க ஒரு வாய். இல்லை ஒரு குவளை நிறைய, இல்லை இல்லை ஒரு செம்பு வழிய, இல்லை நான் நினைக்கத் தெரியாத—தேவை உணராத பேதை—ஒரு கொப்பறை துளும்ப—

போதாது ஓர் ஆற்று நீர் முழுமையும்... மழையே... நீ வரக் கூடாதா?

வாய் திறந்து, வானத்தை நோக்கி அண்ணாந்து மெய் யெல்லாம் குளிரக் குளிர, ஆசைதீர, விடாய் அடங்க அடங்க குடித்துக் கொண்டே இருப்பேனே!

எனக்கு வேண்டியது நீரே!
சிறிது நீர்... அதோ அங்கே
மிகச் சிறிய அளவில்
நீரோ... கழி நீரோ?
எதுவாயிருப்பினும்... என்ன?
மூக்குச் சுவைக்கு நான் அடிமையல்லன்!
நாக்குச் சுவை இப்பொழுது அறவே வேண்டாம்.
கண்களா குடிக்கப் போகின்றன?

என் சூடேறிய குரல்வளையைக் குளிர்விக்க அது போதும்... அப்பா...

இன்பம்... இதுநாள் வரை நான் காணாத உயிர் மீட்சி!

நான் தேடிப் பெற்ற நீர், வறண்ட என் நாக்குக்கு நல்லமிழ்தம்...!

வயிறு குளிர்ந்தது... நாக்கு குளிர்ந்தது...
ஆனால்... ஆனால்...
அறிவுப் புனல் என் அறியாமை விடாய் தணிக்க...?
அஃது எனக்குக் கிடைக்காத ஒன்று!
அந்த அறிவுப் புனல் எங்குக் கிடைக்கும்?

அது மழையாகப் பெய்யுமா? குளமாகத் தேங்கி இருக்குமா?

ஆறாக ஓடாதா? கடலாகப் பரந்து கிடக்காதா?

அப்படியிருப்பின் வாரி வாரி, அன்று அன்று அதிலேயே முழுகி முழுகி... என் வாழ்வைப் போக்கிவிடுவேனே?

இயற்கையே!
அறிவை எங்குப் பொழிவிக்கின்றாய்?

நாவின் விடாய் தீர்க்க நான் நாற்பது கற்கள் ஓடியிருப் பேன்.

அறிவு விடாய் என்ன? அடங்கும் விடாயா?
தெவிட்டுவதா? குமட்டுந் தகையதா?
உண்ண உண்ணப் பசிப்பது;
குடிக்கக் குடிக்கத் தவிப்பது,
மெய்யுறழ்ச்சி,
வாய்ச்சுவை,
கண்காட்சி,
மூக்கு மணம்,
செவி இசை!

(தொடர்ச்சி 6ரு-ஆம் பக்கம் பார்க்க)

துன்பம் தொடர்க!

துரை-மாணிக்கம்

"பாட்டெழுதிக் கைசோர்ந்தோம்; பண்ணிசைத்து வாய்வலித்தோம்!
ஏட்டில் பலவாறாய் எழுதி முழக்கமிட்டோம் !
கால் நடையாய்ச் சென்று மணிக்கணக்காய்க் கண்விழித்து
நால்வகையா நம்மவர்க்கே வந்த நலிவெல்லாம்
ஒக்க எடுத்துரைத்தோம்! ஓங்கு மறஞ்சொன்னோம்!
தக்கவே நல்வினைகள் தாழா திவண்புரிந்தோம்!
மேலைத் திருநாட்டின் மேன்மையுறு நற்கலைகள்,
வேலைத் திறங்கள், அறிவாம் வியன் நூர்கள்,
சான்றோர் வரலாற்றுச் சாகா நறுஞ்செயல்கள்,
ஆன்ற அறமொழிகள் முற்றும் அழகுறவே
செந்தமிழிற் செய்து தமிழர் சிறப்பெய்தத்
தந்து பயன்விளையும் தக்கநிலை காத்திருந்தோம்!
அம்மாவோ! ஈங்கிவற்றால் ஆனபயன் ஒன்றுமில்லை!
இம்மியள வேனும், ஓர் எள்ளின்மூக் கத்துணையும்
எந்தமிழர் முன்னேற்றம் எய்தவில்லை என்றறிந்து
நொந்த உளத்தோடும் நொய்ந்த உறுதியோடும்
சாகாமற் சாகின்ற மெய்யோடும் சாய்ந்து விட்டோம்!
வேகாமல் வெந்து மனம்வெம்பி வீழ்ந்துவிட்டோம்!

இன்சொல்லாற் சொன்னோம்! எரிச்சலொடும் கூறியுள்ளோம்!
புன்சொல்லும் வீசினோம்! புண்படவும் சொல்லிவிட்டோம்!
என்னவகை சொன்னாலும் எந்தமிழர் மண்ணுடலில்
சின்னதொரு நல்லுணர்வும் சேர்ந்தபுது மாற்றமொன்றும்
இன்னும் முளைக்கவில்லை; என்றறிந்து யாமயர்ந்தோம்!
மின்னலதும் காணோம்! இடியிடிப்பும் மேற்காணோம்!
கால மழைபார்த்துக் காத்திருந்து சோர்ந்துவிட்டோம்!
கோல விளைவுக்குக் கூம்பியிருந் தோய்ந்துவிட்டோம்!

ஈங்கிவர்க்குச் செய்துவந்த எல்லையிலா நன்முயல்வும்
தேங்கிநின்ற நல்லுணர்வும் தீதில் அறவினையும்
காட்டு விலங்குகளின் கூட்டத்திற் காட்டினமால்
ஈட்டும் பெரும்பயனிங் கெத்தனையோ கண்டிருப்போம்:

வெம்புலியும் கற்றிருக்கும்; வல்லரிமா பாட்டெழுதும்!
பம்பும் மலைப்பாம்பும் பண்பாடு பெற்றிருக்கும்!
யானை அரசமைக்கும்; வெங்கரடி யாழிசைக்கும்!
பூனை அறம்பயிற்றும்! புட்களினம் பாட்டிசைக்கும்!
குள்ளநரி ஒற்றாடும்! கோநாய்கள் ஊர்காக்கும்

துள்ளுமிவ மான்களினம் தோதாய்க் கலைபயிலும்!
கூன்முயலும் ஆயும்! குரங்கு பொறியியக்கும்!
கானெருமைக் கூட்டமெலாம் கட்சித் தலைமைபெறும்!
ஒட்டக் குதிரை உடல்நலத்தைப் பேண வரும்!
காட்டுக் கழுதையினம் செய்தொழில்கள் கற்றிருக்கும்!
ஒட்டை உழவு செயும்! பன்றி பொருள்விற்கும்!
நெட்டைச் சிவிங்கி நெடுமரத்தில் காயுதிர்க்கும்!
ஆக்கள் அறமுறைக்கும்; ஆடுகளும் பாடுழைக்கும்!
நோக்கம் அறிந்து முதலை படகோட்டும்!

இத்தகைய நல்மாற்றம் ஏற்றமுறப் பார்த்திருப்போம்!
சொத்தை மனங்கொண்ட சோம்பேறி மக்களுக்குப்
பல்வா றுழைத்துப் பயன்காண ஏங்கியிரோம்!
செல்வழியும் எண்ணாச் சிறியோர்க் கழுதிருக்கோம்!
உள்ளுணர்வு பேணா உலுத்தர்க்கு நீரிறைத்தே
எள்ளளவும் நல்விளைவு காணா திளைத்திருக்கோம்!

செந்தமிழும் மாய்ந்ததுகாண்! செந்தமிழர் செத்துவிட்டார்!
எந்தவகை அன்னவர்தாம் ஈடேறிப் போவாரோ!

தன் முயல்வும் இன்றித் தனிச்சிறப்பும் ஒன்றின்றி
என்வகையும் தேராதார் எப்படித்தான் வாழ்வாரோ?

உள்ளுணர்வும் சாம்பி உயர்கருத்தும் மாய்ந்தொழிந்து
வெள்ளறிவே கொண்டிருப்பார் வீழ்ந்திறந்து போவாரோ?

கண்ணுருட்டிப் பார்ப்பார்தம் கால்வருடி நின்றிருப்பார்
எண்வகையாச் செம்பொருளை எப்படித்தான் காண்பாரோ?

கோலெடுப்பார் தம்முன் குரங்காய் நடமிடுவார்,
நூலெடுத்துக் கற்றறிந்து நோற்றுயர்வ தெப்பொழுதோ?

வண்டியின்மேல் போவார்க்கே வாய்பொத்திக் கைகூப்பி
மண்டியிட்டு வாழ்வார் மனந்திருந்தல் எப்பொழுதோ?

வீசுகின்ற சோற்றுக்கே வீங்கித் தவங்கிடப்பார்,
மாசகன்ற நல்லறிவால் மாண்பு பெறல் எப்பொழுதோ?

நட்டுவைத்த கல்முன் நறும்படையல் வைத்தொடுங்கிக்
குட்டுவைத்துக் கொண்டழுவார் கூன்கொள்கை மாய்ந்திடுமோ?

மக்களுக்குள் கோடிக் குலம்படைத்து மாண்பழிக்குஞ்
சிக்கல் அவிழ்ந்து சிறப்புவந்து வாய்ந்திடுமோ?

வாய்மொழியும் திக்கி வருமொழிக்கும் பண்பிழப்பார்
தாய்மொழியைப் பேணித் தரமுயர்தல் நேர்ந்திடுமோ?

கண்ணிமைக்கும் நேரத்தில் கருத்திழக்கும் தீத்திறத்தார்
மண்ணமைக்கும் நல்லமைப்பில் மாண்புபெறல் காண்குவமா?"

என்றே இடையிடையே எண்ணச்சோர் வுற்றாலும்
வென்ற தமிழிருக்கும் வல்லமையால் வீழோம்யாம்!

என்றேனும் ஓர்நாள் இழிவகன்ற எம்மக்கள்
மன்றேறிக் குந்தி மணித்தமிழை மேலிருத்தி
"எந்தமிழத் தாய்மாரே! தந்தையரே! காளையரே,
இந்த நொடிமுதலா எல்லாரும் ஓரினமே!
வேற்றுமைகள் பேசிடுவார், வாணிகத்தில் பொய்யளப்பார்
மாற்று வழக்குரைப்பார், மக்களுக்குத் தீங்கிறுப்பார்,
பொய்ச்சமயம் கூறிடுவார், போலிக் கலைபயில்வார்,
கைச்சரக்கைக் கட்ட விழ்ப்பார், மக்கள் கருத்திழிப்பார்,
மாண்பிறந்து வாழ்வார், மருந்தில் புனல்வார்ப்பார்,
வீண்பகட்டுச் செய்திடுவார், விரகர், கொலைசெய்வார்,
மாசுமிகு புல்லுரைகள் மலிந்துவிட நூல்தருவார்,
கூசுகின்ற தீச்செயல்கள் கூசாமற் கூறிடுவார்,
ஊருழைப்பைத் தங்கள் உலையிட் டுடல்வளர்ப்பார்,
பார்புகழ வேண்டிப் பகற்கொள்ளை செய்திடுவார்,
வற்புறுத்தி ஏழையரை வாட்டி வதைத்திடுவார்,
கற்பழிப்பார் யாரும் கழுவேற்றத் தக்கவர்கள்"

என்று பறைசாற்றி ஏற்றமிகு நல்லாட்சி
ஒன்றைச் சமைக்காரோ ? இந்நினைவால் உய்ந்திருப்போம்,
அந்தநாள் நோக்கி அருந்தமிழீர் நாம்நடப்போம்!
எந்த நிலைவரினும் ஏற்றம் தளரோம்யாம்!
சோர்வுற்ற போழ்தில் தமிழை நினைத்தெழுவோம்!
ஆர்வமுறப் பாடி அழிந்துவரும் நல்லுணர்வைத்
தூக்கி நிறுத்திடுவோம்! தோய்துயரைத் தாமறப்போம்?
ஊக்குகின்ற சொற்கள் உகுப்போம்; கண் ணீருகுக்கோம்!
என்ன துயர்வரினும் ஏற்ற பணிமுடிப்போம்!
அன்னைத் தமிழ்மேல் அருஞ்சூள் உரைத்தெழுந்தோம்!
இன்னல், வறுமை, இழப்பு, கொடு நோய்க்கஞ்சோம்!
மின்னல் இடிமழைக்கு மேனி நடுநடுங்கோம்!
வல்சிறைக்கே அஞ்சோம்! பதவிக்கு வால்பிடியோம்!
புல்லியர்தம் பொய்யுரைக்கே புண்பட்டு யாம் வருந்தோம்!
துன்பம் தொடர்க! துயர்வருக! அத்துயர்மேல்
இன்பம் மலர்க இனி!

இலக்கிய நடை

ம. இலே. தங்கப்பா. எம்.ஏ.. பி.டி.

இலக்கிய நடையினைப் பற்றித் தமிழகத்தில் இன்று பலர் பல வாறு பேசி வருகின்றனர். எது சிறந்த நடை என்பதைப்பற்றிக் கருத்து வேறுபாடுகள் பல நிலவுகின்றன. இலக்கணப் புலவர் பலர் இறையனர் அகப்பொருள் உரையின் நடையே சிறந்த நடை என்பர். வடசொற்களை மிகுதியாகக் கலந்தெழுதும் வட்டாரத் தினர் தம் நடையே இயல்பான, உயிர்த் துடிப்புடைய நடை என்பர். மறுமலர்ச்சி எழுத்தாளர் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் பலர் எதுகை மோனை நிறைந்த தம் புதிய நடையே சிறந்ததாகப் பெருமைப்பட்டுக் கொள்வர். வேறு சிலரோ, கை வண்டி இழுப்போர், தெருச் சுற்றிகள், நாட்டுப்புற மக்கள் அன்னுடம் பேசும் வழக்கு மொழியில்தான் உயிர் இருப்பதாகக் கூறி அதனையே இலக்கிய நடையிலும் புகுத்தி மகிழ்கின்றனர். இன்னும் பலர் எல்லார்க்கும் புரியுமாறு அமையும் எளிய நடையே சிறந்தது என்றும் அவ்வாறமையாதன எல்லாம் கடிய நடை—வேண்டத்தகாத நடை என்றும் கூறுவர். மற்ருெரு குழுவினர், நடை அவரவர் மனப் போக்குக்குத் தக்கபடி அமைவது என்றும் அதற்கு இலக்கணம்—வரைமுறை—வகுப்பது சரியாகாது என்றும் கூறுவர். இத்தகைய கருத்துக் குழப்பங்கட்கிடையில் உண்மை காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நடை அவரவர் மனப்போக்குக்குத் தக்கபடி அமையும் என்பது உண்மையே. எழுதுவாரின் எண்ணத்துக்கும் உள்ளுணர்வுக்கும் ஏற்ப நடை உருவாகும். பாட்டுள்ளம் படைத்தவரின் நடை சொல் நயமும் ஒலி நயமும் பெற்றுச் சிறக்கும். கணக்கறிஞரின் நடை சொற் சுருக்கமாய் அமையும். அறிவியலாளரின் நடை தெளிந்த நீர் போல் அமையும். இவை எல்லாம் நடையின் அகவியல்பாகும்- இவற்றுள் எவ்வியல்பு வாய்ந்திருப்பினும் போலிமை கலவாத உண்மை ஒளி படர்ந்திருக்குமாளுல் அது நல்ல நடையே! கலைஞனின் உள்ளுணர்வு நடையின் உயிர்; இஃது அகவியல்பு. அவன் அவ் வுள்ளுணர்வை வெளிப்படுத்தக் கையாளும் மொழியாகிய கருவி, நடையின் உடல், இது புறவியல்பு. நாம் இங்கு ஆய விரும்புவது நடையின் இப்புறவியல்பு பற்றியே ஆகும். இற்றைத் தமிழக எழுத்தாளர் பலர் நடையின் புறவிலக்கணத்தைப் புறக்கணிக்கின் றனர். மேலை நாடுகளிலெல்லாம் எழுத்தாளர் இலக்கிய ஆசிரியர் ஆகியோர் கல்லூரிக் கல்வியும் பட்டமும் வாய்க்கப் பெருதவராக இருப்பினும் கூடத் தத்தம் தாய்மொழியில் போதிய அறிவும் பயிற்சியும் உடையவராய்த் தத்தம் மொழிமரபு பிறழாமல் பிழை யற்ற சீரிய நடை எழுதுவதையே நாம் காண்கின்ருேம். ஆனல் நம் தமிழகத்தில்தான் மொழியறிவில்லாதாரும் எழுத்தாளர் ஆகிச் சிறப்பும் பெறுகின்றனர். இலக்கியம் என்பது மொழிக்கு அப்பாற் பட்டது என்றும் அதனைப் படைத்தற்கு முறையான மொழி அறிவு இன்றியமையாதது அன்று என்றும் பேசப்படுகின்றது. கருவி சிறக்க அமையாவிட்டால் கருத்தைச் சிறக்க உணர்த்துதல் எங்ஙனம்? ஆதலின் மொழியறிவும், மொழிமரபு வழுவாமையும்

மொழிநலம் காக்கும் பண்பும் எழுத்தாளர்க்கு இன்றியமையாதன வாகும்.

நடையின் புறவியல்பு சிறக்க அமைதல் வேண்டுமாயின், அதற்குச் சொல்லணிகளும் எதுகை மோனைகளும் தேவையா? என்றொரு வினா எழல் கூடும். உள்ளத்தின் உண்மையான உணர்வு களை வெளிப்படுத்துவதற்குப் புற அணிகள் தேவையாயின் அவற் றைப் பயன்படுத்துவதில் பிழையில்லை. கூறவந்த கருத்தை நன்கு தெளிவு படுத்துவதற்கும், விரித்துரைத்து உள்ளத்திற் பதிய வைத் தற்கும் எவை எவை துணை செய்யுமோ அவற்றை உண்மை எழுத் தாளர் பயன்படுத்துகின்றனர். எதுகையும் மோனையும் இவ்வாறு தோன்றியவைதாம். ஆனால், சொல்லவந்த கருத்தை மறந்து, வெறுஞ் சொல்லழகு கருதி. கருத்துக் குழம்பும் வகையில் மேற் கூறிய புறவணிகளைப் பயன்படுத்துவது தவறாகும். அங்குத்தான் உண்மை நடை மறைந்து, போலி நடை பிறக்கின்றது. இன்றைய மறுமலர்ச்சி எழுத்தாளர் பலரின் நடை போலியாக இருப்பதற்குக் காரணம், நடை என்பது எண்ணத்தின் வரிவடிவமே, எண்ணத் தோடு ஒட்டியதே என்றறியாமல், அதனை ஒரு தனிக்கலை என்று பிறழஉணர்ந்து நடையைப் புனைவு செய்வதே குறிக்கோளாய்க் கொண்டு அவர்கள் எழுத முனைவதுதான். பொருளழகோடு இயைந்து செல்வதாயின் சொல்லழகு வேண்டப்படுவதே. பொருளோடு புணராமல் வெற்றணியாக நிற்குமாயின் அது நடைக் கிலக்கணமாகாது. உண்மை நடை கொடியில் மலர்ந்த மலர் போன்றது. போலி நடை வண்ணத்தாளில் செய்யப்பட்ட மலர் போன்றது.

நடையினைக் கடிய நடை எளிய நடை என்று பகுப்பதும் தவறாகும். கடுஞ்சொல் என ஒன்றில்லை. எளிய சொல் எனவும் ஒன்றில்லை. ஒருகால் மெல்லொலிச் சொற்களும் குறுகிய சொற் களும் எளியனவாகவும், வல்லொலிச் சொற்களும் நீண்ட சொற் களும் கடியனவாகவும் பகுக்கப்பெறல் கூடும். அதனை விடுத்து, ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த சொல்லை எளியதென்றும், தெரியாத சொல்லைக் கடியதென்றும் கூறுவராயின், எதை அளவு கோலாகக் கொள்வது? அவரவர் கல்வி நிலைக்கும் மொழியறி வுக்கும் எற்ப இப்பகுப்பு மாறக்கூடுமே! ஒருவர்க்கு எளிதாகத் தோன்றும் நடை மற்றவர்க்குக் கடியதாகவும், ஒருவர்க்குக் கடிய தாக இருக்கும் நடை மற்றவர்க்கு எளியதாகவும் தோன்றல் கூடுமே! எல்லார்க்குமே எளியதாக இருக்கும் நடையே சிறந்தது என்றால், எழுத்தறியா மக்களை எந்த வகையில் சேர்ப்பது?

இலக்கியம், மாந்தன் உயர்ந்த உணர்வும் அறிவும் பெற்ற நிலையில் தோன்றிய கலையாகும். அதன் நோக்கம் வாழ்க்கையை உயர்த்திக்கொண்டு செல்வதாகும். ஆதலின் அவ்விலக்கியத்தை நுகர்வாரும் ஓரளவு உணர்வு அறிவு கைவரப் பெற்றவராகவே இருத்தல் வேண்டும். அறிவில்லா மாந்தர்க்கும் அறிவு புகட்டுவது தான் இலக்கியத்தின் நோக்கமே அன்றி, அவர்தம் நிலைக்குத் தானும் இழிந்து, அவர்கட்குக் கிசுகிசுப்பு மூட்டுதலும் பொழுது போக்குக் காட்டுதலும் ஆகாது.

பொதுமக்களும் படித்துப் புரிந்துகொள்ளும்படி அமைவது தான் இலக்கியம் என்றால், திருக்குறளையும், சிலப்பதிகாரத்தையும் கழகப் பாடல்களையும் இக்காலத்துக்குப் பொருந்ாதன என்று தள்ளிவிடல் வேண்டுமே. முந்தைய இலக்கியங்கள் இருக்கட்டும், இக்கால எழுத்தாளர் இக்கால மக்கட்கு ஏற்ற முறையில் எழுத வேண்டும் என்றால், அவ்வக்கால அறிவு நிலைக்கேற்ப இலக்கியத்தின் நிலையும் மாறிக்கொண்டு போகுமே. ஒரு கால இலக்கியம் பிறிதொரு காலத்தவர்க்கு ஏற்புடைத் தாகாமற் போய்விடுமே! எக்காலத்துக்கும் எச்சூழலுக்கும் பொருந்துவதாக அமைவதன்றோ உண்மை இலக்கியம்! எனவே இலக்கியத்துக்கென — இலக்கிய நடைக்கென — ஒரு வரம்பு அமைத்துக் கொள்ளத்தான் வேண்டும். எழுத்தாளர் சீரியதும் செப்பம் வாய்ந்ததுமான மொழி நடையினைப் பின்பற்றித்தான் ஆகவேண்டும். கடிய நடை என்று கடியத்தக்கது ஒன்று உண்டு. அதுதான், நடையைத் தனிக்கலையாகக் கருதித் தம் உள்ளுணர்வினையும் எண்ணத்தையும் அல்ல — புலமைத் திறனை வெளிப்படுத்துதற்காகவே தெளிவில்லா வகையிற் சொற்களைப் புலப்படுத்தித் திட்டமும் தெளிவும் இன்றிக் கற்பார்க்கு மயக்கம் தரும் வகையில் எழுதப்பெறும் நடையாகும். இதுவும் ஒருவகைப் போலி நடையே.

சீரிய செப்பம் வாய்ந்த மொழிநடை எஃது ஒன்றிலும் கருத்து வேறுபாடு எழல் கூடும். தமிழுக்கெனத் தனி மரபும், தனித் தன்மையும் உள. அவை கெடாமல் எழுதுவதே சீரிய செப்பம் வாய்ந்த தமிழ் நடையாகும். உணர்வையும் எண்ணத்தையும் மிகத் தெளிவும் அழகும்படப் புலப்படுத்தும் பழந்தமிழ்ச் சொற்கள் பல, வட சொற்களை வேண்டுமென்றே புகுத்திய தமிழ்க் கொலைஞர்களாலும், பலதுறைகளிலும் பிறர் தம் மறைமுக ஆட்சியால் உள்ளம் திரிந்து, உயிருணர்வும் மானமும் அற்று வறண்டு கிடக்கும் தமிழர் தம் சோம்பலாலும் இன்று வழக்கிழந்து புழுதியுட் புதைந்த பொன்தட்டுப் போலப் பழநூற்களுள் மறைந்துகிடக்கின்றன. அவை பெரும்பாலான மக்கட்குத் தெரியவில்லை என்பதற்காக அவற்றை அழிய விட்டுவிடுவது முறையாகாது. காலத்தால் மறைந்த அவற்றை மீண்டும் வழக்கிற்குக் கொணரும் முயற்சி எதற்கு? இன்று எளிதாகப் பயிலும் சொற்களைப் பயன்படுத்திக் கொள்வதால் என்ன கெட்டுவிட்டது என்று வழக்காடுவர் சிலர். வழக்கிலிருப்பினும், மறைந்திருப்பினும் உயர்ந்த பொருள் உயர்ந்த பொருளே. ஒரு பொருளுக்கு அதன் உள்ளார்ந்த இயல்புதான் சிறப்புத்தருவதேயன்றிக் காலம், இடம் போன்ற புறச்சூழல்கள் அல்ல : அவ்வகையிற் பார்ப்பின், சீரிய கூரிய சொற்கள் மறைந்து கிடப்பதால் அவற்றின் பயன் அழிந்துபோகவில்லை. மீண்டும் பயன்படுத்தப் பயன்படுத்த அவைதம் உண்மைச் சிறப்பில் ஒளிரும்.

வழக்கிழந்த சொற்கள் என்று காலத்துக்குக் காலம் ஒரு மொழியின் சொற்களை ஒதுக்கிக்கொண்டே வந்தால் சில நூறு ஆண்டுகளில் மொழியின் உருவமே மாறி வேறொரு புதிய மொழி தோன்றிவிடும். ஓரின மக்களின் இலக்கியங்களிலும் பண்பாட்டிலும் எத்

தொடர்பும் இராமற் போய்விடும். இங்ஙனம் ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அறிகுறியன்று. காலத்துக்குக் காலம் ஏற்படும் மாறுதல்கள் எல்லாவற்றையும் மொழியின் இயல்பான வளர்ச்சி என்று சொல்வதற்கில்லை. ஒரு வரம்புக்கும் ஒழுங்குக்கும் உட்பட்டு மொழியின் சிறப்புக்குத் துணைபுரியும் வகையில் ஏற்படும் வளர்ச்சியே உண்மையான வளர்ச்சியாகும். நெற்பயிர் விளையும் வயலையும் சிலநாள் கண்காணியாதிருந்துவிட்டால், களைகள் வளர்ந்து பெருகிப் பயிரைக் கெடுத்துவிடும். இதனை இயல்பான வளர்ச்சி என்று யாரும் கருதுவதில்லையே. பயிர்க்கு வேண்டுவது போலவே மொழிக்கும் பாதுகாப்பும் கண்காணிப்பும் களையெடுப்பும் வேண்டும்.

வழக்கிழந்து போனமையால் எவ்வாற ஒரு சொல் தன் உண்மைப் பொருட் பொதிவை இழந்துபோதல் இல்லையோ, அது போன்றே நெடுநாட் பயில வழங்குவதால் ஒரு சொல் தன் தன்மையில் உயர்ந்துவிடுதலும் இல்லை. அவ்வாறு தோன்றுமாயின் அது மயக்கமேயாகும். கூர்ந்து நோக்கி எண்ணுவார் அம் மயக்கத்தை ஒழித்து உண்மையை உணர்ந்துகொள்ளலாம். 'வட சொற்கள் பல தமிழில் பயில வழங்கிப் பழகிவிட்டமையாலேயே, அவற்றை நீக்கி எழுதவேண்டியதில்லை' என்பர். பொருத்தமும் தேவையும் நோக்கி வந்த சொற்கள் அல்ல அவை: அவற்றை விலக்கிச் சீரிய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதால் நடை சிறக்குமேயன்றி எட்டுணையும் குறைவு படாது. இவ்வாறு வடசொற்களை விலக்கி நற்றமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துங்கால் அவற்றை விரும்பாதார் 'வழக்கில்லா அச்சொற்கள் கரடுமுருடாகவும், வலிந்து புகுத்தப்பட்டனவாகவும் செயற்கையாகவும் தோன்றுகின்றன' என்பார். இவை எல்லாம் மயக்கமே. தமிழுக்கு அயலான சொற்களே, பயில வழங்கியமையால் சிறந்தவை போல் தோன்றுகையில், தமிழுக்கே உரிய இலக்கியச் சொற்கள் பழக்கப்பட்டுவிட்டால் அவை உண்மையிலேயே நடைக்குச் சிறப்பளிப்பதில் ஐயம் என்ன? இவற்றைப் பழக்கப்படுத்துவதற்கு இலக்கியத்தில் இவற்றைக் கையாள்வதே வழியாகும். தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த ஓர் உயர்தனிச் செம்மொழிக்கு, அம்மொழிச் சொற்களினும் வேற்று மொழிச் சொற்கள் எவ்வகையிற் சிறப்பளித்தல் கூடும்? தனித் தமிழ் இயக்கத்தைப் புரிந்துகொள்ளாமலேயே அதனை வெறுப்பார் இவ்வினாவுக்கு விடை அளிக்கட்டும்.

தமிழ் எழுத்தாளர் தம் இலக்கியப் பணியின் வாயிலாய் உயர்ந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் படைத்து மக்கட்குப் பயனும் மகிழ்வும் ஊட்டும் அளவானே, தாய்நாட்டுக்கும் தாய்மொழிக்கும் தாம் ஆற்றவேண்டிய கடன்களையும் ஆற்றித் தம் எழுத்து நடையால் மொழிநலங் காக்கும் பெரும் பொறுப்புக்கும் உரியராவர். உள்ளம் செப்பமாக அமையுமாயின் அதினின்று செப்பமான சொற்களே புறப்படும். உண்மைத் தமிழன்பு உடையராயின் அவர் என்றும் தமிழுக்குக் கேடுவிளைக்கும் சொற்களைப் பயன்படுத்தமாட்டார். இலக்கியம், உணர்வுப் படைப்பு என்றும், பேரிலக்கியங்களைப் படைக்கையில், உள்ளம் வெறும் சொற்களைப் பிரித்துணர்ந்து கொண்டிருத்தல் எங்ஙனம் என்றும் வினவுவர்; உண்மையே.

இதுவோ தமிழாட்சி?

—தரங்கை. பன்னீர்ச் செல்வன்.

தமிழ்ப் பற்றற்ற பேராயக் கட்சியினரால் இயக்கப்படும் தமிழக அரசு, தமிழை "விரைவாக" ஆட்சி மொழியாக்கி வருவதாகப் பேரளவில் பேசுகின்றது. ஆனால், அது பெயரளவில்—தமிழர்களின் ஒப்போலைகளைத் திரட்டும் பிழைப்பளவில்தான் நிகழ்கின்றது. இது மாற்றுக் கட்சியினரின் தூற்றல் மொழி என்று கருத வேண்டா. கட்சி சார்பற்ற நடுநிலையாளர்களில் உண்மைத் தமிழுணர்வு ஓரளவேனும் உடையோர் ஒவ்வொருவரும் வைகலும் கண்டு குமுறுங் குரல்!

எடுத்துக் காட்டாக எண்ணிறந்தன கூறலாம்; ஒரு சில மட்டும் குறிப்பிடுவோம்: அரசினர் சார்பில் உள்ள அலுவலகங்களிலும் பொதுவிடங்களிலும் 'வேண்டுகிறோம்' எனும் பொருளில் 'கோருகிறோம்' எனவரும் சொல்லை, 'கோறுகிறோம்' எனக் கொல்லுகின்றார்கள். விரைவின் பொருட்டு "ரு"வுக்கு மாற்றாக "று" எழுதியிருக்கலாம் என ஓரிடத்தில் கண்டால் விட்டு விடலாம்; ஓரமையத்தில் கண்டால் தள்ளி விடலாம்; பல விடங்களில், பல பொழுதிற் கண்டால் எவ்வாறு ஏற்பது? இதே 'கோரல்' கடலூர் கெடிலவாற்றின் பாலத்தருகில் கோறலாகிய கொடுமை ஏறத்தாழ பத்தாண்டுகட்கு முன்னரே "உழைப்பாளி" என்னும் தாளிகையில் திரு. இராசாராம் என்பாரால் சுட்டிக் காட்டப்பட்டும் இஞ்ஞான்றுகாறும் மாற்றம் பெறவில்லையே, ஏன்?

"மகப்பேறு மருத்துவ இல்லம், ஆயப்பாடி" என்பதில் 'மகப்பேறு'—'மகப்பேரு' ஆன அவலத்தை யார் சுட்டிக் காட்டுவது? அதுவும் பல்கால் நிலைபெறுமாறு பைஞ்சுதையால் (Cement) சமைக்கப் பெற்றுள்ளதே, அதைத் திறந்து வைத்த தலைவரின் கண்ணும் கருத்தும் என்ன செய்துகொண்டிருந்தனவோ? விளங்குமாறில்லை!

மற்றும், 'மருத்துவ மணை'; 'கோட்டாச்சித் தலைவர்', 'பெறம்பு பயிர்ச்சி நிலையம்' போன்று கணக்கிறந்த சொற்கள் தமிழாட்சி என்னும் பெயரால் எழுதப்படுவதற்கு யார் பொறுப்பு? மாறாகத் தமிழ் மொழியை வாழ்விப்பதாகக் கூறிக்கொள்ளும் தமிழக அரசினர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பேரிலக்கியங்களைப் படைக்கும் உணர்வு நிலையை ஒருவர் எய்துவதன் முன்னரேயே, இலக்கியக் கருவியான மொழிச் செப்பம் கைவரப் பெற்றவராதல் வேண்டுமே. அம்மொழிச் செப்பம் கைவரப் பெற்றுவிட்டால் இலக்கியப் படைப்பில் சொற்களைப் பொறுத்தவரை எவ்வகை இடர்ப்பாடும் எய்த இடமே இல்லை.

அழுக்கு நீரினின்று கொசுத் தோன்றுவது இயற்கையே, இயற்கை என்பதற்காகத் தீங்குதரும் கொசுவை நாம் விட்டுவைப்பதில்லை. அழுக்குநீரை அகற்றினால் கொசு உண்டாவதும் தானே நிற்கும். இனிய நன்னீர்ப் பொய்கையில் அல்லியும் தாமரையும் முகிழ்த்து மணம் வீசுதல் போலவே. சிரிய தமிழ் உள்ளத்தில் நல்ல தமிழ்நடை தாளே முகிழ்த்து மணம் கமழும்.

அலுவலகங்களில் காணப்படும் விளம்பரப் பலகைகளிலும் பிற மடல்களிலும், ஆணைகளிலும், 'Hospital' என்பதற்குப் பகரமாக "HOSBIDAL", என்றோ, 'Office' என்பதற்குப் பகரமாக 'Offise' என்றோ எழுதப்பட்டிருப்பதைக் காட்ட முடியுமா.?

மாற்று மொழிக்காரர்களின் மனம் புண்பட்டாலும் அணுவும் தளராது, ஆற்றலற்ற இந்தியை அஞ்சாமல் நுழைத்துவரும் நடுவண் அரசின் இந்தி விளம்பரப் பலகைகளிலே கூட இத்தகைய இழிபிழைகள் தென்படவில்லையே! க, ச, ட, த, ப ஆகிய எழுத்துகளில் நால் வகை ஒலிவேறுபாடுகளை யுடைய அவ்விந்தி மொழியினரே பிழையின்றி எழுதும் பொழுது தமிழைக் காப்பதாகத் தருக்கித் திரியும் தமிழக ஆட்சியாளர் தம் பொறுப்பிலுள்ள அலுவலகங்களில் மட்டும் தமிழ் தவறாகக் கையாளப்படுவானேன்? திறப்பு விழாவிற்கோ, தேர்தல் பணம் திரட்டும் விழாவிற்கோ தலைமைசாலும் அமைச்சர்களின் அருட்கண் பார்வையில் 'தமிழ்க் கொலைகள்' தென்படாமையை உள்ளும்பொழுது, அவர் தம் தமிழ்ப் பற்றுடன் தமிழறிவும் வெளிப்படவில்லையா? தமிழறியாப் பேதையர் தமிழாட்சி செய்யும் வெட்கக் கேட்டை என்னென் றெழுதுவது?

ஊராட்சிகளின் ஒன்றிப்பை ('பஞ்சாயத் சமிதி' என்பது வடவர் வழக்கு) "பஞ்சாயத் யூனியன்" என்று ஒரு வட சொல்லையும், ஓர் ஆங்கிலச் சொல்லையும் இணைத்து தமிழில் வழங்கச் செய்த அரசினரின் தமிழ் வளர்க்கும் (!) பணியைத் தமிழ் நெஞ்சம் எங்ஙன் ஏற்கும்? 'BASIC' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'அடிப்படை' என்னும் பொருள் அரசினரின் "ஆட்சிச் சொல் அகராதி"யிலேயே இருக்கும் பொழுது "BASIC SCHOOL" என்பதை "ஆதாரப் பாடசாலை" என்று வடமொழித் தொடரில் ஆய்வாளர் அலுவலகங்கள் குறிப்பிடுவதேன்; ஆணையாளர் அலுவலகங்கள் விளம்பரப் பலகைகள் வழங்குவதேன்? இதுதான் ஆட்சிச் சொல் அகர முதலியின் பயனா?

அதுபோலவே, 'CANDIDATE' என்னும் ஆங்கிலச் சொல்லை "அபேக்ஷகர்" என வடமொழிச் சொல்லால் தமிழில் கூறுகின்றனர்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழிற்குக் கொண்டு வரும்பொழுதே வடமொழிச் சொல்தான் தமிழ்ப் பற்றின்றிப் புகுத்தப்படுகின்றதெனில், இந்தி ஆட்சி மொழியாகி அதினின்று தமிழாக்கம் செய்யப்பட வேண்டிய தாழ்நிலை வந்தால் தமிழ் எப்படி வாழும்? என்பதை உன்னியுணர வேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழி என்பது உண்மையாயின், தமிழ் நாட்டு அரசிதழ் (Gazette) ஏன் தமிழில் அச்சிடப் பெறவில்லை. மாறாக, ஆங்கிலத்தின் இடத்தைத் தானே இந்தி பெறப்போகின்றது என்று தமிழரை மயக்கித் திரிவோர், இனி, அரசிதழை இந்தியில் வெளியிட்டாலும் வியப்பதற்கில்லை!

அரசினர் வெளியிட்டுள்ள முதலாம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலுள் "ஆ" என்னும் உயிரெழுத்துக்குக் காட்டாக அமைக்கப்பட்டுள்ள சொல் "ஆனை" யாகும். ஆடு, ஆமை போன்ற 'ஆ' முதலான சொற்களிருக்கும்போது 'யானை' 'ஆனை' ஆகத்தான் வேண்டுமோ?

காந்தியடிகளின் கொள்கை வழி நில்லார், கைந்நூலாடை புனைந்திருப்பது போல், தமிழ் நெஞ்சமற்றோர், தமிழைப் புரப்பவதாகப் பொய்க் கோலம் புனைந்து தீந்தமிழைத் தீத்தமிழாக்குகின்றனர். அதற்கு,உழைக்காமல் உண்டு களிக்கும் சில "ஸ்ரீலஸ்ரீ" களும், பெயருடன் 'ஸ்ரீ' சேர்த்துப் பேசும், எழுதும் தமிழாசிரியர்களும் ஒத்துழைக்கின்றனர். உண்மையில், தமிழகத்தில் தமிழாட்சி நிகழவேண்டுமாயின், தமிழில் வல்லாரும், பற்றுள்ளாரும் தமிழ் நாட்டின் தலைமை சால வேண்டும். தமிழகப் பணிமனைகளனைத்தும் தமிழுணர்ந்தார் பொறுப்பில் இயங்க வேண்டும். இன்றேல், வரலாற்றில் தமிழ் மாண்ட மொழியாகிவிடும்!

தழைக்க தமிழுணர்வு!

தென்மொழி, கடலூர்-1.

தனித் தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்,
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	[இரு வண்ணம்]	100 உருபா
,, ,, ,,	[ஒரு வண்ணம்]	75 உருபா
உள்ளே முழுப் பக்கம்		50 உருபா
,, அரைப் பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக் கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

அவர் நினைவாக :

தமிழகம் மீளவேண்டும்

பாவேந்தர். பாரதிதாசன்.

செந்தமிழ்ச் சொற்களை இந்தியால் எழுதுதல
அறிவிலாச் செயல்! அறமிலாச் செயல்!
வடவரின் இந்த மடமை எண்ணத்தை
முளையிலே கிள்ளி எறிதல்நம் முதற் கடன்!

ஏனெனில்,

எழுத்தைக் கொல்வது மொழியைக் கொல்வதே
மொழியைக் கொல்வது இலக்கியம் கொல்வதே
இலக்கியம் கொல்வதோ இனத்தைக் கொல்வதே
இனத்தைக் கொல்வது எதற்கெனில் தமிழர்

நிலத்தைச் சுரண்டித் தமது நிலையினை
உயர்த்த; வடவரின் உள்ளம் இதுதான்:
செந்தமிழர்க்குச் செய்யும் தீமைகள்
இம்மி யேனும் குறைந்த பாடில்லை.

இந்தியை எத்துப் பேசிப் புகுத்தியது!
சாதி ஒழிப்பாரைச் சாகடித்தது!
பாரோர் அறியப் பார்ப்பனர் ஆட்சியை
நிறுவிற்றுத் தமிழரைக் கறுவிற்றுக் கொல்வதாய்!

எந்தத் துறையிலும் இம்மி அளவும்
உரிமை தரேன்என உறுமிற்றுப் பன்றி!
தமிழர் செல்வத்தைத் தயங்காது சுரண்டிற்று
தமிழர் நன்செய் தருநெல் லைஎலாம்

அயலார்க் கென்றது; பசிஉமக் கென்றது!
தமிழை அழிக்கத் தமிழனைத் தேடிக்
காசு தந்தே அலுவல் காட்டி
ஊக்கம் செய்த துயர்விலான் ஆட்சி!

தெருவில் நின்று தெ. பொ. மீ. அதோ
குதிக்கின் றூனே தமிழைக் கொல்ல!
''ஆகாஷ் வாணி''—அதனை நீக்குக!
'வானொலி' ஆக்குக என்று கெஞ்சினும்

இதற்கும் மறுப்பா! எங்கே அடுக்கும்?
தமிழன் உயிரையா தருதல் வேண்டும்
இந்த உரிமை எய்து தற்கே!
ஒழித்துக் கட்ட வேண்டும்
விழுப்பத் தமிழகம் மீட்சி பெறவே!

இலக்கிய வடிவத்தின்

அடிப்படைக் கூறுகள்

மா. எழில்முதல்வன் எம். ஏ.

இலக்கியங்களின் தோற்றத்தை ஆராய்ந்தறிந்த அறிஞர்கள் இலக்கிய வடிவத்திற்கு அடிப்படை இசைக் கூத்தே (Ballad dance) என்று மொழிகின்றனர் † நுணுகி நோக்கும் போது இக்கருத்து உண்மையென்றே தோன்றுகிறது. இசைக் கூத்தினின்றும் இலக்கிய வடிவங்கள் எங்ஙனம் முகிழ்த்தன என்பதை ஓரளவுக்கு எடுத்துக் கூற முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

இசைக்கூத்து:

இசைக் கூத்து என்பது கதை தழுவியது; இசை கெழுமியது. குறிப்பிட்ட ஒரு கூட்டத்தாரால் நடத்தப்படுவது. முற்காலத்தில் அரசர்களின் அவையிலும், செல்வர்களின் முன்னிலையிலும் இத்தகைய கூத்து நடத்தப்பெற்றதாக அறிகிறோம். சேரன் செங்குட்டுவன் பனிமலையினின்றும் கொணர்வித்த கல்லினைத் தான் போரில் வென்ற ஆரியவரசர் முடிமேலேற்றிக் கங்கையில் நீர்ப்படை செய்து கொணர்ந்து, தன் அரசிருக்கையாகிய வஞ்சிமாடம் புகுந்தனன் எனவும், அங்கே அவன் தன் மனைவியாகிய இளங்கோ வேண்மாளோடு மகிழ்ச்சியுடன் திருவோலக்க மண்டபஞ் செல்லும் பொழுது, இடையிலுள்ள நாடகவரங்கத்து நிகழ்த்தப்பெற்ற அழகிய கூத்தொன்றைக் கண்டு களித்தனன் எனவும், அந்தக் கூத்து கூத்தச்சாக்கையன் என்பவனால் நிகழ்த்தப்பட்டதெனவும் சிலப்பதிகாரம் கூறுகிறது. சாக்கையர் என்போர் முற்காலத்தில் அரசர்க்கு உள்படு கருமத்தலைவராயிருந்தவர்கள். இவர்கள் அரசனை நாட்டியத்தால் மகிழ்விப்போராவர். அக்காலத்தில் அவைக்களத்தில் இசைத்தலைமை வகித்தோர் 'சாக்கை மாராயன்' என அழைக்கப்பட்டனர். இச்சாக்கையர் அப்பெயருடனும் அத்தொழிலுடனும் இன்றும் மலையாள நாட்டில் உள்ளனர் என்பதை தி. கே. கோபால பணிக்கர் என்பார் தாம் எழுதிய (Malabar and its folk) என்ற நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார். மேலும் குறுந்தொகையில் வரும்

---

† The ballad dance, remains as literary protaplasm; the primitive form up to which all other forms of literature, ultimately may be traced.

—R. G. Moulton.,

Modern Study of literature—Page 12.

"மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்தக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே"

என்ற பாடலும் அக்காலத்தில் இசைக்கூத்து நடத்தும் 'ஆடுகள மக்கள்' இருந்தார்கள் என்ற கருத்தைச் சுட்டுகின்றது. பழைய நாட்டுப் பாடல்களைக் கொண்டு ஆராய்ந்தாலும் இந்த உண்மை புலனாகும்.

இவ்விசைக் கூத்து என்பது தற்காலத்தில் நிகழ்த்தப்படும் "கதாகாலட்சேபம்" போன்ற ஒன்றாகவும் இருக்கலாம், கழகக் காலத்துப் பாணர்களும், விறலியர்களும் இக் கூத்தில் ஈடுபட்டிருந் தனர். இசையொடும், நடிப்பொடும் அவர்கள் கூத்து நடத்தி மக்களை மகிழ்வித்தனர். பாட்டு, இசை, கூத்து என்பன தனிப்பட்ட கலைகள்தாம் என்றாலும் இந்த மூன்றுமே இசைக்கூத்தில் அடங்கி யிருந்தன. இம்மூன்றும் தோற்ற அடிப்படையில் ஒன்றானவை: போகப்போக மாற்றம் அடைபவை; ஒன்றையொன்று தழுவிச் செல்பவை. இசைக் கூத்தில் மூன்று தன்மைகள் உண்டு.

(1) சில செய்திகள் கேட்போரின் மனத்தில் ஆழப் பதிய வேண்டும் என்பதற்காகத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறப்படும். கேட்கின்றவர்கள் சற்றுக் கவனக் குறைவாக இருந்து விட்டால் முன்பின் தொடர்பு தெரியாமல் போய் விடுமே என்பதற்காகவும் சில செய்திகளைத் திரும்பக் கூறுவதும் உண்டு.

(2) இசைக்கு மெருகு ஊட்டுவதற்காக ஏற்ற துணைக்கருவிகள் பயன்படுத்தப்படும்.

(3) கூத்தன் பேசியும், ஆடியும், பாடியும் நிகழ்ச்சியை நடத்தும் பொழுது அசைவுகளும், மெய்ப்பாடுகளும் தோன்றும்.

நான்கு முனைகள் :

பொதுவாக இலக்கியங்களைப் பாட்டால் இயன்றவை என்றும் உரைநடையால் அமைந்தவை என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக் கலாம். பாட்டுக்கும், உரை நடைக்கும் வேறுபாடு உண்டு என்பது நாம் அறிந்ததே. ஒலிநயமும், உணர்ச்சியும், கற்பனையும்பொதுளியது பாட்டு. அங்ஙனம் இன்றி ஆற்றொழுக்காக நடந்து செல்வது உரை நடை. Prose என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'Straight forward' என்பது பொருள், "உரைத்துப் போதலின் உரை; நடை போறலின் நடை" என்பர் நச்சினார்க்கினியர்.

இனி, இலக்கியம் தான் நுதலிய பொருளை வெளிப்படுத்தும் முறையை ஒட்டியும் இருவகையாகப் பிரிப்பது உண்டு.

(1) விளக்க வண்ணனை (Description) கொண்டவை,

(2) தொடுத்துக் கிளத்தும் (Presentation) போக்கில் அமைந்தவை

இவ்விரண்டு தொடர்களும் ஏறத்தாழ ஒன்று போல் தெரிந்தாலும் வேறுபாடுகள் கொண்டவை. இச்சொற்களின் நுட்பத்தைப் புரிந்து கொண்டால்தான் பின்னே கூறவிருக்கும் செய்திகள் எளிதில் விளங்கும். இளங்கோவடிகளார் மாதவியின் பண்பு நலன்களை விளக்கியுள்ளார் என்று சொல்வதற்கும், மாதவியின் பண்பினைத் தொடுத்துக் கூறியுள்ளார் என்பதற்கும் உள்ள வேறு பாட்டை உய்த்தறிந்து கொள்க. ஒரு கதையைப் படித்து முடித்தபின் "ஆகா? என்ன அழகான கதை கிளத்து முறை (presentation)" மிக அருமையாக இருக்கிறதே என்று கூறுவதற்கும் "இந்தக் கதையில் வண்ணனை (description) அருமையாக இருக்கிறது என்று சொல்வதற்கும் கருத்தில் மாறு பாடு இருக்கின்றதல்லவா? ஆதலின் இலக்கியத் திறனாய்வாளர்கள் இப்பகுப்பை உணர்ந்து விளக்க வண்ணனை, தொடுத்துக் கிளத்தல், பாட்டு, உரை நடை ஆகிய நான்கையும் இலக்கிய வடிவத்தின் நான்கு முனைகள் என்று குறிப்பிடுகின்றனர்.

பிறப்பும் வளர்ச்சியும்:

இசைக் கூத்தைக் கருவாகக் கொண்டு இந்நான்கு முனைகளும் நான்கு வகையான வளர்ச்சியை அடைகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு திக்கு நோக்கி உள்ளது சிறத்தல் (evolution) என்ற முறைப்படி வளர்ந்து செல்கின்றன. அந்த நிலையில் ஏதோ ஒரு புள்ளியை அடைந்ததும் அவ்வளர்ச்சியானது முழுமை பெற்று இலக்கியமாக மலர்கின்றன. இசைக் கூத்தினின்று வளர்ச்சி பெற்ற இந்த நான்கு முனைகளும் ஆறுவகையான கூறுகளை உண்டாக்குவதைக் கீழ்க்கண்ட விளக்கத்தால் அறிக.

1.	பாவியம் இசைப் பாடல் நாடகம்	படைப்பு இலக்கியம் (Creative Literature) பாட்டால் அமைவது
2.	வரலாறு மெய்யறிவியல் பேச்சு	உள்ள செய்தியை உள்ளவாறு கூறுவது உரைநடையில் அமைவது
3.	வரலாறு பாவியம்	பெரும்பாலும் விளக்க வண்ணனை கொண்டது
4.	நாடகம் மேடைப்பேச்சு	பெரும்பாலும் தொடுத்துக் கிளத்தலால் அமைவது

5. இசைப்பாடல் மெய்யறிவியல் — ஆசிரியனின் ஆளுமை இதில் கலந்திருக்கும். படைப்போனின் பண்பாடு இதில் இருப்பதால் இஃது— எதிரொளி—கொண்டது என்பர்.

இசைக்கூத்து Ballad dance	—	பாட்டால் இயன்றவை (படைப்பு இலக்கியம்) எதிரொளி-Reflection	—	இசைப்பாடல் (Lyric)		
ஷை	—	விளக்க வண்ணனை (Description)	—	பாவியம் — வரலாறு (Epic) (History)		
இசைக்கூத்து Ballad dance	—	உரைநடையால் அமைந்தவை (படைப்பு இலக்கியம் அன்று) எதிரொளி-Reflection	—	மெய்யறிவியல் (Philosophy)		
ஷை	—	தொடுத்துக் கிளத்தல் (Presentation)	—	நாடகம் Drama	—	மேடைப் பேச்சு (Oration)

இசைக் கூத்திலிருந்து ஒரு திக்கு நோக்கிச் சென்ற வளர்ச்சி பாவியமாக (Epic) மலர்கிறது, பாவியம் ஒரு படைப்பு இலக்கியம். இது பாட்டால் அமைவது, இதன்கண் விளக்க வண்ணனை (Description) மிகுதியாக இருக்கும், பண்டைக் காலப் பாவியங்களும், தற்காலப் புதினங்களும் ஒரு திறத்தனவே ஆம். இசைக் கூத்தின் கூறுகளாக உள்ள பேச்சு, இசை, நடிப்பு என்னும் மூன்றனுள்ளும் பாவியத்திற்கு மிகமிக இன்றியமையாதது பேச்சு மட்டும் தான். முன்பெல்லாம் பாவியங்கள் எவரேனும் ஒருவரால் படிக்கப் பட்டு மற்றவர்களால் கேட்கப் பட்டன. இராமாயணம், பாரதம் போன்றன அனைத்தும் ஒரு காலத்தில் செவிவழி இலக்கியங்களாகத்தான் இருந்தன. அப்பொழுது பாவியத்தை எடுத்துச் சொல்ல இசையும், சிறிதளவு மெய்ப்பாடு கலந்த நடிப்பும் தேவைப்பட்டன. அவை காலப்போக்கில் பாவியத்திற்கு வேண்டாதனவாக மாறி விட்டன.

பாவிபத்தின் மறுமுனையில் நாம் நாடகத்தைப் பார்க்கிறோம். இதன் கண் கதையானது கூறப்படுவதில்லை; காட்டப்படுகிறது. எனவே இசைக் கூத்தின் ஒரு பகுதியாக உள்ள போலச் செய்தல் (imitation) என்னும் நடிப்பு இதில் பெரிய இடத்தைப் பெறுகிறது. இதன்கண் தொடுத்துக் கிளத்தல் (Presentation) முக்கிய கூறாக அமைகிறது, முன்பெல்லாம் நாடகங்கள் செய்யுளில் தான் இயற்றப் பட்டன, காலப்போக்கில் இவை எத்தனையோ மாற்றங்களை அடைந்து விட்டன. நாடகத்தில் இசையின் பங்கு மிகுதியாக ஆகி விட்டால் அஃது இசைநாடகம் (Opera) எனப்படும்; தற்காலத்தில் சில திரைப்பட நடிகைகளால் நடித்துக் காட்டப்படும் "மனோன்

மணிய நாட்டிய நாடகம்,'' "சிவகாமி சபதம் - நாட்டிய நாடகம்'' முதலியனவற்றை இவ்வகையில் அடக்கலாம். இசைக்கூத்தின் மற்ருெருபகுதியாக அமைந்திருக்கும் 'பேச்சு' (oration) நாடகத்தில் முழு இடத்தையும் பெற்றுள்ளது.

வரலாறு என்பது உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறுவது, உரைநடையால் அமைவது. இதில் கற்பனைக்கோ, உணர்ச்சிக்கோ இடம் இல்லை. இதை ஒரு படைப்பு இலக்கியம் என்றும் சொல்வதற்கில்லை; இதில் பெரும் பகுதி விளக்க வண்ணனையாகவே அமையும்.

'பேச்சு' (oration) என்பது 'கேட்போரை' உடையது. தொடுத்துக்கிளத்தல் (presentation) பேச்சில் தலையாய கூருக அமைந்திருக்கும். ஓரளவு இது நாடகத்தோடு தொடர்பு கொண்டது. எனவே தான் அரிசுடாட்டில் (Aristotle) பேச்சாளனின் முதல்வேலை நடிகனுக இருப்பதே என்று கூறினர்.

இதுவரை இசைக்கூத்தினின்று வளர்ந்த நான்கு வகை வளர்ச்சிகளை அறிந்தோம். எஞ்சியிருக்கும் இசைப்பாடலைப் பற்றியும், மெய்யறிவியல் பற்றியும் சிறிது அறிதல் வேண்டும். இந்த இரண்டிலும் புலவனின் ஆளுமை (personality) படிந்திருக்கும். படைப்போனின் உணர்வுகள் இதில் படிந்திருப்பதால் இதனை எதிரொளி (reflection) கொண்டவை என்பர்.

மேலே காட்டிய விளக்கத்தின் துணையுடன் இங்குக் கூறிய கருத்துகளைச் சற்று எண்ணிப் பார்த்தால் இசைக் கூத்திலிருந்தே இலக்கியம் மலர்கிறது என்பதும், பாவியம், இசைப்பாடல், நாடகம், வரலாறு, மெய்யறிவியல் பேச்சு என்ற, ஆறும் இலக்கிய வடிவத்தின் அடிப்படைக் கூறுகள் ஆம் என்பதும் அறியப்படும். இவ்வாறு கூறுகளும் வேதியல் துறையில் கூறப்படும் தனிமங்களைப் போன்றவைதான், ஒரு படைப்பு இலக்கியத்தில் இவற்றுள் ஒன்ருே, பலவோ தனித்தும் பிணைந்தும் இருக்கும். இவ்வுண்மையைக் கீழ்வரும் 'மௌல்டன்' (Moulton) கூற்ருலும் அறிக.

"The six elements of literary form are not to be understood as so many classes of literature, to which particular literary works may be assigned. They are like the elements of chemistry : in actual literature they will be found some times singly, more often in combination."

நாவே நீ வாழ்க!

—தமிழவேள்.

இனிப்பிதுவாம் புளிப்பிதுவாம் துவர்ப்பிதுவாம் என்றும்
இஃதுப்பாம் இதுகைப்பாம் இதுகாரம் என்றும்
தனித்தனியே சுவையுணரச் செய்கின்ற நாவே!
தமைநினையா துனக்கடிமை ஆகியதால் அன்றோ,
நனிவருத்தும் நோய்களிலே மக்களெலாம் சிக்கி
நாள்தோறும் நலிவுற்றுச் சீரழிந்து போவார்!
கனிவான உனதாட்சிக் குட்படலால் அன்றோ,
கடிதினிலே மாள்கின்றார்? நாவே நீ வாழ்க!

பல்வேறு மொழிதன்னைப் பேசிடவும் மாந்தர்
படித்திடவும் பாடிடவும் அடிப்படையாம் நாவே!
நல்லபல சொல்லிருக்க அல்லாத சொல்லை
நாடுவதே உன்னியல்போ? புறங்கூறிப் பொய்த்து,
நல்லவரைப் பழிதூற்றிக் குறைகளையே கூறி
நட்புக்குக் கூற்றுதல் தானுன்றன் தொழிலோ?
கல்லாரும் கற்றாரும் எல்லாரும் உன்னைக்
காவாமல் கெடுகின்றார்! நாவே நீ வாழ்க!

உருவத்தில் மிகச்சிறிதாய் மூடியுள்ள வாய்க்குள்
உமிழ்நீரில் எப்பொழுதும் இருக்கின்ற நாவே!
நெருப்புத்தான் சுடுமென்பர் சுட்டாலும் பின்னர்
நன்றாக ஆறிவிடும் ஆனால்நீ சுட்டால்
ஒருநாளும் உள்ளாறாப் புண்ணன்றோ உண்டாம்?
ஒருபொழுதும் மாறாத வடுவன்றோ உண்டாம்?
இருக்கின்றாய் முப்பொழுதும் நீருக்குள் எனினும்
எரித்தியின் சுடுகின்றாய்! நாவே நீ வாழ்க!

மென்றுணவைப் பற்கள்தாம் மாவாக்கும் போழ்து
மிகவெளிதாய் எப்படியும் வளைந்துதவ வேண்டி
மௌனமையுடன் பிறழ்நிலையைப் பெற்றுள்ள நாவே!
முன்னுக்குப் பின்முரணாய்ப் பேசுவதும், நேற்று
சொன்னதையே இன்றில்லை என்பதுவும், பாழாம்
சினங்கொண்டு தூற்றுவதும் சிரித்துப்பின் கரவாய்ப்
பின்பாட்டுப் பாடுவதும் இவையெல்லாம் உன்றன்
பெருந்தன்மைப் பண்பன்றோ? நாவே நீ வாழ்க!

ஒரு கற்பனை :

வருங்காலத் தமிழகம் !

(புலவர் வி. போ. பழனிவேலன் பி. ஓ. எல்)

க. முகவுரை: பல்லாண்டுகளாக எம்முளத்தில் எழுந்த எண்ண அலைகளான் இனியதொரு 'தமிழ்நாடு' அமையவேண்டுமென ஆய்ந்ததன் விளைவாகத் தோன்றியதே இவ்வருங் காலத்தமிழகம். தாக்கிவினை செயும் தொல்லோர்க்கும், நடு நிலை வழுவா நல்லோர்க்கும், பகுத்துணர் திறனுள, பண்புடையோர்க்கும், தனித்தமிழ்ப் பற்றுள தகைமிக்கோர்க்கும், தமிழ்ப்பண்பறிந்த தகுபுலவோர்க்கும், தமிழர் நாகரிக முணர்ந்த தக்கோர்க்கும், பிற தமிழர்க்கும் இதனை உரிமைப் பெறுத்துகின்றேன்.

இற்றைக்கு ஏறத்தாழ பத்தாயிர மாண்டுகட்கு முன்னிருந்த தமிழகத்தைச் சிறிது உங்கள் கற்பனைக்கண்முன் நிறுத்துகிறேன். குமரிக் கண்டம் என்ற பெரும் நிலப்பரப்பு, குமரி மலை, குமரியாறு பஃறுளியாறு, பெரும் பெரும் நகரங்களுடன் கடல் கொள்ளப் பட்டது, ஆங்குப்பல்லாயிரம் தமிழ்ப்புலவர் தமிழ்க் கழகங்கள் நிறுவி பல்லாயிரமாண்டுகள் தமிழாய்ந்து பல்லாயீரம் பனுவல்கள் யாத்தனர். அவற்றையே கழகத்தமிழ் என்று கூறுவோம். அந்தப் பனுவல்களுள் ஒன்றும் இன்று கிடைத்திலது. கழகக் காலத்திற்குப் பின்னர், ஆரியர் இந்த நாட்டில் குடிபுகுந்த காலத்தில் தோன்றியவையே இப்பொழுது உள்ள தொல்காப்பியம் முதலான சில தொன்னூல்கள்.

கழகத்தமிழ் நூல்கள் யாவும் நீராலும், நெருப்பாலும், கறையானாலும், தமிழ்ப்பகைவர்களாலும் அழிக்கப்பட்டன. கழகத் தமிழ் நூல்களைக் கற்ற தமிழ்ப்பேரறிஞர் சிலருள் தொல்காப்பியர் முதன்மையானவர். தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பகர்ந்த பனம் பாரனார், "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்" என்று கூறுவதானறியலாம். தொல் காப்பியத்தில் ஆரிய நாகரிகச்சாயை காணப்படினும் தமிழ் நாகரிகத்தை நாம் பரக்கக்காணலாம். தொகைநூல்கள் எட்டனுள்ளும் பலகால் இயற்றிய பாடல்களும் இடம் பெற்றுள்ளமையான் தமிழர் பண்பாடறிய வாய்ப்புகள் உள. பத்துப்பாட்டுகள், பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் ஆகியவற்றிலும் தமிழ்நாகரிகம், பண்பாடு தெற்றெனத் தெரிகின்றன. சிறப்பாகத் திருக்குறளால் அறியக் கிடைக்கும் உண்மைகள் பல.

கழகத்தமிழ் நூல்களின் பிழிவே திருக்குறள் எனல் சாலும். தமிழ்க்கண் கொண்டு காண்பார்க்கு இது புலனாகாமற் போகா. ஆனால் வெள்ளிடை மலைபோல் தமிழ் நாகரிகம் காணத்தக்க நூல் ஒன்றும் இன்றில்லை யென்பது வருந்தற்குரித்தே. காய்தல் உவத்தலின்றி மேற்கண்ட நூல்களை ஆராய்வார்க்கு இற்றைஞான்று தமிழ்நாட்டில் நிலவுகின்ற பழக்கம், வழக்கம், ஒழுக்கம், பாண்பாடு நாகரிகம் என்பன கழகக்காலத் தமிழர்க் குரியனவல்ல வென்பது புலனாம். ஆரிய, மொகலாய ஆங்கிலக் கூட்டுறவால் ஏற்பட்ட

கலப்பு நாகரிகமாகவே உள்ளது. தமிழரது தனித்த நாகரிகமெனல் பொருந்தாது. இதற்குக் கரணியம், அயலார் ஆட்சியின் கீழ்த்தமிழ் நாடு பல்லாற்றானும் பெற்ற மாற்றமேயாம். அயலார் நம் நாட்டிற்கு வந்தமையான் ஒரு சில நன்மைகள் உண்டாயினும் தீமைகள் பலவாகும். அவற்றுள் தமிழ் மொழிச்சீர்கேடு, தமிழ்ப்பண்பாடு, நாகரிகக்கேடுகள் குறிப்பிடத்தக்கன. தீந்தமிழ் வளர்த்த தென்றமிழ் நாடு செந்தமிழ் போற்றிய சீர் கெழுநாடு; ஒண்டமிழ் ஒளிர்ந்த உயர்தனி நாடு; மொழியாய்வு செய்த முத்தமிழ் நாடு; கன்னித் தமிழ்காத்த கலைநிறை நாடு; உலகிற்கு நாகரிகம் உணர்த்திய நாடு; பல்லாண்டுகளாகப் பல மாற்றங்கட்குட்பட்டு, இன்று நிலை குலைந்து நிற்கின்றது.

ஐம்பதாயிர மாண்டுகட்கு முன்னரே 'தமிழ் நாடு' சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதாக ஆராய்ச்சி வல்லுநர் அறுதியிட்டு உறுதி செய்துள்ளனர். அத்தகைய தமிழ் நாட்டைக் காணவே அவாவுகின்றோம். அங்குக் கல்வி, தொழில், காட்சி, விழா, குமுகாயம், அரசியல் என்பன எங்ஙனம் அமையவேண்டும் என்று தமிழ்க் கண்ணோட்டத்துடன் விளக்குவாம்.

உ. கல்வி: இன்றைய கல்விமுறை தமிழ் நாட்டிற்கும், வாழ்க்கை இயலுக்கும் ஏற்றதன்று. தமிழ் நாட்டில் கல்வி கற்றவன் எவனுயினும் அரசியலில் அலுவல் தேடி அலையாமல் தன் வாழ்க்கையைச் செம்மையாக நடத்தற்குரிய வகையில் கல்வித்திட்டம் அமைக்கப் பெறும். தொழில்கல்வியும் உயர்வகுப்பிலிருந்து கற்பிக்கப் பெறும். படித்து முடித்தவுடன் என்னவேலை செய்வது? என்று ஏங்கவேண்டியிருக்காது பாடத்திட்டங்கள் அதற்கேற்ற முறையில் இயற்றப்பெறும். பதினெட்டு அகவைக்குட்பட்ட அனைவரும் பயிலல் வேண்டும். யாவர்க்கும் உயர்தரப்பள்ளி முடியக் கட்டாய இலவசக்கல்வி அளிக்கப் பெறும். எட்டாம் வகுப்பு முடிய தமிழ் மட்டில் கற்பிக்கப்பெறும் ஒன்பதாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்படும். தமிழும் ஆங்கிலமும் என்ற இருமொழிக் கொள்கையே நடைமுறையில் இருக்கும். கல்லூரி முடியத் தமிழே பாடம் பயிற்று மொழியாக இருக்கும் கல்லூரியில் அயன்மொழிகளில் சிறந்த மொழிகளைப்பயில வாய்ப்பளிக்கப்படும். விருப்பமுடையவர் எந்த மொழியும் பயிலலாம்.

தமிழ், எழுத்துக் கூட்டிப் படிக்கும் முறையிற்றான் கற்பிக்கப்பெறும். அதுவே தமிழைப் பிழையின்றி எழுதற் கேற்ற இனிய முறை. தமிழ்க் கணிதமும், ஆங்கிலக்கணிதமும், அனைத்துலகக் கணிதமும் பயிற்றுவிக்கப்பெறும். தமிழ் நாட்டுவரலாறும், தமிழ் வரலாறும் மூன்றும் வகுப்பிலிருந்தும் எட்டாம் வகுப்பிலிருந்தும் முறையே கற்பிக்கப்படும். உலகவரலாறு கல்லூரி வகுப்புகளில் கற்பிக்கப்படும். அயல் நாட்டிற்குச் சென்று உயர்கல்வியோ, தொழிற்கல்வியோ பயிலத்தக்க நல்ல அறிவும் வாய்ப்பும் உள்ள மாணவர்கட்கு வேண்டிய உதவியளிக்கப் பெறும்.

நல்லொழுக்கம், அறிவுத்திறன், கற்பிக்கும் வன்மை, உடல் வன்மை, தோற்றப்பொலிவு சுறு சுறுப்பு முதலிய நல்லியல்புகள்

உள்ளோரையே ஆசிரியர்களாக அமர்த்தப்பெறும். பயிற்சிக்கு ஆசிரியமாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போழ்தே இத்தகைய இயல்புகள் உள்ளவரையே தேறப்படும். எல்லாவற்றுக்கும் மேலாகத்தமிழ்ப்பற்றும், தமிழ்நாட்டுப்பற்றும் உடையோராக இருத்தல் வேண்டும். இவையற்றோர் பிற தகுதிகள் யாவும் பெற்றவரேனும் பொறுக்குத் தேர்வில் வெற்றிபெறல் இயலாது. அறிவுக்குப் பொருந்தாத கற்பனைக்கதைகளும், அறிவியலுக்கு முரணான கருத்துகளும், தமிழ்ப்பண்பாட்டுக்கு ஒவ்வாத ஒழுக்கங்களும் பாடத்திட்டத்தில் இடம் பெறா.

தமிழ் எழுத்துகளைத்திருத்துவதோ, வேற்று எழுத்துகளைக் கையாள்வதோ கூடா. எழுத்துச் சீர்திருத்தம் செய்ய எண்ணுவார் எவராயினும் தமிழைப் பொறுத்த வரை இன்றுள்ள திருத்தங்களுடன் நின்றுவிடுதலே அவர் தமிழ்க்குச் செய்யும் தொண்டாகும். மொழிநூல் வல்லுநர்களே இதற்கு முழுப்பொறுப்பாவர். அரசியல் தலைவர்களோ, கட்சித்தலைவர்களோ, குமுகாயச்சீர் திருத்தம் பேசுவோரோ மொழித்திருத்தத்திற்கு முனைதல் தடுக்கப் பெறும்.

௩. தொழில்: எல்லார்க்கும் சமவாய்ப்பு என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்தே வாழ்தல் வேண்டும். பதினெட்டு அகவைக்கு மேற்பட்ட ஆண்பெண் அனைவரும் தொழில் இன்றி மடிந்திருத்தல் இயலாது. உயர்வு-தாழ்வு ஏழை செல்வர் என்ற பாகுபாடு தொழிலாற்றுவதில் இருக்க மாட்டா. தொழில்வரிதொலைந்துபோம்.

கல்விக்கூடங்களில் தொழில் பயிற்சிக்கே முதலிடம். தொழிற் பயிற்சிக் கூடங்கள் யாவும் அரசினராலேயே நடத்தப் பெறும். தொழிற்கல்லூரிகளும். பிறவும் அரசினரின் ஆட்சியின் கீழே இருக்கும்.

> "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற வள்ளுவர் வண்மொழி என்றும் நடைமுறையில் இருக்கும்.

சமய வேறுபாடு, குலவேறுபாடு, குடிவேறு பாடு இன்றி எல்லாரும் உழைப்பவர்களாகவே இருத்தல் வேண்டும். உழைப்புக்குத்தான் உயர்வு அளிக்கப்பெறும். உணவு என்பது தானுழந்து உண்பதே; மிக்க உழைத்து உண்ணுதான் உண்ணும் உணவு கக்கித்தின்னும் நாயின் உணவைப்போன்றதே.

அங்காடிகள் யாவும் அரசினரால் நடத்தப் பெறும் இப்பொழுது இருப்பது போன்று தனியார் பகற்கொள்ளையடிப்பதும், பொது மக்களை ஏமாற்றுவதும் இல்லாது போகும். பொருள் கட்கு மக்கள் கொடுக்கும் பொருள் (பணம்) மக்களின் நன்மைக்கே பயன் படுத்தப் பெறும் தமிழ் நாட்டில் இல்லாத பொருள்களை அயல் நாட்டிலிருந்து தருவித்தலும், இங்கு மிகையாக உள்ள பொருள்களை அயல் நாடுகட்கு விடுத்தலும் தாராளமாக நடைபெறும்.

அயல்நாட்டில் உள்ள தொழில் வல்லுநர்களைக் கொணர்ந்து நம் நாட்டவர்க்குத் தொழிற்கல்வி கற்பிக்கப்பெறும். தொழிலாளிகட்கு அவர்களின் வாழ்க்கைச் செலவிற்கேற்ப ஊதியமளிக்கப்பெறும். அவர்கட்கு மருத்துவ உதவி இலவசமே. அவர் தம் குழந்தைகட்குக் கல்லூரிக் கல்வி வரை அரசியற்செலவிலேயே அளிக்கப்பெறும்.

பெரும்பாலும் தமிழ்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருள்களை கொண்டே தொழில்கள் நடைபெறும். ஈண்டு கிடைக்கக்கூடாத பொருள்களாயின் வெளிநாடுகளினின்று வருவிக்கப்பெறும். மண்ணுள் மறைந்துகிடக்கும் மதிப்புமிக்க கனிப்பொருள்களை வெளிக்கொணர எல்லாவகையான முயற்சிகளையும் தமிழ் அரசு மேற்கொள்ளும்.

திரைப்படத் தொழில் அரசியலால் நடத்தப் பெறும். மக்கட்கு அறிவியல் அறிவும், வரலாற்று அறிவும், உலக அறிவும் உண்டாக்கத்தக்க படங்களே திரையிடப்பெறும். காதலையே முழு நோக்காகக் கொண்டு கதையமைத்த படங்களே காட்டப்படா.

ச. காட்சிகள்: கண்காட்சிகள் "எவும் அரசே நிகழ்த்தும். பொருட்காட்சிகள். திரைப்படக் காட்சிகள், நாடகக் காட்சிகள், பிற காட்சிகள் மக்கள் களைப்பைப்போக்கிக் களிப்பூட்டும் வகையினவாகவே அமைக்கப்பெறும்.

அகப்பொருள் இலக்கணத்திற்கு அப்பாற்பட்ட காதல் விளையாட்டுகள் படம் பிடித்துக் காட்டப்படா. வாழ்வியல், இன்பவியல், துன்பவியல், பொருளியல், மனையியல், அறிவியல், வரலாற்றியல், குமுகவியல் முதலிய இயல்கள் தொடர்பான படங்களே படப்பிடிப்பு நிலையங்களில் படமாக்கித் திரையிடப்பெறும், பொருட்காட்சிகளும் அரசினராலேயே நடத்தப்பெறும். ஆனால், பகடிவரி தண்டல் செய்யப்படமாட்டாது.

தமிழர் நாகரிகத்திற்கும் பண்பாட்டுக்கும் தீங்கு விளைக்கும் படங்கள் பிடிக்கப்படா வாழ்க்கைக்குப் பொருந்தாத, மூட நம்பிக்கைகளை வளர்க்கக்கூடிய எந்தக் காட்சியும் காட்டப் பெறா. அறிவையும், ஆற்றலையும், ஆண்மையையும், மறத்தையும், உள உரத்தையும் உருவாக்கத் தக்க காட்சிகளே காண்பிக்கப் பெறும். இளைஞர்களைத் தீய ஒழுக்கத்தில் ஈடுபடுத்தும் எந்தக் காட்சியாயினும் கடியப்படும்.

ரு. விழாக்கள்:

போலிச் சமயத் தொடர்பான விழாக்கள், தெய்வத் தொடர்பான மூட விழாக்கள் தடை செய்யப்படும். அத்தகைய விழாக்கள் கொண்டாடுவார் நாடு கடத்தப்படுவர். தமிழரசு கொண்டாடலாம் எனக் குறிக்கும் விழாக்களையே மக்கள் கொண்டாடல் கூடும்.

தமிழர் திருநாள் (பொங்கல்). திருவள்ளுவர் விழா, தமிழ்ப் பெரியார்கள் விழா, தமிழ்நாட்டு விடுதலைவிழா ஆகியவை கொண்டாடலாம். ஏனைய எந்த விழாவும் அரசியல் இசைவு பெற்றே நடத்தல் வேண்டும். திருமணம், நடுகல்விழா, சாவுக் கரணம், வெள்ளணிவிழா முதலியன இசைவு பெறவேண்டியவை. இலக்கிய மன்றங்களின் ஆண்டு நிறைவு விழாக்கள் தெரியப்படுத்தி விட்டு நிகழ்த்தலாம்.

தெய்வத்தின் பேரால் திருவிழாக்கள் நடத்துவதும், அதற் கெனக் காவடிகள் கட்டுவதும், தலையை மழித்துக் கொள்வதும் அலகு குத்திக் கொள்வதும், உயிர்களைக் கொலை செய்வதும் அகற் றப்படும். தவறிச் செய்தால் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப் படும். பகுத்தறிவுக்குப் பொருந்தாத எந்தப் பெருநாளும் கொண் டாடக்கூடாது.

௬. குமுகாய அமைப்பு: சமய வேறுபாடு, குல வேறுபாடு, குடி வேறுபாடின்றி எல்லாரும் ஒரே இனமாக வாழ்வர். உயர்வு தாழ்வு கருதாது தாழ்த்தப்பட்டவர், தீண்டப்படாதவர் என்ற பிரிவுகள் இன்றி, யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப் பாங்குடன் யாவரும் ஒன்றுபட்டுறைவர்

பார்ப்பனர் சேரியும் பறையர் சேரியும் இரா. சமயத்தின் பெயராலும், குலத்தின் பெயராலும் ஊர்ப்பெயர், தெருப்பெயர்கள் இருக்கமாட்டா. ஒருவர்க்கொருவர் கொள்வனை, கொடுப்பனைகளும் நிகழும். பிறப்பினால் எவரும் உயர்ந்தவர் அல்லர் என்ற கொள்கை நிலைபெறும்.

பெண்களுக்கு இருபது அகவையிலும் ஆண்களுக்கு இருபத் தைந்து அகவையிலும் திருமணம் நிகழ்த்தப்பெறும். அக்காலம் வரை இருபாலாரும் மாணவ வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்தல் வேண்டும். ஆணும் பெண்ணும் தொல்காப்பியர் கூறும் பத்துப் பொருத்தங்களின்படியே தேர்ந்தெடுக்கப்பெறுதல் வற்புறுத்தப் பெறும். அத்துடன் ஒருவரையொருவர் நேரில் கண்டு இசைவு பட்டாலன்றி மணவுறவு நிகழாது.

கணியர்கட்கோ, வெறியாடுவோர்க்கோ வேள்விசெய்வோ னுக்கோ தமிழ்நாட்டில் வேலை இருக்காது. குறி சொல்லுவோரும், பூச்சாத்திகளும் இருக்கமாட்டார்கள்.

உழைக்காமல் உண்டு ஊர் சுற்றும் சோம்பேறிகள் இரார். உழைத்து உண்பதே உயர்வானது என்ற மனப்பான்மை மாந்த ரிடையே நிலவும். ஏற்பாரும், ஈவாரும் இல்லையென்று கூறும்படி வாழ்க்கைமுறை அமையும். ஒருவன் ஒருத்தியைத்தான் தனது வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளல் கூடும். கணவனையிழந்த இளம்பெண்ணும், மனைவியை இழந்த இளைஞனும் விரும்பின் மறு மணம் செய்துகொள்ளலாம். ஆனால், அவ்வாறு மணம் இல்லா னுக்கோ கணவன் இல்லாளுக்கோ அவ்வாறு துணை இழந்தவர் களையே மறுமணம் செய்துகொள்ள வற்புறுத்தப் பெறும். திருமணங்கள் யாவும் பதிவு செய்யப்பெறல் வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான சொத்துரிமையுண்டு. ஒரு குடும்பத்திற்கு, அதாவது ஐந்து பேர் உள்ள குடும்பத்திற்கு, இருபது மாகிலத்திற்குமேல் உரிமையாக இருத்தல் கூடாது. நில முடையோர் தாங்களே அதனைப் பயிர் செய்தல் வேண்டும். உழவுத் தொழில் செய்யாதவர்க்கு நிலம் கிடையாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்தே வாழ்தல் வேண்டும்.

ஆண், பெண் என்ற வேறுபாடின்றி உழைப்பை மேற் கொண்டே பொருள் தொடுத்து வாழ வழி செய்யப்படும். எந்தத் துறையில் எவர்க்குத் திறமையுண்டோ அந்தத்துறையில் அவர் பணிபுரிய அமர்த்தப்பெறுவர். தொழில் செய்யமுடியாத முதிய வர்களுக்குத் தமிழ்நாட்டரசு வேண்டிய உதவி செய்து நலமாக வாழ வகை செய்யும். நோயாளிகளின் நோய் நீக்கத்திற்குத் தக்க ஏற்பாடு செய்யப்பெறும். தனிப்பட்டவர்களிடம் பொருள் குவிவதை அரசு ஏற்காது. அஃது அரசுக்கே உரிமையாக்கப் பெறும். அறநிலையங்கள், மடங்கள், கோயில்கள் முதலியவற்றின் பெயரால் நிலமோ, வேறு சொத்தோ இருத்தல் சட்டமுரணாகும். துறவறவாழ்வை விழைவார்க்கு அரசு ஆவன செய்யும். ஆனால், இல்லறம் ஏற்காது துறவறத்தை எவரும் மேற்கொள்ள முடியாது.

ஏ. அரசியல் வாழ்வு : தன்னுட்சிப் பெற்ற தமிழ்நாட்டில், நூற்றுக்கு நூறு பேரும் நன்கு கற்றவராயிருப்பராதலின், மக்க ளாட்சியே நடைபெறும், மக்களால் ஒப்போலைமூலம் தேர்ந்தெடுக் கப்பெற்ற தலைவரால் ஆளப்படும். துணைத் தலைவரும் இருப்பர். அக்கால் தேர்தலுக்கு தனி முறைகள் வகுக்கப்பெறும். குடியரசுத் தலைவர்க்கு உதவியாக எண்பேராயமும், ஐம்பெருங்குழுவும் இருக்கும். இவற்றில் உறுப்பினராயுள்ளவர்க்கு வாகாய் வாழ்வதற் குரிய எல்லா நலன்களும் செய்யப்பெறும். தனிப்பட்ட ஊதியம் அளிக்கப்பெறாது. பெருமைக்காகவே பணிகள் புரிவர்.

மேற்கண்ட ஆட்சிக்கும் ஆயங்கட்கும், குழுக்கட்கும் நல்ல கல்வியறிவும், பட்டறிவும், ஆற்றலும் உள்ள ஒரு அகவை நிரம்பிய வர்களே தேர்ந்தெடுக்கப்பெறுவர். குடியரசுத்தலைவரும் துணைத் தலைவருமே தேர்வர். திருக்குறள் போன்ற அறநூற் பயிற்சி அவர்கட்கு இன்றியமையாததாகக் கருதப்பெறும்.

சட்டதிட்டங்கள் யாவும் மக்கள் நலன் கருதியே இயற்றப் பெறும். மக்கட்கு ஏலாத எந்தச் சட்டமும் தமிழரசுச் சட்ட நூலில் இடம் பெறாது. முறைமன்றங்கள் வட்டத்திற்கு ஒன்று விழுக்காடு இருக்கும். வழக்கறிஞர்களோ, வழக்குரைஞர்களோ இருக்கமாட்டார்கள். ஆசிரியர், மருத்துவப் பேரறிஞர், பொறி யியல் வல்லுநர், அறிவியல் ஆய்வர் முதலியோர் அரசால் நன்கு மதிக்கப்பெற்றுப் பெருமைப்படுத்தப் பெறுவர். கையூட்டு, கைக் கூலி பெறும் அலுவலர் எவராயிருப்பினும் வாணாட் சிறைத் தண்டமே கொடுக்கப்பெறும். கள்ளவாணிகம் செய்வோர் நாடு கடத்தப்பெறுவர் ; கள்ளப் பணம் அச்சிடுவோர் தூக்கிலிடப் படுவர் ;

வணிகம் யாவும் அரசே ஏற்று நடத்தும். தனிப்பட்டவர் வாணிகம் செய்ய இசைவு தரப்படமாட்டாது. உண்டி விடுதிகளும், உண்டிச்சாலைகளும் அரசின் கண்காணிப்பில் இருக்கும். வட்டத் தலைநகர், மாவட்டத் தலைநகர்களில்தான் உண்டி விடுதிகளும், சாலைகளும் இருக்கும். சிற்றூர்களில் சிற்றுண்டிச் சாலைகளோ, தேநீர் நிலையங்களோ இருக்கமாட்டா. ஊருக்கொரு கூட்டுறவுப் பண்டகசாலை நிறுவப்பெறும். அதனை அரசே நடத்தும்.

வட்டத்திற்கொரு திரைப்படக் கொட்டகையே இருக்கும். மாவட்டத் தலைநகரில் இரண்டு கொட்டகைகளும், நகர மன்றங்கள் உள்ள நகரங்களில் இரு கொட்டகைகளும் அமைக்கப் பெறும். கல்விக்கூடம் இல்லாத ஊரே இருக்காது.

வட்டத் தலைநகரிலும், நகராட்சியூர்களிலும், மாவட்டத் தலைநகர்களிலும் ஒவ்வொரு கள்ளுக்கடை நிறுவப்பெறும். அயல் நாட்டுச் சரக்குகளாகிய "பிராந்தி, ஒயின், பீர்" முதலியன விற்கப்படா. புகையிலையால் செய்யப்பெற்ற எந்தப் பொருளும் தமிழ்நாட்டில் கிடைக்கமாட்டா. புகையிலை பயிர் செய்ய அரசு இசைவு தராது. காப்பியும் தேநீரும் விற்கக்கூடாது. காப்பி. தேயிலை பயிர் செய்வதும் தடை செய்யப்படும். மலைப்பகுதிகளில் அவற்றிற்கு மாறாகப் பழங்களே விளைவிக்கப்பெறும். பொது மக்கள் நலனைக் கெடுக்கும் எந்தப் பொருளையும் விற்பனை செய்யவோ விளைவிக்கவோ தமிழ்நாட்டில் இடங்கொடுக்கப்படமாட்டாது.

அ. முடிவுரை: மேற்கூறியன வருங்காலத் தமிழ்நாட்டு அமைப்புக்குள் இருக்கவேண்டிய, நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியவற்றிற்குரிய சில சிறு குறிப்புகளே. அறிவு சான்ற பெரியோர் அவற்றை வகைப்படுத்தி. விரிவுபடுத்தி, முறைப்படுத்திப் பின்பற்றுவார்கள். ஆனால், தமிழ்க்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழினத்திற்கும் ஊறுவிளைக்கும் எந்தச் சட்டமாற்றமும், திட்ட மாற்றமும் ஏற்புடைத்தன்று. இன்றுள்ளன போன்று அரசியல் கட்சிகள் வருங்காலத் தமிழகத்தில் இருக்கமாட்டா. அவற்றிற்கு வாய்ப்பும் அளிக்கப்படமாட்டாது.

ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் எல்லாவற்றையும் ஏற்று மக்கட்கு நலம் பயக்கும் வகையில் செயலாற்றும். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற குடியரசுத் தலைவரும், துணைத் தலைவரும் பொதுமக்கள் தொண்டர்களாகவே இருந்து எப்பணியையும் சீர்பெறச் செய்து முடிப்பர். தமிழ்நாட்டில் இருபத்தைந்து அகவை நிரம்பிய, பள்ளியிறுதி வகுப்புக்குக் குறையாத கல்வி கற்ற, ஆடவர், மகளிர் அனைவர்க்கும் ஒப்போலைச் சீட்டளிக்கும் உரிமை உண்டு. ஆட்சிக்குத் தமிழும் அயலார் தொடர்புக்கு ஆங்கிலமும் புழக்கத்திலிருக்கும். மக்கள் நலத்திற்காக அரசாட்சியில் சட்டங்கள் இருக்குமேயன்றி, சட்டத்திற்காக மக்களை இன்னலுக்குட்படுத்தும் நிலை என்றுமே ஏற்படாது.

"மக்கள் உரிமையே அரசுரிமை"

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

SIRUPANATTRUPPADAI

—ம. இலே. தங்கப்பா, எம். ஏ., பி. டி.

The fishers there will treat you to some liquor old
Brewed by the fisher girl with shoulders broad
And a blotless face, the envy of the moon
And eyes like lance's tips lighting a fire
Burning red and smoking black
With fire wood fragrant washed ashore by waves
That lay like a slum bering camel tall.
And singing of the chief of kidangil, the garden town,
A worthy man who wears the garlands fresh,
You will play on your flute, the others keeping time.
Then you all will get the **Kulal - fry** from every home.
Then you will pass along the ways
Where the fresh buds of **Avarai** form a coral string
The dark Kaya - buds unfold a peacoks flock
The **luscious** Musundai - Vine does carry baskets round
The clustered Kanthal's rich in blossoms finger - like
The velvet - worms along the gardens crawl
Thus pass the **Mullai - woods** with the **Mullai** trait
And enjoying the evening sun that sets beyond
The high hills where the brooklets leap from caves,
The victorious, spear - fame Vellore you will reach
Where the buds blossom in the tanks like spear heads
And in the thatched huts so hot with the burning son
You will get fine sour - rice and venison sweet
Cooked by the wood land girls which you will eat
With your women wearing bangles few
Whose complexion's like the tender mango leave.
Then lies the land of fertile fields
Where the king fisher blue with golden beak
Sits on a twig of a short trunked kanchi tree
With buds arrayed as in a garland fine
It watches the deep ponds and waits for long
Till at last it dives and a '**Kayal**' fish
In which attempt the lotus leaves are torn
Mong which the unfolding bud appears and bees
That come to suck the honey form a line ;
That scene's like the moon and the serpent big
That came to swallow it.

(தொடரும்)

சிதல் (கறையான்) (உயிரியல்)

சிதல் அல்லது கறையான் புற்றுகளில் கூட்டமாக வாழும் சிற்றுயிர் இனத்தது. வெப்ப நாடுகளிலேயே பெரும்பாலும் காணப்பெறும். மிகப் பழைமையான உயிர். மாந்தனும் புள்ளும் தோன்றுதற்கு முன்—25 கோடி ஆண்டுகட்கு முன்னேயே இவ்வினம் தோன்றியுள்ளதாம்! சிதல்களின் வாழ்க்கை வியப்பானது. இக் கூட்டத்துக்கு ஓர் அரசியும் அரசனும் உண்டு. அரசியின் வேலை முட்டையிடுவதே. ஒரு நாளில் 7500 முட்டைகள் இடும். அரசி மற்றவற்றினும் ஆயிரக்கணக்கான மடங்கு பெரிய உருவம் படைத்தது. அரசி இறந்துபடின் அடுத்த வகுப்பைச் சேர்ந்த ஒன்று அரசியாக்கப் பெறும். அரசியாகிய பின்னரே முட்டையிடும் பணியினைச் செய்தல் வேண்டும். இச் சிதல்களுள் போர்மறவர்களும் உண்டு. பிற எறும்பு போன்ற உயிர்களிடமிருந்து படையெடுப்பு நேர்ந்தால் இப்போர்ச் சிதல்கள் முன்சென்றெதிர்க்கும். அவ்வேளை பிற சிதல்கள் போர்மறவர்கட்குப் பின்புறமாகத் தங்களைச் சுற்றிக் கோட்டை எழுப்பிக் கொள்ளும். போர்ச் சிதல்கள் தம் இன நலங்காக்கப் போர் புரிந்து அழியும். இவை ஈரத்திலேயே வாழ்கின்றன. இவ்வீரத்தைத் தாங்களே உண்டாக்கிக் கொள்கின்றன. புற்றின் மேற்பகுதி கைதொட முடியா அளவு வெப்பத் தாற் கொதிப்பினும், உடல்பகுதி ஈரம் வாய்ந்திருக்கும். உள்ளே பூஞ்சைக்காளான் தோட்டங்களுமுண்டு. இவை நிலத்தை உழுது கிளறுகின்றன. புற்றுக்காக மண்ணெடுக்கும் இவை, ஆப்பிரிக்காவில் 1 ஏக்கர் நிலத்தில் 5000 டன் மண்ணைக் கிளறியிருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

இவற்றின் புற்றுகள், இவற்றின் கட்டிடத்திறனுக்கு வியத்தகும் சான்றுகளாம். மேடைகளும் மாடங்களும் வளைவுகளும் நிறைந்த கோட்டைகள் போன்றன இப்புற்றுகள். முப்பதடி உயரம்வரை ஓங்கிய புற்றுகளும் உண்டு. இவற்றின் சிறிய உருவத்தோடு இப்புற்றின் உயரத்தையும் ஒப்புநோக்கின் இவற்றின் கட்டிடத் திறன் வெளியாகும். மாந்தன் தன் அளவிற்கு இரண்டு கற்கள் உயரம் உள்ள கட்டிடங்களை எழுப்பினுல்தான் இவற்றுக்கு இணையாக முடியுமாம்! சிதல்களின் வாழ்க்கை ஈரத்திலும் இருளிலுமே கழிகின்றது. புற்றைவிட்டு வெளிச்செல்லும் பொழுதெல்லாம் ஈரத்தையும் இருட்டையும் உடன்கொண்டே செல்கின்றன. தங்களைச்சுற்றி மண்ணினுல் நீண்ட குழாய்க் கூடுகளை அமைத்துக்கொண்டே செல்கின்றன.

இச்சிதல்களின் உணவு மரம், செடி, கொடி, தாள், துணி எல்லாம். எல்லாவற்றையும் அரித்துவிடுகின்றன. இவற்றின் வயிற்றுள் புரோடோசோவா (Protozoa) என்னும் நுண்ணிய ஓரணு உயிர்கள் பல வதிகின்றன. இவையே கறையானுக்குச் செரிப்புமண்டில மாகப் பயன்படுகின்றன எனலாம். கறையான் மரத்தைக் கடித்து உட்கொள்ளும். ஆனல் அம்மரச் சாரத்தைச் (Cellulise) செரிக்க அதனுல் முடியாது. புரோடோ சோவாக்களே அவற்றைச் செரிப்பிக்கும் செய்கின்றன. சிதல்கள் தங்கள் வயிற்றிலுள்ள இந் நுண்புழுக்களுடன் ஒரு கூட்டு வாழ்வை அமைத்துள்ளன எனலாம். ஒன்றிலேயேல் மற்றது உயிர் வாழவியலாது. கறையான்கள் உணவு உட்கொள்ளும் முறையும் கூட்டுறவினதே. உணவு ஒன்றின் வாயினின்றே மற்றொன்றிற் கூட்டப் பெறுகின்றது. இவ்வாறே குழு முழுவதற்கும் உணவு செலுத்தப் படுகின்றது.

புலரும் பொழுது!

இரா. இளவரசு

வெள்ளி முளைத்தது வெள்ளரிப் பூவே!
அள்ளிச் சுண்ணம் அடர்கரும் பானையிற்
பூசிய தென்னப் புதையிருள் தேய
வீசிய தாரோ? வெளுத்தது கீழ்வான்!
எச்சம் அணைத்தும், இன்றுணை புணர்ந்தும்
குச்சியிற் கட்டிய கூட்டினும் பொந்தினும்
துயிலும் புள்ளினம் தூவிழி மலர்த்திப்
பயிலும் மாணவர் பள்ளியை நோக்கத்
தொகைதொகை யாகப் புத்தகம் தூக்கி
வகைவகை யான வண்ண உடையுடன்
செல்லும் காட்சியைப் போலச், சிறப்பொடு
மெல்லிய இறக்கை விண்ணில் விரித்து
'காகா' என்றும் 'கீகீ' என்றும்
'கூகூ' என்றும் கூவிப் பறந்தன.
ஆய்வுக் கால்கள் அம்மென் சிறகு
சாய்வுப் பார்வை பெடையை வளைக்கும்
நீண்ட கழுத்து நிமிர்ந்த கொண்டை
பூண்டுச் சிறுதலை பொடிச்செவி எழிற்கண்
புன்மைக் கழிவைப் பூச்சி புழுவைத்
தின்னும் அலகுடைச் சிறுவாய்ச் சேவல்
'கொக்கரக் கோ'வெனக் கூவிக் கூவி
"மக்களே! விழிப்பீர்! மாதரே! எழுவீர்!
பெருக்குக முற்றம் பிறர்நலம் சேர்க்கக்
கருக்கலைத் தொலைத்துக் கதிரவ வேந்தன்
நிலாமுகம் காண நீள்விசும் பேறி
உலாவரு முன்னே உரியவை செய்க"
என்றொரு பொருளை இசைக்க, இசைக்க
ஒன்றும் அறியா துறங்கினர் சிறுவர்.
தலைமுடி குலையத் தடங்கண் சிவப்ப
மலைப்பழக் கன்னம் இதழ்நிறம் மாற
உயிரும் மெய்யும் ஒன்றிணால் தமிழில்
உயிர்மெய் எழுத்து உருவா தல்போல்,
ஒட்டும் பசையின் ஒட்டிய தாளாய்
ஒட்டிய ஈருடல் ஓருடல் ஆகக்
காற்றிடைப் போகாக், கவவுப் புணர்ச்சி
ஊற்றில் திளைக்கும் ஒன்றிய காதலர்
"பாழாய்ப் போக பகலவன் அவனொடு
பாழாய்ப் போக பகைமைச் சேவல்"

என்றே சீற்றம் எழும்பத் துயரொடு
ஒன்றிய உடலம் ஓரிரண் டாக்கினர்.
வாசல் தெளித்தனர், வகைபெறக் கூட்டினர்,
ஓசைக் கலங்கள் ஒளிபெறத் துலக்கினர்,
கோழி அடைத்த கூண்டைத் திறந்தனர்,
வாளி குடத்தொடு தண்ணீர் வார
நாணம் படர நடந்ததை எண்ணிக்
கேணியை நோக்கினர் கிளிமொழிப் பெண்டிர்!
பழுத்த கிழங்கள் திண்ணையைப் பார்த்தன,
விழித்த பிஞ்சுகள் 'விருல்விருல்' என்றன,
கைகால் அசைத்தனர் சுன்றுச் சிறுவர்,
கைமெய் பூட்டக் களித்த ஆடவர்
மனைவியைப் பார்க்க நாணிய மனத்தின்
குனிந்த தலையொடு கூனிக் குறுகி
நடந்ததைக் கடைக்கண் நாட்டி அறிந்த
மடந்தையர் பூவிதழ் மலரும் இளநகை,
கன்று காலிகள் தீனியைக் கண்டன,
மென்றுபற் குச்சியை விரலிடை வைத்தே,
பச்சை வயல்வெளி படர்ந்தனர் ஆடவர்
அச்சோ! கிழக்கில் ஆரோ பெருந்தீ
மூட்டினர்! அதனால் விண்ணெலாம் செம்மை
காட்டுதல் காணாய்! கண்மணி சுழற்றிப்
பாரடா குளத்தை! பம்பரம் போலக்
காரிருள் கிடந்த கவின்தா மரையிதழ்
விரித்தது தேர்வில் வென்ற மாணவன்
சிரித்ததைப் போலே! என்ன செய்தியோ!
அல்லிக் கென்ன தாமரை அலர்ந்தால்?
எல்லியைக் காணின் இனையும் கள்ளனாய்
குழவிகள் கைவிரல் குவிந்த தென்ன
அழகிதழ் கூம்பும், அந்தோ இரக்கம்!
மயக்கிப் பண்ணால் மலரைத் தும்பி
முயக்கம் கொள்ளும் மூழ்கும் தேனில்
கொழுந்தில் புரண்டு குளநீர் அலைத்துப்
பழங்களில் முத்தம் பதித்துக் கோட்டுக்
குயிலிசை எடுத்துக் கொய்யாக் கனியிதழ்
மயில்புரை மாதர் மலருடல், தோய்ந்து
எங்கணும் சிரித்த எண்ணிலாப் பூக்களில்
தங்கிய நறுமணத் தாதினைப் பூசித்
தென்றற் குறும்பன் திருஉலாப் போந்தான்,

பொன்றிய திருளே! பூத்தது புவியே!
புல்லின் நுனியில் பூவின் இதழில்
நெல்லின் பயிரில் நெடிய கரும்புத்
தோகையில் எங்கும் துளித்துளி யாகப்
போகிய இரவின் பொடிவியர் தண்பனி
"நீண்ட தென்னை, நிலாத்தொடு மாடம்
காண்டகு குன்றக் கலையழ கெல்லாம்
என்னுள் அடங்கும் என்றே தருக்கி,
மன்னவ நினைப்பின் மகிழ்ந்தது பாராய்!
ஏ! ஏ! கிழக்கில் இருவிழி நாட்டு!
ஓவென முழங்கும் ஓய்வறு முந்நீர்
எப்படி நெருப்புக் கோளம் ஈன்றது
செப்படி வேலை! தெரியவில் லையே!
பெருங்கனி யோஅது? பிறைநுதற் பொட்டோ?
அருந்தமிழ் காக்க ஆருயிர் தந்தோர்
சிந்திய குருதி திரண்டிவ் வாறு
விந்தைக் கதிராய் விளைந்தது கொல்லோ?
என்னே புதுமை! எழுந்த செங்கதிர்
மின்னல் தகடுகள் விளைக்கிறன் நீரில்,
பூசுகின் றனே பொன்னை உலகின்
காட்சி எல்லாம் கதிரவன் ஆட்சி!
மின்னிய பனித்துளி மன்னவன் எங்கே?
அன்னே! தொலைந்தான், அவற்குநம் இரங்கல்;
தன்னை மிகுத்துத் தருக்கித் திரிவார்
பின்னைப் பனித்துளிப் பாடம் பெறுவார்
எங்கணும் புதுமை! எங்கணும் பொலிவு!
முங்கிய தொளியில் உலகம் முழுதுமே!
குளிரோ பறந்தது, இன்பமோ கொள்ளை!
தளிரில் இளமைத் தளதளப் பொலிவு!
பூக்களில் பூவையர் புன்னகைப் பாங்கு!
பாக்களில் பொருளாய்ப் பரவிய நறுமணம்
காயில் மெருகு! கனியில் மினுக்கு!
தோயும் நீரில் அழகின் துள்ளல்!
கண்படு இடமெலாம் கவின்கவின் கவினே!
விண்படு கதிரின் விளையாட் டென்னே!
வீட்டில் மகிழ்ச்சி வெளியில் மலர்ச்சி
நாட்டிக் காலைப் பொழுதை நடாத்தும்
வேலையில் பிறந்து விண்ணில் இவரும்
காலைக் கதிரவன் காட்சி காட்சியே!

மறைந்துவரும் தமிழ்ச்சொற்கள்

(உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் நுண்ணிய பொருள் உணர்த்தும் உலகவழக்குச் சொற்கள் இன்று புதுமை நாகரிகத்தின் பரபரப்பும் ஆழமின்மையும் மிகுதியும் பரவாத நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயிலப்பெறு வனவேயல்லாமல், பிறவிடங்களில் மறைந்துவிட்டன வென்றே கூறலாம். அச்சொற்களை மக்கள் மறந்துபோகாமல் செய்த லும், அவற்றின் நுணுக்கமும் சிறப்புமறிந்து அவற்றை இலக்கிய நடைமுறை வழக்கில் பயன்படுத்தலும் நம் கடனாகும். எனவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள மாணவரும், ஆசிரியரும், தமிழன்பரும் தங்கள் தங்கள் வட்டாரங்களிலும், அண்டை அயற்சிற்றூர்ப் பகுதிகளிலும் வழங்கி வரும் அவ்வரிய அருகிய சொற்களைத் தொகுத்துத் தென் மொழிக்கு விடுக்கவேண்டுகின்றோம்.)

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்

நா. பி. கண்ணன், வடக்கு தி. நகர், சென்னை-17.

அங்கணம்-சாய்க்கடை, கழிவுநீர்
அலவாங்கு-கடப்பாரை
புடங்கு-கைப்பிடி
கோட்டம்-வளைவு
சேப்பட்டை-தோள்பட்டை
விளக்கமாக-ஏராளமாக
பாந்து-இடைவெளி
மோடு-கூரை
நல்லி-குழாய்
கருக்கு-கூர்மை
ஏலா-தோழா
இல்லி-ஒட்டை
குறுணி-எட்டுப்படி
கங்கல்மங்கல்-இருட்டப்போகும் நேரம்
குற்றி-மரக்கட்டை
பதனமாக-பாதுகாப்பாக
சுரை-திரிக்குழாய்
கோளுவி-கொக்கி

அலைக்கழி-துன்புறுத்து
சென்னை-கன்னம்
விரியாப்பு-மயக்கம்
ஓரிப்பு-அருகு, ஓரம்
வாரியல்-விளக்குமாறு
கருக்கல்-இருட்டும் வேளை
வங்கம்-வீணை
பொழி-ஒழுங்கான பள்ளம்
அடியறுவான்-நாசமாய்ப் போவான்
ஒக்கலை-இடுப்பு
உள்ளி-வெங்காயம்
உரி-கால்படி
கடைத்தலை-முதல்முனை
பன்னி-ஆய்ந்து, வெட்டி
போத்தன்-உடல்பருத்தவன்
கன்னமண்டை-நெற்றி
மச்சி-மேடை

தார்சால்-வீட்டின் முன்னறை பட்டாலை-வீட்டின் உம் அறை
வாங்குபலகை-அமரும்பலகை சேப்பு-இடுப்பு எனும்புள்ள
கூராய்ப்பு-மழைபெய்வதன் அறிகுறி [பாகம்
கரண்டை-கணுக்கால்
ஆழாங்கால்-சுவரில் பொருத்தப்பட்ட மிசைப் பலகையினைத் தாங்கும் கால்கள்
தூயக்கால்-கனமான படிமங்களைத் தாங்கும் செங்குத்தான ஊன்றுகோல்
தண்டட்டி, குணுக்கு-பெண்களின் காதணிகள்
இப்பி-இராட்டினம், கயிறிழுக்கும் உருளை

(மேழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்

த. குப்பால், வெப்பங்குளம், முகவை மாவட்டம்)

திருப்பூட்டல்-தாலிகட்டுதல் தும்பு-தாலிக் கயிறு
அருப்பம்-அரும்பு மீசை தூம்பு-நீர் செல்லும் சிறியகுழாய்
புழுங்கல்-அவித்த நெல் தடுக்கு-உட்காருவதற்குப்போடும்
கட்டளை-செங்கல் அறுக்கப் பயன்படும் அச்சு [சிறு பாய்
குலவை-பெண்கள் வாயால் எழுப்பும் மங்கல ஒலி
சவுக்கை-ஊர் மக்கள் கூடுவதற்காகக் கட்டப்பட்டுள்ள பொது
ஊழியம்-ஊர்ப்பொதுத்தொண்டு [இடம்
குறங்கு-தொடை (மணவிழா முடிந்தவுடன் வீடுதிரும்பும் தாய் மாமன் வீட்டிற்கு மணமக்கள் வீட்டிலிருந்து கொடுத்து விடும் ஆட்டின் தொடை)
குவளை-தண்ணீர் எடுத்துக் குடிக்கப் பயன்படும் சிறிய ஏனம்
தண்டை-கணுக்காலில் அணியும் ஓர் அணி
மிஞ்சி-கால்விரல்களில் அணியும் ஒருவகை அணி
திரிகை-கேழ்வரகு அரைக்கும் கருவி
சும்மாடு-சுமைகளைத் தலையில் தூக்கிச் செல்லத் துணியால் முறுக்கி வட்டமாகச் செய்யப்பட்டது
கேப்பை-கேழ்வரகு பிச்சி-பித்துப்பிடித்த பெண்
மூட்டம்-விறகைக் கரியாக்க மண்ணால் மூடி நெருப்புவைத்தல்
குத்தகை-மொத்தமாகப் பேசிக்கொள்ளும் வாணிக ஒப்பந்தம்
கருக்கு-பனைமட்டை (சிறிய பனங்கன்று)
கிடை-ஆடுமாடுகள் கூட்டம் முட்டி-சிறிய மண்குடம்
கலுங்கு-நீர் செல்லும் மதகு
வாங்கரிவாள்-வளைந்த அரிவாள் துலா-ஏற்றம்
கடகம்-பனைநாரால் பொத்தப்பட்ட கூடை [பாகம்

சில்லாடை-பனை, தென்னைமரங்களிலுள்ள சிறிய ஆடைபோன்ற
கிடுகட்டி-ஏதேனும் ஒருசெய்தியை அறிவிக்க எழுப்பும் [பறையொலி
கிட்டம்-இறுகுதல், கட்டெனஇருக்கும் தரை
மிதப்பு-வெண்ணெய் தடுமன்-சளிபிடித்தல்
கொழுந்தன்-கணவனின் தம்பி கொழுந்தி-மனைவியின் உட [பிறந்தா

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்

வே. மணிவாசகன், ஆயக்காரன்புலம், திருமறைக்காடு

புலவு-வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணம்பு ஆகியவற்றை சேர்த்துச் சொல்வது

ஆண்டை-முதலாளி சருவம்-செம்பு
தோண்டி-மட்குடத்தில் சிறியது பல்லாவை-பெரிய மட்குட
நப்பி, நசுவுணி-கருமி(ஈயாதவன்) ஆடுமலை-ஒருவரைத்திட்டுவது
நிறைச்சல்-வீட்டில் முற்றத்திற்கு முன் இருக்கும் தடுப்பு
படைச்சால்-உழவில் விலர்போட்டு உழுவதற்குப் பெயர்
சுருணைபிடித்தல்-வீட்டில் சாணத்தால் மெழுகியபின் எருநீக்கத் தேய்த்தல் பழுதை-வைக்கோல் கயிறு
கோட்டான்-ஓலைப்பெட்டி ஆக்கை-கட்டும் கயிறு
தோம்பை-கூலம் (தானியம்) வைக்கும் கூடு
புரிமனை-பானை தாங்கும் ஓலைச்சுருள்
அந்து-நெல்லைத் தின்னும் பூச்சியின் பெயர்
இரப்பு-வீட்டின் மூலை நாதாங்கி-தாழ்ப்பாள்
பிரிப்புலிக்கழி-கயிறு முறுக்க உதவும் இரு மருங்கும் கவை உள்ள கழி
குந்தாணி-நெல் குத்துவதற்கு அடிப்பரப்பு இல்லாத வட்டமான மண்ணால் செய்த அமைப்பு [துள்ள குழி
உரக்குழி-நெல் குத்த வீட்டில் தரையில் கருங்கல்லடியில் வைத்
உறைக்கிணறு-தொட்டி ஓட்டால் செய்த சிறிய கிணறு
துலவாய்-தண்ணீர் இறைக்கும் மடை முருவம்-எருமை
கடைமரம்-மோர்கடையும் மரத்திற்குப் பெயர்
படவாக்கட்டை-கலப்பையின் அடிப்பகுதி [கட்டை
போலியக்கட்டை-தூணிற்கும், உத்திரத்திற்கும் இடையிலுள்ள
உருட்டு, மிஞ்சி-கால்விரலில் அணியப்பெறும் அணிகள்
கன்னிவாய்க்கால்-வடிகாலின் சிறிய வாய்க்கால்
புள்ளி பார்த்தல்-மதிப்பிடுதல் அழுக்கண்-புகையிலைப் பூச்சி [யின் பெயர்

செல்ல விடை கொடுப்பாய்!

ம. இலெ. தங்கப்பா.

செல்ல விடை கொடுப்பாய்—பெண்ணே
செல்ல விடை கொடுப்பாய்—சிறை
செல்ல விடை கொடுப்பாய்

பன்னெடு நாட்களின் முன் எதிர்பார்த்தது!
பரபரப் படங்கினும் இன்றது வாய்த்தது! —(செல்ல)
கல்வி யிலாதவர் அரியணை ஏறினர்!
கயவர்கள் வல்லதி காரத்தில் மீறினர்!
புல்லியர் கைகளில் நல்லவை தீய்ந்தன
பொறுக்குமோ என்னுளம்? பொறுக்குமோ தீமையை?

தமிழில்மெய் கண்டனம்! தமிழ்க்கென உயிர்த்தோம்!
தமிழ்ப்பகை எதிர்த்தனம்; அழைத்தனர், சிறைக்கே!
அமிழும்நம் படகெனின், தமிழர்தம் பொறுப்பே!
அவர்கடன் பிழைக்கில்நாம் அழிவதும் உவப்பே! —(செல்ல)

என்னைநீ மணந்தபின் அடைந்தது துன்பமே!
என்னினும் எண்ணின்அத் துன்பமும் இன்பமே!
இன்னுநம் வாழ்வெனும் கதைக்கிது பாயிரம்
இருப்பினும் என்உண்மை அன்புனக் காயிரம்! —(செல்ல)

உறவினர் நமக்கிலை; பொருள்வலி வில்லை
உண்மையர் யாவர்க்கும் பொதுவிந்தத் தொல்லை.
அறம்நமைக் காத்திடும் அச்சமெற் கில்லை!
அறிவிலர் ஆட்சிக்குக் குறுகிய தெல்லை! —(செல்ல)

காவல்செய் கடையரோ உளக்கனல் அழிப்பவர்?
கண்ணிலா மடயரோ உள்ளொளி அவிப்பவர்?
பாவலர் வெகுண்டெழின் யாவர்நின் றெதிர்ப்பவர்?
பாரடி நாட்டினில் புரட்சிவந் ததிர்ப்பதை! —(செல்ல)

வழக்கு!

'தென்மொழி ஆசிரியர் குழு'வின் மீது அரசினர் வழக்குத் தொடர்ந்துள்ளனர். வழக்கு கடலூர் வழக்கு மன்றத்தில் நடந்து வருகிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—அமைச்சர்.

வள்ளுவனர் பான்முறை.

புலவர், வித்துவான். ஒண். கி. சந்திரசேகரன். எம்.ஏ.பிடி.,பி.ஓ.எல்.

2. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலினூஉங் கில்லை கேடு''
(4 : அறன்வலியுறுத்தல் : 2)

என்று கூறியவதனானே, அவ்வவர் திறத்து மேற்கொள்ள வேண்டிய அறங்களையெல்லாம் வரைந்து மொழிந்துழி, வகுத்த தொன்றனைச் செய்யா வழிப்படுங் குற்றமும், அதனைச் செய்த வழியுண்டாம் நன்மையும்—அதிகாரந்தோறும் எடுத்துக் காட்டுவராயினர். இக்குறள் வழிமொழிதலாய் எடுத்து மொழிந்ததின் பயன்பாடு இதுவே யாகற்பாற்று மென்ப.

(க) இல்லறத்தார்க் குரைப்புழி'
''பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வித் தலைப்படா தார்''

என்றதனன், விருந்தோம்பாவழிக் குற்றமும்

''அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்''

என்றதனன், விருந்தோம்பியவழி யெய்தும் பயனுங் காட்டினர். இவ்வாறு வருவன பலவுள.

(உ) பொருணூலுடையார்க் குரைப்புழி :
''கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை''

என்றதனன், வெருவந்த செய்தலின் குற்றமும்,

''கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்''

என்றதனன், வெருவந்த செய்யாத வியல்பது நன்மையுங் காட்டினர்.

(ங) ''ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்''—
(4. அறன் வலியுறுத்தல் : 3)

என்றதனனே, தத்தமக்கியலுந் திறத்தானே அறஞ் செய்யுமாறு வகுக்கப்படுதல் பெறப்படும்.

''ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்''—
(68. வினை செயல்வகை : 3)

என்றதூஉம் அதுபற்றியே யாமென்க. ஆகவே,

"காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு"—
(39. இறைமாட்சி : 5)

என்றரசர்க்காம் அறத்தினை யெடுத்தோதினாராயினும்,

"ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி"—(48. வலியறிதல் : 7)

என்று பொருளெல்லைக் கேற்ப ஈதலைச் செய்யுமாறு வற்புறுத்தினர், இஃது ஒல்லும் வகையான் வேந்தர் அறவினை செய்யு நெறியறிவுறுத்தியவாறும்.

"ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து"—
(22. ஒப்புரவு : 10)

என்று ஒப்புரவறிதலாகிய அறத்தினது பெருமையை யுலகிய னெறியின் இன்றியமையாமை காட்டி வலியுறுத்தினாராயினும்

"உளவரை நோக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்"—(48 : வலியறிதல் : 10)

என்றதனான், ஒல்லும் வகையறிந்தே ஒப்புரவாற்றுமாறு வற்புறுத்தினர்.

(ச) "சொல்லும் வாயெல்லாஞ் செயல்" என்று மனம், வாய், மெய்களிடத்து முறையே நல்லெண்ணம், நற்சொல், நற்செயல் என்னும் அறங்களைச் செய்யுமாறு குறிப்பினெறிப் பட வோதினாராகவும், பின்னரும்

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற"—(4. அறன் வலியுறுத்தல் : 4)

என்றோதிய தெற்றுக் கெனின் :

"மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை"— (30. வாய்மை : 5)

என்றதனான் மனமுறமையாக மாசறச் செய்வான் இல்லறத் தாரினும் துறவறத்தாரினும் உயர்ந்தவனாவானென்பதனை வலியுறுத்தற் கென்க.

(அ) பொருட்பாலில் சிற்றினஞ் சேராமை யென்னும் அதிகாரத்துக்கண் மனந்தூய்மையை யுடன்வைத்து மொழிய வேண்டிய நிலைமை யுண்டாகிக் கிடத்தலை நோக்கியேயா மென்க !

"மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்"—
(46. சிற்றினஞ் சேராமை : 6)

மேல் "மாசிலனாதல்" என்று வகுத்ததற்கு வேண்டுங் காரணங்களை யெல்லாம் ஆண்டிடங் கொண்டு விதந்தோது தற்காணப்படும் :

"மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி" (46 : 3)
"மனந்தூயார்க் கெச்சநன் றாகும்" (46 : 6)
"மனநல மன்னுயிர்க் காக்கம்" (46 : 7)
"மனநலத்தி னூகு மறுமை" (46 : 9)

(ஆ) அன்றியும், உலகம் மனத்திற்கே புலனாகுவதாக லின், அம்மனத்தது நலத்தை நூலகத்து இடம் பெற்றுழி யெல்லாம் வலியுறுத்துதல் வாயிலாக வுலகியற்கண் பிழை படா தொழுகு மாற்றினை நிலைநாட்டுதற்கு வேறு நிறுத் தோதினாரெனலுமாம்:

"அறங்கூறு நெஞ்சத்தா னன்மை"—
(19· புறங்கூறாமை : 5)
"நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க் கணி"—
(83. கூடா நட்பு : 4)
"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"—(36. மெய்யுணர்தல் : 4)
"மனத்தது மாசாக மாண்டார் நீராடி"
(28. கூடாவொழுக்கம் : 8)
"மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று"—(83. கூடாநட்பு : 5)
"மனமாண வுட்பகை தோன்றி னினமாண
வேதம் பலவுந் தரும்"—(89. உட்பகை : 4)

என வருவனவற்றான் அறஞ்செய்தற்குரிய வாயில்களுள் மனத்தின் வழித்தாக வேண்டிய சொல்லுஞ் செயலும் நிகழு மாகலானும், மறுமையின்பம் பயத்தற்கு அஃதொன்றே காரணமாகலானும், அதற்கு வேண்டும் நலத்தது இன்றியமை யாமை புலப்படுதற்கு வேறுவைத்தோதினாரென்க.

(ரு) இனி, அறத்தினியல்பு கூறுவார் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்னுமிந் நான்கனோடு விரவி யியன்றது அறமெனப்படா தென்றறிவுறுத்தற்கு.

"அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கும்
இழுக்கா வியன்ற தறம்"—4: அறன்வலியுறுத்தல் : 5)

என்றோதினர். முப்பாலுக்கும் பொதுவாகத் தழீஇக் கோடற்குரிய பொருண்மை யன்றே பாயிரத்துள் இடம் பெறுவது. அற்றாக, அழுக்காறு முதலிய நான்கும் அவ்வாறு பொதுமைப்பட்டு நிற்கச் சாலுமோவெனின், கூறுதும்:

(அ) "விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றி னன்மை பெறின்"—
(17. அழுக்காறாமை : 2)

என்றதனன், ஒருவன் பெறுஞ் சீரிய பேறுகளுள் அழுக்கா றாமை யென்னும் பேற்றினை யொப்பதில்லை யென்று பெறப் படுதலானும்,

(ஆ) "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்"-(37. அவாவறுத்தல்:3)

என்றதனன், மக்கட் செல்வமும், தேவர் தம் செல்வமும் மேன்மேனேக்கக் கீழாதலுடைமையான், வேண்டாமை யொன்றே தனக்கு மேலதொரு செல்வம் பெறப்படாததாய், இருவகை யுலகிலும் தனக்கொப்ப தொன்றில்லையாய் விளங்குதலானும்,

"அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்ருன் வரும்"

(37. அவாவறுத்தல் : 7)

என்றதனன், அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறறஞ் செய்ய வேண்டா; செய்தன வெல்லாம் அறமாமென்பது கருதக் கிடத்தலானும்,

(இ) "உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின்"—

(31. வெகுளாமை : 9)

என்றதனன், இம்மை மறுமை யென்பன வேறு வேறு திறத்தன வாயினும், அவை யெல்லாம் வெகுளாமை யென்ற விவ்வொன்ருனே யெய்தப்படுமென வுணரநிற்றலானும்,

(ஈ) "அரும்பய னாயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்"-

(20. பயனில சொல்லாமை : 8)

என்றதனன், வீடுபேறும் மேனிலைச் செலவும் முதலாய அரும் பயன்களை யாராயும் அறிவுடையார்க்கு இன்னச் சொல் ஆகாவென்று அறிவுறுத்தப்படுதலானும், இவை நான்கனை யுமே யெடுத்தோதினரென்க. இதனன்,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு"

என்றதன்கண் ஓதிய சிறப்பு, செல்வம், ஆக்கம் என்னுஞ் சொற்களான் உணரக்கிடக்கும் பொருண்மைகளை யெல்லாம் புலப்படுத்தியமை யுணரப்படும்.

மேலும், பிறனது செல்வங்கண்டவழியதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்தலான் மனமானது புறத்துப் போதலொன்ருனே பழகிப் பஃறலைப்பட்டு. உடம்பின் பொருட்டுப் பொருள்களை நோக்குதலையே நினையா நிற்கும். இந்நினை வெல்லாம் பொறிபுலன்களைச் செய்திகளானூட்டுதற் பொருட்டே யாகச் செல்லுமாதலின், மேன்மேலும் அவா வளரும். இவ்வவாவானது நிரம்பியல்பிற்றன்ருதலின் மனம் புறத்துலகினும் பொறிகள் மேலும் ஒழியாது கறங்குபோல் சுழன்று மறுகும். அதனன், வெகுளி பிறக்கும். இவ்வெகுளி தான் பிறவுயிர்கள் மேற் செல்லும். அதன் பயனக இன்னச்

திசைச் சொல்

[புலவர். திருமேனி நாகராசன்-தமிழாசிரியர்-காரைக்கால்]

சீராருஞ் செந்தமிழ்ப் பெயர் வினை இடை உரியென நான்கு வகையான் பகுக்கப்படும். இது தமிழிலக் கண முறைமையின் பாற் படும். இனித் தமிழ்ச் சொற் பிறப்பியல்தானும் நான்கு வகைப்படும். அவை:—இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்.

அந் நால்வகைச் சொற்களுள் திசைச்சொல் என்பது செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்தினும் தாம் குறித்தபொருளை விளக்கிவருவனவாம், அவை தத்தம் நிலத்துத்தாம் குறித்த பொருளை விளக்குவதல்லது இயற் சொற் போலப் பொது வகையான் எல்லா நிலத்தும் தம் பொருளை

(முன்பக்கத் தொடர்ச்சி)

சொற்களைக் கூறுதலுண்டாம். அவற்றைக் கூறுதலான் இருமைப் பயன்களு மொருங்கே தப்பும். ஆதலின், சிறப்பும் செல்வமுமாகிய ஆக்கங்களெல்லாம் பெறப்படாவாம். இப்பெறப்படாமை யொழிதற் பொருட்டே அழுக்காறு முதலிய நான்கும் விரவியியன்றது அறமெனப்படாதென்று அறிவுறுத்தினாராகல் வேண்டும்.

இனிப், பொய், குறளை, கடுஞ் சொல், பயனில் சொல் என்னும் நான்கனுள் முன்னையது துறந்தார் மேற்றாகவும், ஏனைய இல்லறத்தார் மேலானவாகவும் வைத்துரைத்தமையால் இன்னாச் சொல்லென்பது இருவகை யறத்தின்கணின் றார்க்கும் பொருந்தும். அழுக்காறு இல்லறத்தார்க்கும், அவா வெகுளிகள் துறவறத்தார்க்கும் கடிதற்குரிய பெருங் குற்றங்களாகக் காட்டினார். இவற்றான், இல்லறத்தார்க்குச் சிறப்பாயதும், துறவறத்தார்க்குச் சிறப்பாயினவும், இருவகை நிலையார்க்கும் பொதுவாயதுமாகிய குற்றங்களை யிம் முறைமையினோதினா ரென்றமைதலுமாம். அற்றாயின், இவை பொருட்பாலகத்துப் பெறப்படாவோ வெனின்: ஆண்டும் பெறப்படுமாற்றினைக் காட்டுதும்:

பொருட்பாலில்: (அ) இன்னாச்சொல் பற்றியவை
"கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்"—

(57. வெருவந்த செய்யாமை : 6)

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்—(37. இறைமாட்சி : 6)

இவ்வாறு வருவன பிறவு முள.

(தொடரும்)

விளக்குவனவல்லவாம். இதனை ஆசிரியர் தொல்காப்பியனாரும்

"செந்தமிழ்சேர் பன்னிருநிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச் சொற்கிளவி"

என்றனர்.

இனி உரையாசிரியராகிய சேனாவரையர், 'பன்னிரு நிலமாவன பொங்கர் நாடு, ஒளி நாடு, தென் பாண்டி நாடு, குட்ட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு அருவா நாடு, அருவா வடதலையெனச் செந்தமிழ் நாட்டுத் தென் கீழ்பான் 'முதலாக வட கீழ்பாலிறுதியாக எண்ணிக் கொள்க" என்றுரைப்பர்.

அவர் தம் கூற்றுப் பொருந்துவ தொன்றன்றாம். என்னை "கொடுந்தமிழ் நிலமாகச் சேனாவரையர் கூறிய பன்னிரு நிலம் பன்னிரண்டாம் நூற்றாண்டிற் கேற்றவையாதலின் தொல் காப்பியர் குறித்தவையாக" [1] என மொழிநூல் வல்லார் ஞா.தேவநேயப் பாவாணர் கூறுமாற்றானறிக.

பிறிதொரு சாரார் [2] "எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமென வேண்டுதலாலும், பன்னிரு நிலமாவன :—குமரியாற்றின் தென் கரைப்பட்ட பழந்தீபமும் கொல்லமும், கூபகமும் சிங்களமும், வையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமும், துளுவமும், குடகமும், குன்றகமும், கிழக்குப்பட்ட கருநாடகமும், வடுகமும், தெலிங்கும், கலிங்கும் என்று கொள்ளப்படும்" என்ப.

பின்னவர் கூற்றும் மறுக்கப்படும். என்னை;

"வட வேங் கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி"

எனவரும் சிறப்புப் பாயிரத்துள் தொல்காப்பியர் காலத் தமிழகத்தின் எல்லைகளாக வரையறுக்கப் படுபவை வடக்கே வேங்கட மலைக்குத் தெற்கும் தெற்கே குமரியாற்றின் வடக்கும் கிழக்கே குண கடலின் மேற்கும் மேற்கே குடகடலின் கிழக்குமாகிய நிலப்பரப்பாகும்.

பின்னும்

"தமிழ்கூறு நல்லுலகத்து"

எனவும்.

"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு"

1. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரை. கழக வெளியீடு. (பக்கம் 207)

எனவும் கூறுதலால் தமிழகத்தின் ஒரு பகுதி சிறப்பு நோக்கிச் செந்தமிழ் நிலமெனக் கருதபட்டமை நன்கு புலனும். அச் செந் தமிழ் நிலம் ஒழித்தொழிந்த தமிழகத்துப் பகுதிகள் அனைத்தும் கொடுந் தமிழ் நில மெனப்படும். கொடுந்தமிழ் வழங்கும் தமிழ கத்தின் அப்பகுதிகள் தாம் பன்னிரு பகுதிகளாக வழங்கப் பட்ட வென்க. ஆதலின் "பன்னிரு நாடாவன தமிழகத்து எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமென வேண்டுவது" ஏற்புடையதன்றாம். தொல்காப்பிய ஆய்வாளராகிய க. வெள்ளை வாரணரும்[1] செந்தமிழ் வழங்கும் தமிழ் நாட்டின் பகுதியவாகிய பன்னிரு நிலங்களினும் எனப் பொருள் கொள்ளுதலே ஆசிரியர் (தொல்காப்பியனார்) கருத்துக்கு ஏற்புடையதாகும். இவ்வாறு கொள்ளாது செந்தமிழ் நாட் டைச் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும் எனப் பழைய வுரை யாசிரியர்கள் பொருள் கொண்டு செந்தமிழ் நிலம் வேறாகவும் அதனைச் சார்ந்த பன்னிரு நிலம் கூறுப" என்றனர்.

தமிழகத்தில் ஆரியர் புகுந்தமையான், அவர்தம் மொழி யும் ஆண்டு இடம் பெறலாயிற்று. அவர் தமது பெருமுயற்சி யால் ஆரியச் சொற்கள் தமிழ் மொழியில் கலக்கத் தலைப்பட் டன. தமிழ்ப் புலவராயினோர் தம் மொழியில் வட சொற்கள் புகாமல் ஏமஞ் செய்யும் முயற்சியில் தளர்வுற்றனர். தமிழ்லக் கணத்தில் வட சொல்லிற்கு இலக்கணம் வகுக்கலாயினர் சமயப் பூசல் தொடங்கவே கலை, சமயம்' அறிவியல், மெய் யறிவியல் போன்றவற்றின் தொடர்புடையவாய வட சொற் கள் தமிழ் இலக்கியங்களில் இடம் பெறலாயின. அப்பொழுது தமிழ் மொழியில் செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற இரு பிரிவு கள் ஏற்படலாயின. செந்தமிழ் என்பது பெரும் பான்மையும் வட சொற்கள் கலவாததாய்ப் புலவர் நாவில் பொருந்தி வள ரவும் கொடுந்தமிழ் என்பது வட சொல்மிக வேற்றுத் திருந் திய மொழிப் பயிற்சி இல்லா எளிய மக்களிடம் நிலை கொள் வதாயிற்று.

"தெலுங்கு கன்னடம் முதலிய திராவிடமொழிகள் முற் காலத்தில் கொடுந்தமிழாய் இருந்தமையின் அவற்றின் சொற் கள் திசைச்சொற்கள் எனப்பட்டன" என்பர் பாவாணர் ஆதலின் கன்னடங் கவின் தெலுங்கு மலையாளம் ஆகிய திரவிடமொழிச் சொற்கள் தமிழின்கண் வந்து வழங்கப் பெறுமாயின் அவையே திசைச் சொற்கள் என அழைக்கப்படும். அல்லாதன அங்ஙனம் அழைக்கப்படா இன்று அம் மொழிகள் வேற்றுச்

1. தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம்.
ஆசிரியர் : க. வெள்ளைவாரணர். (பக்கம் 72)
இரண்டாம் பகுதி.

தொடர்—14.

தொடரோவியம்

போர்மறவனும் காதலும்.

சியார்சு பெர்னர்டு சா. தமிழில்: வழுதி.

உலூக்கா: என்னைப் பாரும். என் எண்ணப்படி நடக்க எனக்கு என்ன உரிமையிருக்கிறது? உமக்கு அறையை ஒழுங்குபடுத்திக் கொடுக்கவேண்டும்; பெருக்க வேண்டும். தூசி துடைக்க வேண்டும்...எதையாவது தூக்கி வரவேண்டும்; சுமக்க வேண்டும். இப்படி உம் வேலையைப் பிறரைச் செய்யச் சொல்வது உமக்கு இழிவாக இல்லை என்றால் அஃது எனக்கு எப்படி இழிவாகும்? ஆனால் (உணர்ச்சியை உள்ளடக்கி)...நான் மட்டும் உருசியப் பேரரசியாக—உலகில் எல்லார்க்கும் முதன்மையாக—இருந்தேனாயின்... ஆ...எனக்குத் துணிவு கிடையாது என்று நீர் கருதினாலும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

சொற்களை ஏற்றுளவாதலின் அவையெலாம் திசைச்சொல் லெனப் படாவென்பதையும் அறிதல் வேண்டும்.

இற்றைக்குத்திசைச் சொல்லைப் பற்றியதோர் வம்பு நிலை தோற்றங்கொண்டுள்ளது. தம்மை நூல்வல்லாராய் எண்ணிக் கொண்ட சிலர்'' ஆங்கிலமொழி அயன்மொழிச் சொற்களை பெருமளவில் ஏற்றுக்கொண்டமையினன்றே சிறந்து விளங்குகின்றது. நந் தமிழும் அங்ஙனம் பிறமொழிச் சொற்களை விரைந்து ஏற்பின் வளர்ச்சியுறும். என்னை; அயன் மொழிச் சொற்களைத் திசைச் சொல்லெனக்கொண்டேற்றல் தமிழிலக்கணமரபாதலின் ''என்ப. அவர் அறியார். எம்மொழிக்கும் தூய்மை என்பது அம்மொழிக்கமைந்த உயிராதலின் தமிழின்கண் பிறமொழிச் சொற்களைத் திசைச்சொற்களெனச் கொண்டு கலத்தல் அமுதொடு நஞ்சுகலந்தன்னதாகும்.
மொழிச் சொற்கள் எல்லாம் திசைச்சொல்லென ய
வழங்கப்படா. என்னை கொடுந்தமிழே திசைச்சொ
ஆசிரியர் கருத்தாதலின் அத்தமிழென்பது தொ
காலத்தில் செந்தமிழ் நிலமென வரையறுக்
ஒழிந்த தமிழகத்துப் பகுதிகளின் மொ
கன்னடம் முதலிய திராவி

கூட—அப்பொழுது பார்க்க வேண்டும்; அப்பொழுது பார்க்க வேண்டும்.

செருசியசு: அப்பொழுது என்ன செய்வீர்கள், மதிப்பிற்குரிய பேரரசியாரே?

உலூக்கா: நான் காதலித்த ஆடவனை மணந்துகொள்வேன். ஐரோப்பாவில் வேறு எந்த அரசிக்கும் அந்தத் துணிவு கிடையாது. நான் உம்மைக் காதலித்தால், நீர் என் நிலைமைக்கு எவ்வளவோ கீழான நிலையில் இருந்தாலும் கூட, எனக்குத் தாழ்வானவரோடு நிகராக ஆவதற்குரிய துணிவு எனக்கு உண்டு. நீர் என்னைக் காதலிக்கிறீர் என்று வைத்துக்கொள்வோம்; உமக்கு அந்தத் துணிவு வருமா? வராது. ஏதோ என்மேல் கொஞ்சம் காதல் அரும்பினாலும் அதை வளரவிடமாட்டீர். அவ்வளவு துணிவிருக்காது. ஏதோ ஒரு செல்வக்குடிப் பெண்ணைத் தான் மணந்துகொள்வீர். மற்றவர்கள் உம்மைப்பற்றி என்ன சொல்வார்களோ என்று உமக்கு அவ்வளவு அச்சம்.

செருசியசு: (துள்ளி எழுந்து) பொய்; விண்மீன்கள் மேல் ஆணை; நான் அப்படியிருக்கமாட்டேன். நான் உன்னைக் காதலித்தால், நான் சார் பேரரசனே ஆனாலும், என்னருகில் உன்னை அரியணையில் ஏற்றிவைப்பேன். நானோ வேரொரு பெண்ணைக் காதலிப்பதை நீ அறிவாய். அவள் உன்னிலும் பன்மடங்கு உயர்நிலையினள். மண்ணுக்கும் விண்ணுக்கும் உள்ள வேறுபாடு உனக்கும் அவளுக்குமிடையில்... உனக்கு அவள் மேல் பொறாமை...

உலூக்கா: நான் பொறாமைகொள்ளக் காரணமே இல்லை. இப்பொழுது அவள் உம்மை ஒருபொழுதும் மணக்கவேமாட்டாள். உம்மிடத்தில் சென்னேனே, அந்த ஆள் திரும்ப வந்துவிட்டான். அவள் அந்த சுவிசுக்காரனைத்தான் மணப்பாள்.

செருசியசு: (உள் நடுங்கி) சுவிசுக்காரனா?

உலூக்கா: உம்மைப் போல் பத்து மடங்கு உயர்ந்தவன் அதன் பிறகு நீர் என்னிடம் வருவீர். நான் உம்மை ...ணக்கமாட்டேன். நீர் எனக்கு ஏற்றவர் அல்லர். (வாயிலை ...த் திரும்புகிறாள்)

...சியசு: (அவள் பின்னால் பாய்ந்து சென்று, ...ர் கைகளில் வலிந்து அணைத்துக் கொண்டு) நான் ...னைக் கொன்றுவிடுவேன்; பின்பு, உன்னை ...வேன்...

... உணர்ச்சியற்று, ஆனால் ... ஒருவேளை உம்மைக்

கொன்றுவிடல்கூடும். காதலில் அவன் உம்மைத் தோற்கடித்துவிட்டான்...போரிலும் தோற்கடித்துவிடக்கூடும்.

செருசியசு: (தொல்லையுற்று) நீ சொன்னால் நான் நம்புவேனா... அவள்!... அவளின் மிகத் தாழ்ந்த எண்ணங்கள்கூட உன் மிக உயர்ந்த எண்ணங்களைவிடச் சிறந்தவையாயினவே—அத்தகையவள்...நான் இல்லாத பொழுது மற்றொருவனுடன் விளையாடக்கூடியவள் என்று நான் நம்புவேனா?

உலூக்கா: இப்பொழுது நான் உம் அணைப்பில் இருக்கிறேன் என்று அந்த சுவிசுக்காரன் அவளிடம் சொன்னால் அதை அவள் நம்புவாள் என்று நினைக்கிறீரா?

செருசியசு: (நம்பிக்கையிழந்த வெறியில்—அவளை விட்டு விட்டு) பாழாய்ப் போக!...பாழாய்ப் போக!...கேலிக்கூத்து! கேலிக் கூத்து!...எங்கு பார்த்தாலும்! நான் நினைக்கும் ஒவ்வொரு நினைவும் நான் செய்யும் ஒவ்வொரு செயலும் கேலிக்கூத்தாக்கப்படுகிறதே! (வெறித்தனமாகத் தன் மார்பில் ஓங்கி அறைந்துகொள்கின்றான்) நான் கோழை, பொய்யன், மூடன்! ஓர் ஆண் மகனைப் போல நான் என்னையே கொன்றுகொள்வதா, அல்லது உயிர் வாழ்ந்து என்னையே நகையாடிக்கொள்வது போல் நடிப்பதா? (அவள் மீண்டும் போகப்பார்க்கின்றாள்) உலூக்கா! (கதவருகில் நிற்கிறாள்.) நினைவில் வைத்துக்கொள்; நீ எனக்குரியவள்.

உலூக்கா: (திரும்பி) இதற்கு என்ன பொருள்?... என்னை இழிவுபடுத்துவதா?

செருசியசு: (ஆணைக் குரலுடன்) அதற்குப் பொருள், நீ என்னைக் காதலிக்கிறாய்...நான் உன்னை இங்கே தோளோடு அணைத்துக் கொண்டேன்; இனியும் அணைத்துக்கொள்ளவும் கொள்வேன் என்பதுதான். அஃது இழிவுபடுத்துவதோ என்னவோ, எனக்குத் தெரியாது ... தெரிந்துகொள்ளவும் அக்கறையில்லை. நீ எப்படி எடுத்துக்கொள்கிறாயோ அப்படியே ஆகட்டும். ஆனால் (வேகாட்டத்துடன்) நான் கோழையாகவோ, விளையாட்டுக்காரனாகவோ மட்டும் இருக்க மாட்டேன். நான் உன்னைக் காதலிக்க நினைத்தால் உன்னை மணந்துகொள்ளவும் துணிவுள்ளவன்தான். பல்கேரியாவே எதிர்த்தாலும் சரி. நான் உன்னை மறுபடியும் எப்பொழுதாவது தொட்டால், என் வருங்கால மணமகளைத் தொட்டதாகவே இருக்கும் என்பதை அறிந்துகொள்.

உலூக்கா: பார்க்கலாம்...உம் வாய்மொழியைக் காப்பாற்றுகிறீரா என்பதை...ஆனால் எச்சரிக்கை! நான் நெடுநாள் காத்திருக்கமாட்டேன்.

செருசியசு: (மீண்டும் கைகளைக் கட்டிக் கொண்டு, அறை நடுவில் அசையாமல் நின்று கொண்டு) ஆம்... பார்க்கத் தான் போகிறோம்... நீ எனக்காகக் காத்திருக்கத்தான் போகிறாய்...

பிளண்டுசிலி கையில் தாள்களுடன், அவைபற்றிய எண்ணங்களில் மூழ்கியவனாய்க் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறான். உலூக்கா வெளியே செல்வதற்கும் அணியமாகின்றாள். அவன் மிசைப்பலகை யருகில் செல்கிறான்... செல்லும் பொழுதே உலூக்காவை ஓரக்கண்ணால் நோக்குகின்றான். செருசியசு தன் இறுக்கமான தோற்றத்தை மாற்றிக்கொள்ளாமல், பிளண்டுசிலியை அசையாமல் உற்று நோக்குகின்றான். உலூக்கா வெளியே செல்கிறாள் கதவை மூடாமலேயே.

பிளண்டுசிலி: தன்னை மறந்த நிலையில், மிசைப்பலகையில் உட்கார்ந்து, தாட்களைக் கீழே வைக்கின்றான்)... அழகான இளம் பெண்ணாயிருக்கிறாளே!

செருசியசு: (கடுமையாக, சற்றும் அசையாமல்) படைஞர் பிளண்டுசிலி!

பிளண்டுசிலி: உம்?

செருசியசு: நீர் எம்மை ஏமாற்றிவிட்டீர். எனக்குப் போட்டியாக வந்துவிட்டீர்...நான் போட்டிகளை விரும்புவதில்லை. ஆறு மணிக்கு, நான் கிளிசூராச் சாலையிலுள்ள பயிற்சி அரங்கில், தனியாகக் குதிரை மேல், கையில் வாளுடன் காத்திருப்பேன். புரிகிறதா?

பிளண்டுசிலி: (திகைத்து நோக்குகிறான், ஆயினும் சற்றும் இனிதே அமர்ந்து கொண்டு) ஓ... மிக்க நன்றி குதிரைப் படைஞனுக்கேற்றாற் போல் நீ சொல்கிறாய். நான் கருவிப் படையைச் சேர்ந்தவன். நான் வருவதாயிருந்தால், தகரி ஒன்றைத்தான் தூக்கிக் கொண்டு வருவேன். இந்த முறை குண்டு கொண்டுவருவதில் தவறு ஏற்பட்டுவிடாது.

செருசியசு (முகம் சிவந்து, ஆனால் பசையற்ற கடுமையுடன்) எச்சரிக்கையாகப் பேசும். இப்படிப்பட்ட அழைப்புகளை விளையாட்டாக நினைக்க விடுவது எங்கள் பல்கேரிய வழக்கம் அன்று.

பிளண்டுசிலி: (ஆர்வச்சூட்டுடன்) பூ! பல்கேரியாவைப் பற்றி என்னிடம் பேசாதே! உங்கட்குப் போர் இடுவது என்றால் என்ன என்றே தெரியாது...சரி நீ விரும்புகிறபடியே இருக்கட்டும். உன் வாளைத்தானே கொண்டுவா. நான் எதிர்நிற்பேன்.

செருசியசு: (தன் எதிரி ஆர்வமுள்ளவனாக இருப்ப தறிந்து அளவு கடந்து உவகை எய்துகிறான்)... நன்று சொன்னாய். நான்-என் சிறந்த குதிரையை இரவலாகத் தரட்டுமா?

பிளண்டுசிலி: வேண்டாம்! உன் குதிரை கேடுகெட்டுப் போக!... இருந்தாலும் நன்றி அப்பனே, நன்றி. (இரெய்னா இறுதியாகச் சொன்ன சொற்களைக் கேட்டுக் கொண்டே வருகிறாள்; நான் நிலத்தில் நின்று கொண்டே உன்னோடு போரிடுவேன். பரிமீதமர்வது ஏதம் மிகுந்தது. முடிந்தால் உன்னைக் கொல்லாமலிருக்கவே விரும்புகின்றேன்.

இரெய்னா: (கவலையுடன் விரைந்து முன்வந்து) செருசியசு, படைஞர் பிளண்டுசிலி சொல்வதை நான் கேட்டேன். நீங்கள் சண்டையிடப் போகின்றீர்கள் என்று தெரிகிறது. எதற்கு அது? (செருசியசு, அமைதியாக அப்பால் திரும்பிக் கனப்பருகில் செல்கின்றான். இரெய்னா தொடர்ந்து பிளண்டுசிலியுடன் பேசுவதைக் கவனிக்கின்றான்) எதைப் பற்றிச் சண்டை?

பிளண்டுசிலி: எனக்குத் தெரியாது. எனக்குச் சொல்லவேயில்லை. நீ குறுக்கிடாமலிருப்பதுதான் நல்லது, பெருமாட்டி! தீங்கு ஏதும் நிகழ்ந்துவிடாது. நான் அடிக்கடி வாள் பயிற்றாசிரியனாக இருந்திருக்கின்றேன். அவரால் என்னை அசைக்க முடியாது. நானும் அவருக்குத் தீங்கு செய்யேன். ஒருவருக்கொருவர் விளக்கம் செய்து கொண்டிருப்பதைவிட இது மேல். காலையில் நான் போய்விடப் போகிறேன். அதன் பிறகு நீ என்னைப் பார்க்கவோ, என்னைப் பற்றிக் கேள்விப்படவோ போவதில்லை. நீங்கள் இருவரும் பூசல் நீங்கி மகிழ்ச்சியாக வாழ்வீர்கள்.

இரெய்னா: (மிகவும் புண்படுத்தப் பெற்று அப்பால் திரும்பி விம்மல் கலந்த குரலில் பேசுகிறாள்) உம்மை மீண்டும் பார்க்க விரும்பியதாக நான் ஒருபொழுதும் கூறியதில்லை.

செருசியசு: (முன்னால் பாய்ந்து) ஆ! இப்பொழுது தெரிந்துவிட்டது!

இரெய்னா: (செருக்குடன்) என்னவாம் தெரிந்துவிட்டது?

செருசியசு: நீ அவனைக் காதலிக்கிறாய்!

இரெய்னா: (பழியஞ்சி) செருசியசு!

செருசியசு: நான் இல்லாத பொழுது அவனோடு காதல் புரியவிடுகிறாய்; அவன் இல்லாத பொழுது என்னை வருங்காலக் கணவன் என்கிறாய்; பிளண்டுசி... இணைப்புறவு உனக்குத் தெரியும். இருந்து... றினாய். இதற்காகத்தான் நான் உன்...

றேனே தவிர, எனக்குக் கிடைக்காதது உனக்குக் கிடைத்து விட்டதே என்பதற்காக அன்று,

பிளண்டுசிலி: (சினத்துடன் துள்ளி எழுந்து) குப்பை! வெறும் புளுகு! எனக்கு ஒன்றும் கிடைத்துவிடவில்லை. ஏன், எனக்கு மணம் ஆகிவிட்டதா இல்லையா என்பதுகூட இந்தப் பெண்ணுக்குத் தெரியாதே!

இரெய்ன: (தன்னை மறந்து) ஓ! (இருக்கையில் குலைந்து வீழ்ந்து) திருமணம் ஆகிவிட்டதா!

செருசியசு: பிளண்டுசிலி, இப்பெருமாட்டிக்கிருக்கும் அக்கறையைப் பார்த்தாயா? மறுப்பதில் பயனில்லை. இரவு நெடுநேரத்துக்குப் பின் அவளின் தனி அறைக்குள் உன்னை அவள் வரவிட்டிருக்கின்ருள். அந்தச் சலுகை உனக்குக் கிடைத்திருக்கின்றது.

பிளண்டுசிலி: (மிகக் காட்டமுடன் குறுக்கிட்டு) உண்மைதான் முட்டாளே, உண்மை! அவள் என்னை வரவிட்டாள்தான்...எப்படி? நான் கைவேட்டெஃத்தை நெற்றிக்கு நேராய் நீட்டியதால் வரவிட்டாள். உன் குதிரைப்படை என்னை விரட்டிக் கொண்டு வந்தது அவள் ஒரு சிறு கூச்ச லிட்டிருந்தால்கூட அவள் மூளையைச் சிதறடித்திருப்பேன்.

செருசியசு: (திகைப்புற்று) பிளண்டுசிலி! இரெய்ன, இஃது உண்மையா?

இரெய்ன: (சினம் கலந்த பெருமிதத்துடன் எழுந்து)... என்னை இழிவுபடுத்த என்ன துணிச்சல்! என்ன துணிச்சல்!

பிளண்டுசிலி: மன்னிப்புக்கேள், அப்பனே மன்னிப்புக் கேள். (மீண்டும் தன் இருக்கையில் அமர்கிருன்)

செருசியசு (பழைய, அளவோடியைந்த அழுத்தத்துடன், கைகளைக் கட்டிக் கொண்டு) நான் ஒரு பொழுதும் மன்னிப் புக் கேட்பதில்லை.

இரெய்ன: (உணர்ச்சிப் படபடப்புடன்) இஃது உம் முடைய அந்த நண்பனின் வேலைதான், பிளண்டுசிலி. அவன்தான் என்னைப்பற்றி இந்தப் பொல்லாத கதையைக் கட்டிப் பரப்பிக் கொண்டிருக்கின்ருன்.

பிளண்டுசிலி: இல்லை; அவன் இறந்துவிட்டான்; உயி ருடன் கொளுத்தப்பட்டுவிட்டான்.

இரெய்ன: (அதிர்ச்சியுற்று நின்று) உயிருடன் கொளுத் [illegible]டு விட்டான!

[illegible]சிலி: மரக்கட்டைகளின் நடுவேயிருக்கையில் [illegible]டுவிட்டான், வெளியே நகர்ந்து வர முடிய

வில்லை. உங்கள் ஆட்களின் குண்டுகளால் மரக்கட்டைகள் தீப்பற்றிக் கொண்டன. அவனும் அவனுடன் சேர்ந்த ஆறு பெயர்களும் நெருப்பில் சிக்கி எரிந்து போனார்கள்.

இரெய்னு : ஐயோ! எவ்வளவு கொடுமை!

செருசியசு : அதுமட்டுமா! எவ்வளவு பகடிக்கூத்து! போராம் போர்! நாட்டுப்பற்றுளரும், மறவர்களும் கனவு காணும் போர்! இஃது ஓர் ஏமாற்று, பிளண்டுசிலி. ஒரு பசப்பல்! உள்ளீடற்ற போலி, காதலைப் போல!

இரெய்னு . (புண்படுத்தப் பெற்று) காதலைப் போலவா! என் முன்னுல் நீர் இதைக் கூறுகிறீர்!

பிளண்டுசிலி : சரி, சாரனுபு, அந்தச் செய்திதான் விளக்கப்பட்டுவிட்டதே!

செருசியசு : ஆமாம். உள்ளீடற்ற போலிதான், நான் கூறுகிறேன். வேட்டெஃக முனையில் நடந்தது தவிர வேறெது வுமே உங்களிடையில் நடந்திருக்கவில்லை என்றால், நீ மீண்டும் இங்கு வந்திருப்பாயா? ஏதோ எரிந்து போன உன் நண்பன்தான் கூறியிருக்க வேண்டும் என்று இரெய்னு நினைத்தது தவறு, அவன் ஒன்றும் எனக்குக் கூறவில்லை.

இரெய்னு : அப்படியானால் வேறு யார்? (சடக்கென உண்மையை உய்த்துணர்ந்து) ஆ! உலூக்கா! என் பணிப் பெண்! என் வேலைக்காரி! இன்று காலை முழுவதும் நீங்கள் அவளோடுதான் இருந்தீர்கள்! ஆ! இப்பொழுது புரிகிறது! ஐயோ!...என்ன செயல் செய்துவிட்டேன்! இப்படிப்பட்ட தெய்வத்தையா நான் இதுவரை வணங்கி வந்திருக்கிறேன்! (அவள் மயக்கம் தெளிதலைக் கண்டு சுவைத்துக் கொண்டே, அவள் பார்வையை எதிர்நோக்குகிருன். அவள் மேலும் சின முற்று, அவன் அருகில் நெருங்கி, தாழ்ந்த, ஆனல் அழுத்த மான குரலில் பேசுகின்றுள் :) நான் மாடிக்குப் போனவுடனே பலகணி வழியாகத் திரும்பிப் பார்த்தேன் என்பது உங்கட் குத் தெரியுமா? என் தெய்வத்தை மீண்டும் ஒருமுறை பாரக்கலாம் என்றுதான். அப்பொழுது நான் கண்ட ஒரு காட்சி எனக்கு அப்பொழுது புரியவில்லை. இப்பொழுது தெரிகிறது, நீங்கள் அவளோடு காதல் புரிந்து கொண்டிருந் திருக்கின்றீர்கள் என்று.

செருசியசு : (கடுமை கலந்த நகைச்சுவையுடன்) நீ அதைப் பார்த்தாய்?

இரெய்னு : நன்றுகப் பார்த்தேன். (அவள் திரும்பி, நடுப்பலகணியின் கீழாக இருக்கையில் போய் வீழ்கின்றுள், ஓய்ந்து போய்.)

செருசியசு: இரெய்ன, நம் காதல் கதை முடிந்து விட்டது. வாழ்க்கையே ஒரு நாடகம்.

பிளண்டுசிவி: (இரெய்னவிடத்தில், குறும்புடன்) பார்; அவன் தன்னைத் தானே கண்டு கொண்டுவிட்டான்.

செருசியசு: (அவன்பால் சென்று) பிளண்டுசிவி, நீ முதலில் என்னை முட்டாள் என்று அழைக்கவிட்டுவிட்டேன். இப்பொழுது நீ என்னைக் கோழை என்றுகூட அழைக்கலாம். நான் உன்னோடு சண்டையிட மறுக்கின்றேன். ஏன் தெரியுமா?

பிளண்டுசிவி: தெரியாது. ஆனல் அதுபற்றிக் கவலையில்லை. நீ போர் முழக்கம் முழங்கிய பொழுதே நான் காரணம் கேட்க விரும்பவில்லை. —தொடரும்.

வையாபுரி வகைகள்!

தென்மொழியில் இத்தலைப்புள்ள தொடர் கட்டுரை ஒன்று விரைவில் தொடரவிருக்கின்றது. தமிழன்பர்களும் தமிழ் ஆசிரியர்களும், மாணவர்களும், தமிழ் மன்றங்களும் ஆங்காங்குள்ள தமிழ்க் கேடர்களையும்; தமிழர்க்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தீங்கு செய்யும் தமிழ்க் கோடாரிக்காம்புகளைப் பற்றியும், அவர்களின் பெயர், முகவரி, இடம், பணி முதலிய விளக்கங்களுடன்; அவர்கள் தமிழ்க்குச் செய்துவரும் கேடுகளைப் பற்றியும் விரிவாகத் தென்மொழிக்கு எழுதி விடுக்க வேண்டுகின்றோம். செய்திகளை விடுப்பார்தம், கையொப்பத்துடன் முழு முகவரியும் கொடுத்தல் வேண்டும். அவ்வாறின்றி வரும் செய்திகள் கவனிக்கப்படா. விடுப்பார் பெயரும் முகவரியும் அவர் விரும்பினலன்றி வெளிப்படுத்தப் பெரு. —பெருஞ்சித்திரன்.

கழகமும்......தொண்டும்......

ஓர் அமைப்பு அல்லது கழகம் என்பது, இப்பருவுலகுக்குரியதன்று. உண்மையினை உணர்தலே அனைத்தினும் பெரிதாக மதிக்கும் தன்மை உடைய, தன்னலமற்ற, பெருந்தகைமையும், அதனை இயக்கும் ஒரே ஆற்றல் தொண்டு வேட்கையும், துறவும், உண்மையான மக்களன்புமேயாகும். செய்ய வேண்டுவது வினையே. அவற்றின் விளைவுகளைப் பற்றிக் கவலை வேண்டுவதில்லை. பற்றற்ற நிலையிற் செய்யும் வினையே உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும். இத்தகைய வினைகளைச் சிறப்புச் செய்வதற்கு ஓர் அமைப்பு வேண்டும். அவ்வளவுதான். அதை விடுத்து, அமைப்புக்கென்று தனி மதிப்பு எதுவும் இல்லை.

—அமெரிக்காவில் விவேகானந்தர் ஆற்றிய உரையொன்றின் சாரம்—